Vol.7, Issue 8 | Annual Subscription ₹480
Rotary News, January 2025, Chennai

ஜனவரி 2025

@NewsRotary /RotaryNewsIndia

# ரோட்டரி நியூஸ்


இந்தியா

www.rotarynewsonline.org



Rotary

Rotary District 3212



THE MAGIC OF ROTARY






# RYLA

A CSR initiative of V.V.V & SONS Edible Oils Ltd.

## START YOUR BUSINESS JOURNEY IN 3500 MINUTES

**INVESTMENT Rs.3500 Only**

(Incl. Accommodation / Food / T-Shirt / Certification / E-Book / CREA Programs)

*Terms & Conditions Apply

Join RYLA

## BATCH 43.0

17th, 18th & 19th JAN 2025

## STOP WORRYING ABOUT JOB(S); START PRODUCING JOB(S);

The 3 DAYS training workshop covers end-to-end journey of an Entrepreneur. The participants get benefitted right from identifying their best fi business, business processes, investment opportunities, Business Styles, Marketing & Selling, Schemes & Systems, supplemented with necessary skills to sustain as an Entrepreneur. Each episode will have a POWER TALK session by a top industrialist /businessman, who share their experiences, best practices and knowledge with the participants

IDHAYAM
SAY IDHAYAM • SPELL HEALTH

PUNCH PG GURUKULAM

## 1274 TRAINED
## 226 STARTERS
## FLY TO SINGAPORE

As a part of that program, we select 02 outstanding participants from each batch and sponsor them for a Five Days - Four Nights visit to Singapore (Airport-to-Airport Free), to learn different business processes.

**CONTACT**
94431 66650
94433 67248

**VENUE**
Hari's Hotel
NH 44, Near Tirumangalam Toll Plaza, Kappalur, Thirumangalam, Madurai

Powered by Srinidhi Building Sustainable Relationship

K.V. Ramaswamy MEMORIAL TRUST

LEKHA ads/Jan 25/Rotary/FIW

ADVT.

# உள்ளே



12
மூன்றாம் உலகப் போர் தொடங்கி விட்டது... மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையே



18
உறுப்பினர் சரிவை தடுக்க வேண்டும்



24
அடுத்த ரோட்டரி அமைதி மையம் புனே அல்லது சியோலில்



40
மாநாட்டின் சுவாரஸ்யமான தருணங்கள்



48
ஆதரவற்ற பெண்களை ஆதரிக்கும் RC தில்லி மயூர் விகார்



52
ரோட்டரி உதவியால் உயிர்பெற்ற உறைவிடப் பள்ளி



54
விவசாயிகள்-இந்த மும்பை சங்கத்தின் முன்னுரிமை

Rotary


A publication of Rotary Global Media Network

**மின்னிதழ் கட்டணம் குறைப்பு**

ஜூலை 1, 2024 முதல் எங்கள் மின் பதிப்பு சந்தா ₹420-லிருந்து ₹324-ஆக குறைக்கப்பட்டுள்ளது.

## கவர்ச்சிகரமான அட்டைப் படங்கள்

*நவம்பர் இதழில் ரத்தன் டாடாவின் அட்டைப்படமும் அவரது இரங்கல் கட்டுரையும் நன்றாக இருந்தன. அவரது குழந்தைப் பருவம் மற்றும் கல்விப் பின்னணி, எளிமை மற்றும் கருணையுடன் அவர் வாழ்ந்த வாழ்கை மற்றும் அவரது தொண்டு பற்றிய விவரங்கள் நன்கு விளக்கப்பட்டுள்ளன. அவரது நேர்மை, அறிவின் ஆழம் மற்றும் அவரது பழம்பெரும் மரியாதை ஆகியவை அற்புதமானவை. அவர் ஒரு ஆர்ச் கிளம்ப் உறுப்பினர் என்பதை அறிவதில் மகிழ்ச்சி.*




*டிசம்பர் இதழில் ஒரு அங்கன்வாடியின் கவர்ச்சிகரமான அட்டைப் படம் இருந்தது.* RID 3012-*க்கு பாராட்டுக்கள்,* AI *உட்பட தொழில்நுட்பத்தின் பல்வேறு அம்சங்களை அங்கன்வாடிகளில் பயன்படுத்துவதன் மூலம் பின்தங்கிய குழந்தைகள் அர்த்தமுள்ள அனுபவத்தைப் பெறுவார்கள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சரியான சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்து கிடைக்கும். கல்வி பாடங்கள், வினாடி வினா, விளையாட்டுப் பொருட்கள், கவிதைகள் மற்றும் ஜிங்கிள்கள் ஆகியவற்றை கொண்ட டேஷ்போர்டு குழந்தைகளின் ஆர்வத்தைத் தூண்டும்.*

K M K *மூர்த்தி,* RC *செகந்திராபாத்* — D 3150

*நவம்பர் இதழில் மறைந்த தொழிலதிபர் ரத்தன் டாடா பற்றிய ஆசிரியரின் குறிப்பு மற்றும் அட்டைப்படத்தை நான் மிகவும் பாராட்டுகிறேன். முகப்புக் கட்டுரையில் உள்ள படங்கள் அற்புதம்.* RIPE *மரியோ டி கமார்கோவின் நேர்காணல் படிப்பதற்கு சுவாரஸ்யமாக இருந்தது, இது உண்மையில் பாதுகாக்கப்பட வேண்டிய சேகரிப்பாளரின் பொக்கிஷம். ரோட்டேரியர்களாக,* TRF *மூலம் உலகளாவிய சமூகங்களுக்கு சேவை செய்வதில் பெருமை கொள்கிறோம்.*

*சௌமித்ரா சக்ரவர்த்தி,* RC *கல்கத்தா யுனிவர்ஸ்* — D 3291

*ரோட்டரி நியூஸின் அட்டைப் பக்கத்தில் மறைந்த ரத்தன் டாடாவின் படத்தைப் பார்த்து மகிழ்ந்தேன். ஆசிரியரின் குறிப்பு மற்றும் முகப்புக் கட்டுரையைப் படித்த பிறகு, அவரது வாழ்க்கையின் பல புதிய அம்சங்கள் எனக்குத் தெரியவந்தன. மற்ற பத்திரிக்கைகள், தொலைக்காட்சி சேனல்கள் மற்றும் நாளிதழ்களில் இல்லாத தகவல்கள் இந்த கட்டுரையில் காணப்பட்டன. போராட்டங்கள், எதிர்ப்புகள், அவமானங்கள், தோல்விகள் ஆகியவை ரத்தன் டாடாவால் வெற்றியின் படிக் கட்டுகளாக மாற்றப்பட்டன. வாழ்க்கையில் ஏற்படும் சவால்களை எதிர்கொள்ளும் வகையில் கவனம் மற்றும் நெகிழ்வுத்தன்மையுடன் இருப்பதற்கு அவருடைய வாழ்க்கை நமக்குக் கற்றுக்கொடுக்கிறது. கட்டுரையில் இருந்த படங்கள் அதை ஒரு ஆர்வமூட்டும் வாசிப்பாக மாற்றுகின்றன. டாடா ஒரு* AKS *உறுப்பினர் என்பதையும் தெரிந்து கொண்டேன். வெர்ட்ஸ்வேர்ல்ட் கட்டுரை நன்றாக இருந்தது.*

*சஞ்சய் பாரி,* RC *சோப்டா* — D 3030

*ரத்தன் டாடாவின் அட்டைப் படம் சிறப்பு. மேலும், நிஜவாழ்க்கை ஹீரோக்கள் என்ற ஆசிரியரின் பக்கம் பாராட்டுக்குரியது.*

*டேனியல் சிட்டிலப்பிலி,* RC *கலூர்* — D 3201

RID 3040, *மாநில அரசின் ஆதரவுடன் எழுத்தறிவின்மையை அகற்ற மத்தியப் பிரதேசத்தில் ஒரு பாராட்டத்தக்க திட்டத்தைத் தொடங்கியுள்ளது. அக்ஷர் போதி என்ற புத்தகம் படிப்பறிவற்றவர்களை அடிப்படைக் கல்வியைப் பெற தூண்டும். இதற்குப் பிறகு, அவர்கள் கற்றலின் மற்றொரு நிலைக்கு சென்று, எழுத்தறிவு பெறுவார்கள். மற்ற* RI *மாவட்டங்கள்* RID 3040-*ன் இந்த உதாரணத்தைப் பின்பற்றி* 100 *சதவீத எழுத்தறிவைக் கொண்டுவரலாம். சிறந்த எழுத்தறிவு விகிதங்கள் மூலம், நாடு முன்னேற்றத்தை அடைய முடியும்.*

S *மோகன்,* RC *மதுரை வெஸ்ட்* — D 3000

### உறுப்பினர் சரிவு

ஆசிரியர் ரஷீதாவின் கட்டுரையான "உலகளாவிய உறுப்பினர் எண்ணிக்கையில் திடுக்கிடும் வீழ்ச்சி" (நவம்பர் இதழ்) ரோட்டரி தலைவர்களின் கண்களைத் திறக்கும் வகையில் இருந்தது. பெரும்பாலான RI தலைவர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் அமெரிக்காவைச் சேர்ந்த வர்கள், அதன் தலைமையகமும் எவன்ஸ்டனில் உள்ளது. ரோட்டரி பிறந்த இடத்தில் நமது உறுப்பினர் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்து வருவது கவலைக்குரியது.

டோமி ஈபன், RC அலப்பி — D 3211

எங்கள் சங்கத் திட்டங்களைப் பற்றிய உங்களின் சிறந்த கவரேஜ், RC புனே சென்ட்ரல் எதைக் குறிக்கிறது என்பதன் சாரத்தை உண்மையாகப் படம்பிடித்துள்ளது.

புதிய வடிவமைப்பு மற்றும் தளவமைப்பு பார்வையை ஈர்க்கும் வகையில் மட்டுமல்லாமல், ஒட்டுமொத்த வாசிப்புத்திறன் மற்றும் இதழின் தாக்கத்தை மேம்படுத்துகிறது. நிறைய சிந்தனை மற்றும் படைப்பாற்றல் ஒவ்வொரு விவரத்திற்கும் கொடுக்கப்பட் டுள்ளது, மேலும் உங்கள் குழுவின் அர்ப்பணிப்புக்கு பாராட்டுக்கள்.

மதுசூதன் ரதி, RC புனே சென்ட்ரல் — D 3131

மாதந்தோறும் வெளியிடப்படும் மாவட்ட வாரியான TRF

*உங்கள் டிசம்பர் இதழில் சுவாரஸ்யமான கட்டுரைகள் உள்ளன. ஒரு கட்டுரை கொடுப்பதின் தத்துவம் பற்றி பேசுகிறது. அனைத்து ரோட்டேரியர்களும் கொடுக்கும் தத்துவத்தை பின்பற்ற வேண்டும், ஏனெனில் அது கர்மா கோட்பாட்டின் அடிப்படையில் உள்ளது. நாம் எவ்வளவு அதிகமாகக் கொடுக்கிறோமோ, அவ்வளவு அதிகமாகப் பெறுகிறோம்.*

*பசுமையான ஒடிசாவுக்காக பாடுபடுவோம் என்ற கட்டுரை விதைப்பந்துகள் தயாரிப்பது பற்றியது. எங்கள் சங்கம் கடந்த நான்கு ஆண்டுகளாக பள்ளி குழந்தைகளுடன் இணைந்து சாலையோரப் பகுதிகள், தரிசுப் பாதைகள் மற்றும் காய்ந்த நகர்ப்புற பகுதிகளில் விதைப் பந்துகளை வீசி இந்தத் திட்டத்தை மேற்கொண்டுள்ளது. ஒவ்வொரு சங்கமும் இந்தியாவை பசுமையாக்கும் இப்பணியை ஆதரிக்க பெரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.*

*பியூஷ் தோஷி, RC பேலூர் — D 3291*

*ஒரு புதிய முயற்சியாக, RID 3233 சென்னையில் உள்ள அனைத்து சங்கங்களின் முந்தைய தலைவர்களுக்கான ஒரு மாநாட்டை "கலங்கரை விளக்கு" என்ற தலைப்பில் ஏற்பாடு செய்தது. DG மகாவீர் போத்திரா, முந்தைய தலைவர்களின் வழிகாட்டுதலின் பங்கு குறித்து நினைவுகூர்ந்தார். இந்த நிகழ்வு அவர்களுடைய முயற்சிகளுக்கு பாராட்டாக நடத்தப்பட்டது. இந்த அற்புதமான மாநாட்டை ஏற்பாடு செய்த RID 3233-க்கு வாழ்த்துகள்.*

*N ஜெகதீசன், RC ஏலூர் — D 3020*

*டிசம்பர் இதழில், செயற்கை நுண்ணறிவுடன் ஒருங்கிணைந்த முதல் அங்கன்வாடி என்ற முகப்புக் கட்டுரை சிறப்பாக இருந்தது. ஏழைக் குழந்தைகளின் கற்றல் திறன்களை நன்றாகப் புரிந்துகொள்வதற்காக AI நுட்பங்கள் பின்பற்றப்படுவதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன்.*

*அதேபோல், RC ஜூபிலி ஹில்ஸ், RID 3150, (நவம்பர் இதழ்) ஜார்க்கண்டில் உள்ள பகுர் கிராமத்தில் உள்ள மாணவர்களுக்கு சைக்கிள்களை வழங்குவதன் மூலம் அவர்கள் பள்ளிக்குச் சென்று வருவதற்கு பயனுள்ள வழியை வழங்கியுள்ளது. ஆனால், மழைக்காலங்களில் அவர்களுக்கான பொதுவான போக்குவரத்தை சங்கம் ஏற்பாடு செய்திருந்தால் இந்த முயற்சி மிகவும் பயனுள்ளதாக இருந்திருக்கும்.*

*நிரஞ்சன் கர், RC புவனேஸ்வர் — D 3262*

பங்களிப்புகள் மற்றும் உறுப்பினர் சுருக்கம் மிகவும் தகவலளிக்கும் வகையில் உள்ளது. அதேபோல், RI தெற்காசிய அலுவலகம், RI கட்டணங்கள் வசூலிக்கும் செயல்பாடு மற்றும் வசூல் தொடர்பான செலவினங்களை ஆறுமாதத்திற்கு ஒருமுறை நம் ரோட்டரி இதழ் மூலம் அனைத்து உறுப்பினர்களுக்கும் வழங்கலாம்.

ஜேக்கப் மேத்யூ
RC எருமேலி — D 3211

Have you read **Rotary News Plus?**

This online publication is sent to the e-mail ID of every subscribing member. Read **Rotary News Plus** on our website *www.rotarynewsonline.org*

## சமூக ஊடக பக்கங்கள் பற்றிய தகவல்

*பல ரோட்டரி சங்கம் மற்றும் மாவட்ட பேஸ்புக் பக்கங்கள் மற்றும் இன்ஸ்டாகிராம் கணக்குகள் முன்னறிவிப்பின்றி மெட்டாவால் முடப்பட்டன. RI மெட்டாவுடன் இணைந்து தீர்வு கண்ட பிறகு, பல ரோட்டரி தொடர்பான பக்கங்கள் மீண்டும் செயல்பட தொடங்கின.*

*உங்கள் சங்கங்கள்/மாவட்டங்களின் சமூக ஊடகப் பக்கங்கள் முடப்பட்டிருந்தால், இந்த இணைப்பில் உள்ள படிவத்தை பூர்த்தி செய்யுவும் - on.rotary.org/fbissue - மற்றும் மெட்டாவின் "அனுமதி பட்டியலில்" அவர்களின் பிராண்ட் உரிமைகள் பாதுகாப்புக் கருவியில் பக்கங்களை சேர்க்கச் சமர்ப்பிக்கவும். RI இதற்காக நடவடிக்கை எடுக்கும். நிர்வாகிகள் குறிப்பிட்ட வழிமுறைகளுடன் (மெட்டாவின் வழிகாட்டுதலில் இருந்து) மின்னஞ்சலையும், அவர்களின் மறுசீரமைப்பு முயற்சி களுக்கு ஆதரவாக RI இடமிருந்து அதிகாரப்பூர்வ கடிதத்தையும் பெறுவார்கள்.*

தங்கள் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன. மேலும் உங்கள் சங்கத்தின் நல திட்டங்கள் புகைப்படங்களுடன் rushbhagat@gmail.com அல்லது rotarynewsmagazine@gmail.com என்ற மின்னஞ்சலிற்கு அனுப்பலாம். WHATSAPP செய்திகள் ஏற்றுக்கொள்ளபடமாட்டாது. மேலும் ரோட்டரி செய்திகளை எங்கள் www.rotarynewsonline.org என்னும் இணைய தளத்தில் **Rotary News Plus** என்னும் இதழில் காணலாம்.

RI தலைவரிடமிருந்து...

# சங்கங்களை கலகலப்பாக ஆக்குங்கள்




மெக்மர்ரெ, பென்சில்வேனியா-வில் உள்ள என் இல்லச் சங்கத்தின் கூட்டங்களுக்குச் செல்லும்போதெல்லாம், என் முகத்தில் ஒரு மகிழ்ச்சிச் சிரிப்பு இருக்கும்.

சில ஆண்டுகளுக்குமுன், ஒருவர் கூட்டத்துக்குக் காலந்தாழ்த்தி வந்தார். அவரைத் திட்டுவதற்குப் பதிலாக, நாங்கள் அவரை வாழ்த்தினோம். அதன்பிறகு, உறுப்பினர்கள் கூட்டங்களுக்கு வரும் போது அவர்களைக் கைதட்டி வரவேற்பது எங்கள் மரபாகி விட்டது. இப்படிச் சிலர் நம்மை வரவேற்றால் நாம் மகிழ்ந்து சிரிக்காமல் இருப்போமா?

உறுப்பினர்களோடு ஊடாடவும் அவர்களைத் தக்கவைத்துக்கொள்ளவும் ஆற்றல் மிக்க ஒரு வழி, துடிப்பான, வரவேற்கிற, மகிழ்ச்சியான சங்கத்தை நடத்துவதுதான்.

உங்களை ரோட்டரிக்கு இழுத்தது எது என்று சிந்தித்துப் பாருங்கள். அநேகமாக, அது வெறும் சேவைத் திட்டங்களாக, அல்லது, தொழில்முறை வலைப்பின்னலை உருவாக்குவதாக இருக்காது. மக்கள்தான் உங்களை ஈர்த்திருப்பார்கள், அதாவது, நட்புகள், பகிர்ந்துகொள்ளப்பட்ட சிரிப்பு, பொது நோக்கத்துக்காக உழைக்கும் மகிழ்ச்சி! அதற்காகத் தான் நாம் அங்கு திரும்பித் திரும்பி வருகிறோம்.

உங்கள் கூட்டங்களில் நீங்கள் அந்த மகிழ்ச்சி உணர்வைத் தேடுகிறீர்கள் என்றால், உங்களையும் உங்கள் சக உறுப்பினர்களையும் சில கடினமான கேள்விகளைக் கேட்க அஞ்சாதீர்கள். ஒருவேளை, நீங்கள் வெளி ஆளாக இருந்தால், இந்தச் சங்கத்தில் சேர்வீர்களா?

உங்கள் சங்கத்தின் உறுப்பினர்கள் தாங்கள் இந்தச் சங்கத்திற்குச் சொந்தமானவர்கள் என்று உணர்கிறார்களா? உங்கள் கூட்டங்கள் மகிழ்ச்சியாக உள்ளனவா? இல்லாவிட்டால், நீங்கள் ஒன்றாகச் சேர்ந்து அவற்றை மகிழ்ச்சியாக மாற்றுவது எப்படி?

உங்கள் அடுத்த கூட்டத்தில் அல்லது நிகழ்வில் புதிதாக எதையாவது முயன்று பாருங்கள், சில கூடுதல் மகிழ்ச்சிச் சிரிப்புகளைக் கொண்டு வாருங்கள். எளிய விஷயங்கள்தான் நீடித்த பிணைப்பு களை உருவாக்குகின்றன, சங்கங்களை எல்லாருக்கும் பிடித்தவையாக்குகின்றன.

இப்படிச் சரியான திசையில் நகரும் ஒரு சங்கத்தின் எடுத்துக்காட்டு, இதோ. ஜப்பானில் உள்ள ஃபுகுஷிமா ரோட்டரி சங்கம் 2021 முதல் சமூக மகிழ்ச்சியுடன் சுற்றுச்சூழல் பொறுப்பை இணைத்து வருகிறது. ஜப்பானில் மக்கள் குப்பைகளை எடுத்து நீக்குவதை ஸ்போகாமி என்ற விளையாட்டாக மாற்றி விட்டார்கள். இந்தச் சங்கம் ஒவ்வோர் ஆண்டும் அப்படி ஒரு போட்டியை நடத்துகிறது. இந்த ஆண்டு, 400க்கும் மேற்பட்டவர்கள் இதில் பங்கேற்றார்கள், ஒருவரை ஒருவர் ஊக்கப்படுத்தியபடி அனைவரும் சேர்ந்து தங்கள் சமூகத்தை மேம்படுத்தினார்கள்.

நாம் செய்வது நமக்குப் பிடித்திருந்தால், அந்த ஆற்றல் பிறருக்கும் தொற்றிக்கொள்ளும். இதுதான் புதிய உறுப்பினர்களை ஈர்க்கும், நம் சங்கங்களை வலுவாக, ஊடாடுபவையாக இருக்கச்செய்யும். இது தான் நாம் இந்தச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று மக்களை நினைக்கவைக்கும்.

தக்கவைத்தலும் பண்பாடும் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. நம் சங்கப் பண்பாடு நலமாக ஆக, அதே அளவுக்கு உறுப்பினர்கள் இங்கு தொடர்வது மேம்படும். நம் சங்கப் பண்பாட்டை மேம்படுத்துவதற்கும் உறுப்பினர் ஊடாடலை ஆழமாக்குவதற்குமான ஊக்கத்துக்கு ரோட்டரி இதழ் ஒரு சிறந்த வளமாகும். நீங்கள் இந்தப் பக்கங்களில் உள்ள கதைகள், வியூகங்களை ஆராயவேண்டும், மற்ற சங்கங்களின் வெற்றிகளிலிருந்து ஊக்கம் பெற்று உங்களுக்கான யோசனைகளைக் கண்டறிய வேண்டும்.

நாம் ஒன்றாகச் சேர்ந்தால், இன்னும் ஊடாடுகிற, மகிழ்ச்சியான, உள்ளடக்கிய, உறுப்பினர்கள் அதில் பங்குபெறுவதைப் பெருமையாக நினைக்கிற ரோட்டரியை உருவாக்கலாம். நாம் புதுப்பிக்கப் பட்ட உறுதிப்பாட்டுடனும் ஊக்கத்துடனும் தொடர்ந்து பாடுபடுவோம், ரோட்டரியின் மாயாஜாலத்தை வாழ்வோம்.

**ஸ்டெஃப்னி A அர்ச்சிக்**
தலைவர், ரோட்டரி இன்டர்நேஷனல்

படம்: கிறிஸ்ட்டின் ஆம்ப்ரஸ்டர்

ஆசிரியர் பக்கம்



# பிரமிக்க வைத்த கொச்சி மாநாடு

RI இயக்குநர் அனிருதா ராய்சௌத்ரி மற்றும் PDG ஜான் டேனியல் தலைமையில் நடைபெற்ற கொச்சி மண்டல மாநாட்டின் சிறப்புகளை கடைசியாக குறிப்பிடலாம் என்று இருந்தேன். நிகழ்ச்சியின் நிறைவுநாளன்று மாநாட்டுப் பிரதிநிதிகள் அனைவருக்கும் சுவையான, கேரள பாரம்பரிய முறைப்படி “சத்யா விருந்து” வழங்கப்பட்டது. ஒருவருக்கு உட்கார்ந்து சாப்பிட்டால் தான் நிம்மதி. ஒரு சைனா பிளேட்டில், உணவை வாங்கிக் கொண்டு, ஸ்பூன் மற்றும் முள் கரண்டியால் நின்று கொண்டே சமாளித்து சாப்பிடுவதில் என்ன வேடிக்கை இருக்கிறது? தலை வாழை இலையில் பரிமாறப்படும் சுவையான உணவுகளை இலையின் நறுமணத்துடன் இணைந்து சாப்பிடும்போது ஏற்படும் திருப்தி, பிளேட்டில் சாப்பிடுவதில் இருக்காது. பரிமாறப்பட்ட உணவு சுவையாக இருந்ததுடன் அதை அன்புடன் பரிமாறிய விதமும் பங்கேற்பாளர்களை கவர்ந்தது. உணவு பரிமாறிய பெண்கள், ஒவ்வொருவரின் இலையையும் பார்த்துப் பார்த்து தேவையான உணவை புன்னகையுடன் பரிமாறினார்கள். ஒவ்வொரு விருந்தினரையும் மாப்பிள்ளை போல் நினைத்து உபசரித்தார்கள்.

எந்த ஒரு பெரிய நிகழ்வானாலும் அதன் முக்கிய அம்சம் விருந்து. அதை கொச்சி குழுவினர் நிறைவாகவே செய்திருந்தனர். இதர ஏற்பாடுகளையும் அவர்கள் சிறப்பாகவே செய்திருந்தனர். உதாரணமாக, ரோட்டரி நிகழ்வுகளில் பெரும் தலைவலியாக இருப்பது போக்குவரத்து வசதி. கொச்சி நிகழ்ச்சியில் 1200-க்கும் மேலான பிரதிநிதிகள் கலந்துகொண்ட நிலையில் போக்குவரத்தை கையாள்வதில் ஏற்பாட்டாளர்களுக்கு இக்கட்டான சூழ்நிலை ஏற்பட்டாலும், ஹோட்டலிலிருந்து அரங்கத்திற்கும், ரயில், பஸ், விமான நிலையங்களிலிருந்து பிரதிநிதிகளை அழைத்துச் செல்வதற்கும், மாநாடு முடிந்த பின்னர் அவர்களை வழியனுப்புவதிலும் எந்த சிக்கலும் இல்லாமல் வாகனப் போக்குவரத்து ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

கொச்சி மண்டல மாநாடு சிறப்பாக நடைபெற அவர்கள் கடுமையாக உழைத்து திறமையாகச் செயல் பட்டிருக்கிறார்கள். மாநாட்டுப் பிரதிநிதிகளின் ரசனை, விருப்பம் மற்றும் தேவைகளை பலவிதங்களில் திருப்தி செய்திருக்கிறார்கள். மாநாட்டு அமர்வுகள், உல்லாசமான பாம்புப் படகு பயணம், TRF-க்கு நிதி திரட்ட நடைபெற்ற அரை மராத்தான், தொடங்கிவைக்கப்பட்ட சேவை திட்டங்கள் வேடிக்கை நிறைந்த விளையாட்டுகள் அனைவரையும் கவரும் வகையில் இருந்தது. மேலும் அங்கிருந்த ரோட்டேரியன்களின் கற்பனைகளுக்கு உரம் போடுவது போல் அமைந்திருந்தது. திருச்சூர் பூரம் திருவிழா போல் நடந்த யானைகள் அணிவகுப்பு, செண்ட மேளம், கேரள பாணியிலான உணவுகள், விளையாட்டுகள், கலைநிகழ்ச்சிகள் அதன் பின்னணியில் அமைந்த புகைப்பட தொகுப்புகள் சக தோழி ஜெய்ஸ்ரீயை வெகுவாக கவர்ந்தது.

கடைசியாகச் சொன்னாலும் இதை குறைத்து மதிப்பிடமுடியாது. நிகழ்வில் பேச்சாளர்கள் RNT குழுவிற்கு சுவாரஸ்யமான சில தகவல்களைக் கூறினார்கள். சுற்றுச்சூழலியளாளர் சோனம் வாங்சுக், பிரதான அரங்கில் தேவையில்லாமல் அதிகப்படியான குளிரூட்டலில் அதிரடியாக பேசினாலும், பூமியில் நமது சிந்தனையற்ற செயல்களால் தாம் வசிக்கும் இமயமலைப் பகுதியில் ஏற்படும் பாதிப்புகளையும் சந்திக்க வேண்டிய சவால்களை எடுத்துக்கூறினார். நாடாளுமன்ற உறுப்பினரும் கேரளத்தைச் சேர்ந்தவருமான சசி தரூர், தனக்கே உரித்தான புத்திசாலித்தனம், நகைச்சுவை மற்றும் வசீகரத்தால் பார்வையாளர்களைக் கவர்ந்தார். கேள்வி-பதில் அமர்வில் அரங்கிலிருந்து வெளியேற விரும்பிய ஒரு பெண்மணி, உரையாடலின் விடியோ பதிவை அனுப்பி வைக்குமாறு என்னிடம் வலியுறுத்தினார். ஆனால், நான் அதற்கு மறுத்துவிட்டேன். கேள்வி-பதில் அமர்வில் PRID A S வெங்கடேஷின் கேள்விக்கணைகளுக்கு சசி தரூர் வெகு சாமர்த்தியமாக பதிலளித்தார். அவரது பதில்கள் புத்திசாலித்தனமாகவும், உண்மையாகவும், எவரும் குறைசொல்ல முடியாத வகையில் தெளிவான ஆங்கிலத்தில் தெளிவான உச்சரிப்புடன் இருந்தது. அமைதிக்கான நோபல் பரிசு வென்றவரும், குழந்தைகளின் உரிமைக்காக குரல் கொடுப்பவருமான கைலாஷ் சத்யார்த்தி, “ஒவ்வொரு குழந்தையும், ஒவ்வொரு குழந்தைப் பருவமும்” எந்த வகையில் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை எடுத்துக்கூறியதுடன் அவற்றை அனைவரும் நினைவில் கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்தார். அவரது இதயபூர்வமான பேச்சு பார்வையாளர் களைக் கவர்ந்தது.

கொச்சி மண்டல மாநாடு நடைபெற்ற, வேம்பநாடு ஏரிக்கரையில் அமைந்திருந்த கொச்சி கிராண்ட் ஹயாத் சொகுசு விடுதிக்கு முழு மதிப்பெண்கள் கொடுக்கலாம். ஹோட்டல் ஊழியர்களும் நிறைவான சேவையை அளித்தனர். குறிப்பாக தூய்மையைப் பராமரிப்பதில் கண்ணும் கருத்துமாக இருந்தனர்.



ரஷீதா பகத்

TRF
தலைவரிடமிருந்து...



# உங்கள் பெருந்தன்மை தொடரட்டும்

ஜனவரி என்பது ஒரு புதிய தொடக்கம், நாம் சாதித்தவற்றை அளவிடுவதற்கும், வருங்கால வெற்றிக்குத் திட்டமிடுவதற்குமான நேரம்.

ரோட்டரி அறக்கட்டளை ரோட்டரியின் நன்கொடை நிறுவலை இந்த ஆண்டுக்குள் (2025) $2.025 பில்லியனாக வளர்க்கும் பெரிய இலக்கை அமைத்துள்ளது. இந்தச் செய்தியைப் படிக்கும் ஒவ்வொருவரும் தாராளமாக உதவி செய்தால்தான் இது நடக்கும்.

அக்டோபரில் ஆர்ச் கிளம்ஃப் சமூக வார இறுதியின்போது, நம்முடைய மிகவும் தாராளமான கொடையாளர்கள் பன்முகத்தன்மை கொண்ட தொழில்களிலிருந்து வருகிறார்கள் என்பதைக் கண்டு கே-யும் நானும் ஊக்கம் பெற்றோம். எடுத்துக் காட்டாக, ஆசிரியர்கள், பொறியாளர்கள், நலப் பராமரிப்புத் தொழில் வல்லுநர்கள், கட்டுமானக் கலைஞர்கள். இவர்களை ஒன்றாக இணைப்பது, ரோட்டரி அறக்கட்டளையின் வழியாக இன்னும் மேம்பட்ட ஓர் உலகைக் கட்டமைக்கும் பகிர்ந்துகொள்ளப்பட்ட உறுதிப்பாடுதான்.

நம்மில் பலர் தொழில் சார்ந்த சேவையின் வழியாக நம் தொழில் அறிவை ரோட்டரிக்குக் கொண்டுவருகிறோம். இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டு, ரோட்டரி அறக்கட்டளையின் தொழில்நுட்ப அறிவுறுத்துநர்கள் படை. இந்த ரோட்டரி உறுப்பினர்கள் திட்டமிடுதல், நல்கை விண்ணப்பங்கள், மதிப்பீடுகளை வழிநடத்துவதற்குச் சிறப்புத் திறன்களைப் பயன்படுத்துகிறார்கள், நீங்கள் நிதியளிக்கிற, செயல்படுத்துகிற திட்டங்கள் வளங்குன்றாமலும் செயல்திறனுடனும் இருப்பதை உறுதிப்படுத்துகிறார்கள்.

பாதுகாப்பான நீர் முன்னெடுப்புகளில் தொடங்கி எழுத்தறிவுத் திட்டங்கள்வரை, ரோட்டரி அறக்கட்டளையின் பணியானது நம் உறுப்பினர்கள் வழக்கமாகக் கொடையளிப்பதைச் சார்ந்துள்ளது. பலருக்கு வசதியான ஒரு தீர்வு, ரோட்டரி டைரக்ட். இது மாதந்தோறும், காலாண்டுதோறும், அல்லது ஆண்டு தோறும் பங்களிப்புகளை வழங்குவதற்கான ஓர் எளிய வழியை வழங்குகிறது. ரோட்டரி செயல்திறனுடன் திட்டமிடவும், அவசரத் தேவைகளுக்கு உடனடியாக எதிர்வினையாற்றவும், தொடர்ந்து வாழ்க்கைகளை மாற்றவும் இது ரோட்டரிக்கு ஆற்றல் அளிக்கிறது.

பால் ஹாரிஸ் சமூகம் ஆண்டுதோறும் $1,000 அல்லது அதற்கு மேல் வழங்கு வோரைப் பெருமைப்படுத்துகிறது. பால் ஹாரிஸ் சமூக உறுப்பினர்களும், AKS உறுப்பினர்கள், ரோட்டரி டைரக்ட் பங்களிப்பாளர்களைப்போல் தொடர்ந்து வழங்கும் எண்ணத்துடன் உள்ளார்கள். இந்த ஆண்டுக்கான உங்கள் தனிப்பட்ட இலக்குகளை அமைக்கும்போது, ரோட்டரி அறக்கட்டளைக்கு உதவுவதன் மூலம் நீங்கள் உங்கள் தாக்கத்தை உலக அளவுக்கு நீட்டிக்கலாம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். பங்களிப்புகள் எந்த அளவாக இருந்தாலும் சரி, அவை ஒவ்வொன்றும் பொருளுள்ள மாற்றத்தைத் தூண்டி விரைவுபடுத்துகின்றன. ஆக, நாம் 2025க்குள் நுழைகிற இந்த நேரத்தில், ரோட்டரி அறக்கட்டளைக்கான நம் உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிசெய்வோம்.

நம் முயற்சிகளையும் நம் வழங்குதலையும் நம் சிறந்த அமைப்பில் உள்ள பிறருடன் இணைக்கும்போது, நம் தொழில் அல்லது இடம் எதுவாக இருந்தாலும், நாம் நன்மைக்காக ஒரு பன்னாட்டுப் படைக்குப் பங்களிக்கிறோம் என்று நாம் உண்மையாகச் சொல்லலாம். உங்கள் பணிகள் அனைத்துக்கும் நன்றி.

**மார்க் மலோனி**
TRF அறங்காவலர் தலைவர்


**ஆளுநர் குழு**

RID 2981 பாஸ்கரன் S
RID 2982 சிவகுமார் V
RID 3000 ராஜா கோவிந்தசாமி R
RID 3011 மகேஷ் திரிகா
RID 3012 பிரசாந்த் ராஜ் ஷர்மா
RID 3020 வெங்கடேஸ்வர ராவ் M
RID 3030 ராஜீந்தர் சிங் குரானா
RID 3040 அனீஷ் மலிக்
RID 3053 ராகுல் ஸ்ரீவஸ்தவா
RID 3055 மோகன் பராஷர்
RID 3056 ராக்கி குப்தா
RID 3060 துஷார் ஷா
RID 3070 பர்மிந்தர் சிங் குரோவர்
RID 3080 ராஜ்பால் சிங்
RID 3090 சந்தீப் சௌஹான்
RID 3100 தீபா கண்ணா
RID 3110 நீரவ் நிமேஷ் அகர்வால்
RID 3120 பரிதோஷ் பஜாஜ்
RID 3131 ஷீத்தல் ஷரத் ஷா
RID 3132 சுரேஷ் ஹேரலால் சாபூ
RID 3141 சேட்டன் தேசாய்
RID 3142 தினேஷ் மேத்தா
RID 3150 சரத் சௌத்ரி கட்ராகட்டா
RID 3160 சாது கோபால கிருஷ்ணா
RID 3170 சரத் பாய்
RID 3181 விக்ரம்தத்தா
RID 3182 தேவ் ஆனந்த்
RID 3191 சதீஷ் மாதவன்
RID 3192 மகாதேவ பிரசாத் N S
RID 3201 சுந்தரவடிவேலு N
RID 3203 சுரேஷ் பாபு S
RID 3204 சந்தோஷ் ஸ்ரீதர்
RID 3211 சுதி ஜப்பார்
RID 3212 மீரான் கான் சலீம்
RID 3231 ராஜன்பாபு M
RID 3233 மகாவீர் போத்ரா
RID 3234 சரவணன் N S
RID 3240 சுக்மிந்தர் சிங்
RID 3250 பிபின் சாச்சன்
RID 3261 அகில் மிஸ்ரா
RID 3262 யக்ஞன்சிஸ் மோஹாபத்ரா
RID 3291 கிருஷ்ணேந்து குப்தா



அச்சு மற்றும் பதிப்பாளர் **P T பிரபாகர்** (முகவரி: 15 சிவசாமி சாலை, மைலாப்பூர் சென்னை-4). துகார் டவர்ஸ், 3-வது தளம், 34, மார்ஷல்ஸ் ரோடு, எழும்பூர், சென்னை-600 008-யில் இயங்கும் ரோட்டரி நியூஸ் ட்ரஸ்ட் சார்பில் ராசி கிராபிக்ஸ் பி லிட், 40, பீட்டர்ஸ் ரோடு, ராயப்பேட்டை, சென்னை- 14 என்ற முகவரியில் அச்சிடப்படுகிறது. **ஆசிரியர்: ரஷீதா பகத்.**



கட்டுரைகளை திருத்தவோ/ சுருக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு. இதழில் வெளியாகும் கட்டுரைகளை RNT அனுமதியுடன் மட்டும் மறுபதிப்பு செய்யலாம்.



Printed and published by PT Prabhakar, 15 Sivaswamy Street, Mylapore, Chennai 600004, on behalf of Rotary News Trust and printed at Rasi Graphics Pvt Ltd, 40, Peters Road, Royapettah,Chennai - 600 014, India, and published at Rotary News Trust, Dugar Towers, 3rd Floor, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008. Editor: Rasheeda Bhagat.

**அறங்காவலர் குழுவினர்**

| | |
|---|---|
| T N ராஜு சுப்ரமணியன் RI இயக்குனர் மற்றும் RNT தலைவர் | RID 3141 |
| அனிருதா ராய்சௌத்ரி RI இயக்குனர் | RID 3291 |
| Dr பரத் பாண்ட்யா TRF அறங்காவலர் | RID 3141 |
| ராஜேந்திர K சாபூ | RID 3080 |
| கல்யாண் பானர்ஜி | RID 3060 |
| சேகர் மேத்தா | RID 3291 |
| அசோக் மஹாஜன் | RID 3141 |
| P T பிரபாகர் | RID 3232 |
| Dr மனோஜ் D தேசாய் | RID 3060 |
| C பாஸ்கர் | RID 3000 |
| கமல் சங்வி | RID 3250 |
| Dr மகேஷ் கோட்பாகி | RID 3131 |
| A S வெங்கடேஷ் | RID 3232 |
| குலாம் A வஹன்வதி | RID 3141 |

**RI Directors-elect**

| | |
|---|---|
| முருகானந்தம் M | RID 3000 |
| நாகேஷ் K P | RID 3191 |

**செயற்குழு உறுப்பினர்கள்** (2024–25)

| | |
|---|---|
| மகாதேவ பிரசாத் N S தலைவர், ஆளுநர் குழு | RID 3192 |
| அகில் மிஸ்ரா செயலாளர், ஆளுநர் குழு | RID 3261 |
| ராஜா கோவிந்தசாமி R பொருளாளர், ஆளுநர் குழு | RID 3000 |
| ராக்கி குப்தா ஆலோசகர், ஆளுநர் குழு | RID 3056 |

**ஆசிரியர்**
ரஷீதா பகத்

**துணை ஆசிரியர்**
ஜெய்ஸ்ரீ பத்மநாபன்

**நிர்வாகம் மற்றும் விளம்பர மேலாளர்**
K விஸ்வநாதன்

ரோட்டரி நியூஸ், துகார் டவர்ஸ்,
3-வது தளம், 34, மார்ஷல் சாலை,
எழும்பூர், சென்னை-8, இந்தியா
தொலைபேசி: 044 42145666
*rotarynews@rosaonline.org*
*www.rotarynewsonline.org*

Contributions are welcome but will be edited. Content can be reproduced with permission and attributed to RNT.

**துணை தலைவர் செய்தி**



# TRF-க்கு ஆதரவைப் புதுப்பிப்போம்

நாம் 2025-ம் ஆண்டுக்குள் நுழையும் இந்த நேரத்தில் நமது கடந்தகால சாதனைகள் பற்றி சிந்தித்து, எதிர்கால செயல்பாடுகளுக்குத் தயாராவோம். கடந்த காலங்களில் உலகில் நல்லது செய்வதற்கான ஒரு சக்தியாக ரோட்டரி அறக்கட்டளை விளங்கி வந்துள்ளது. எதிர்காலத்தில் நாம் அதிக கவனம் செலுத்தி ரோட்டரியை வலுப்படுத்தி முக்கியப் பங்காற்ற வேண்டிய தருணம் வந்து விட்டது. போலியோ ஒழிப்பு நடவடிக்கையானாலும் சரி (விரைவில் அதை அடைவோம்) பெரிய திட்டங்களானாலும் சரி, அமைதி, நல்லெண்ண முயற்சிகள் அல்லது 2025-க்குள் $2.025 பில்லியன் எண்டௌவ்மென்ட் நிதி திரட்டுவதானாலும் சரி, உண்மையில் TRF நாடுகளில், சமூகத்தில் பலரின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்திவருகிறது.

அன்பு வாசகர்களே, உங்களைப் போன்ற ரோட்டேரியன்களின் ஆதரவு, ஆர்வம், அர்ப்பணிப்புக்கு நன்றி. TRF-க்கு நீங்கள் தொடர்ந்து அளித்து வரும் ஆதரவுக்கு நன்றி. இதன் மூலம் மக்கள் வாழ்வில் நீடித்த மாற்றத்தை ஏற்படுத்த முடியும். எனவே நான் உங்களிடம் கேட்டுக்கொள்வதெல்லாம்:

**ஆண்டு நிதிக்கு ஆதரவு:**

அ) நன்கொடையாளர்கள் எண்ணிக்கையை 20 சதவீதம் அதிகரிக்கவும். 28% ரோட்டேரியன் நன்கொடையாளர்கள் 2023–24 இல் வருடாந்திர நிதிக்கு பங்களித்துள்ளனர்.

ஆ) TRF-க்கு சங்கங்களின் பங்களிப்பை 100 சதவீதத்தை ஊக்குவித்தல் மற்றும் உறுதிசெய்தல். 2021–22-ல் 3 மாவட்டங்களில் சங்கங்கள் அறக்கட்டளைக்கு 100 சதவீத பங்களிப்பைச் செய்திருந்தன. இது 2022–23-ல் 8 மாவட்டங்களாகவும், 2023–24-ல் 10 மாவட்டங்களாகவும் அதிகரித்திருந்தது. 2024–25 இல் ஏற்கெனவே 12 மாவட்டங்களில் உள்ள சங்கங்கள் 100 சதவீத பங்களிப்பைச் செய்துள்ளன. இது நல்லது. அந்த மாவட்டங்களுக்கு பாராட்டுகள்.

இ) சிறிய நன்கொடையாளர்களை நன்கொடையாளர்களை சங்க நிகழ்வுகள், சங்கத்தை நிறுவும்போதும், சங்கத்திற்கு வருகை தரும்போது அங்கீகரித்து கௌரவப்படுத்துங்கள்.

ஈ) வருடாந்திர நிதிக்கு பங்களிப்புச் செய்வதன் மூலம் முன்மாதிரியாக இருந்து வழிநடத்துங்கள்.


உ) பால் ஹாரிஸ் சொசைட்டியில் சேர அதிக எண்ணிக்கையில் ரோட்டேரியன்களை ஊக்குவிக்கவும்.

எண்டௌவ்மென்ட் நிதி நமது ரோட்டரி அறக்கட்டளைக்கு பிரகாசமான எதிர்காலத்தை உறுதிசெய்கிறது. நமது இலக்கு 2025-க்குள் $2.025 பில்லியன் நிதி திரட்ட இலக்கு. இந்த இலக்கை அடைந்தால், ஒவ்வொரு ஆண்டும் நாம் செலவழிக்கும் தொகையில் 50 பில்லியன் டாலர் வருவாய் ஈட்ட முடியும். எனவே தயவுசெய்து எண்டௌவ்மென்ட் நிதிக்கு பங்களிப்புச் செய்யுங்கள்.

ஆர்ச் கிளம்ப் ஒரு முறை கூறினார், "ரோட்டரியை உயர்ந்த அமைப்பாகவும் விருப்பமானதாகவும் நாம் பார்க்கவேண்டும். அதன் உயர்வுக்கு உழைக்க வேண்டும், அறக்கட்டளைக்கு ஆதரவளிக்க வேண்டும். மற்றவர்களை கைதூக்கிவிட்டு அவர்கள் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுத்துவதை விட இதயத்துக்கு இதம் அளிப்பது வேறு எதுவும் இல்லை. அதுதான் TRF-ன் மாயாஜாலம்.

**பரத் பாண்ட்யா**
TRF அறங்காவலர்

# RI இயக்குனர் செய்தி



## புத்தாண்டு புதிய வாய்ப்புகளை தருகிறது

அன்புள்ள சக ரோட்டேரியன்களே,

புத்தாண்டு வாழ்த்துகள்! 2025 ஆம் ஆண்டை நாம் வரவேற்கும்போது, புதுப்பிக்கப்பட்ட ஆற்றல், நோக்கம் மற்றும் ஆர்வத்துடன் இந்த புதிய தொடக்கத்தை தழுவுவோம். புத்தாண்டின் ஆரம்பம் எப்போதும் ஒரு அழைப்பாகவே இருக்கும். பெரியதாக கனவு காணவும், துணிச்சலாகச் செயல்படவும், உலகில் அழியாத அடையாளத்தை ஏற்படுத்துவதற்குமான அழைப்பு இது.

நாம் ஒவ்வொருவரும் மாற்றத்தை உருவாக்கும் சக்தியைக் கொண்டுள்ளோம். பெரிய அளவில் இல்லா விட்டாலும் சிறிய அளவில், அர்த்தமுள்ள செயல்பாடுகள் மூலம் வெளிப்படுத்துவோம். ரோட்டரியின் மரபு இந்த அடிப்படையிலேயே கட்டமைக்கப்பட்டுள்ளது. உயிர்களை காப்பற்றும் திறன், சமூகத்தில் மாற்றத்தை உருவாக்குவது மற்றும் தேவைப்படும் இடங்களில் நம்பிக்கையை தூண்டுவது ஆகியவை.

இந்த ஆண்டு நமது மரபுகளை மதிப்பதற்கும் மாற்றத்தை தழுவுவதற்கும் இடையே சரியான சமநிலையைக் காண்போம். ரோட்டரியின் செயல் திட்டத்தை வெற்றிகொள்வதன் மூலம் நமது முக்கிய மதிப்புகளை இழக்காமல் இன்றைய உலகின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் நமது கண்ணோட்டத்தை உறுதிசெய்வோம்.

அமைதிக்காக ஏங்கும் உலகில் நாம் அதன் தீவிர ஆதரவாளர்களாக இருக்க வேண்டும். ஒரு விளையாட்டு மைதானம், ஒரு பூங்கா அல்லது சமூக இடத்தில் அமைதிக் கம்பத்தை நாம் நடும்போது அது சொல்லும் செய்தியை கற்பனை செய்து பாருங்கள். அமைதி, நல்லிணக்கம் மற்றும் ஒற்றுமையின் சக்திவாய்ந்த சின்னம். இதுபோன்ற ஒவ்வொரு செயலிலும், நீடித்த நல்லெண்ணம் பகிரப்பட்ட எதிர்காலத்தை நம்பும் வகையில் மற்றவர்களை ஈர்க்கும் வகையில் செயல்படுவோம்.

அதேநேரத்தில் சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை இரட்டிப்பாக நாம் உறுதிகொள்வோம். நாம் நடும் ஒவ்வொரு மரமும், நாம் பாதுகாக்கும் ஒவ்வொரு வளமும் மற்றும் பசுமை முயற்சிகளும் நம்மை ஆரோக்கியமான கிரகத்துக்கு நெருக்கமாக நகர்த்துகின்றன. இது வெறும் கடமையல்ல. இது வருங்கால சந்ததியினருக்கு நாம் விட்டுச் செல்லும் பாரம்பரியமாகும்.

இன்றைய சவால்களில் நாம் கவனம் செலுத்தும் போது, நாளைய தலைவர்களுக்கு அதிகாரம் அளித்தலை நாம் மறந்துவிடக்கூடாது. மாற்றத்தை உருவாக்கும் அடுத்த அலை ரோட்ராக்டர்கள்தான். அவர்களுக்கு வழிகாட்டி, ஆதரித்தால், ரோட்டரி இயக்கத்தின் தொடர் சேவையை நாம் உறுதிசெய்ய முடியும்.

நாம் நிறைவேற்றும் ஒவ்வொரு திட்டம், நாம் திரட்டும் ஒவ்வொரு டாலர், நாம் வரவேற்கும் ஒவ்வொரு புதிய உறுப்பினர் மூலம் நாம் மாயா ஜாலத்தை உருவாக்க முடியும். வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தும், மற்றவர்களை நம்முடன் இணைக்கும் மந்திரம் அதுதான். ரோட்டரியின் நான்கு வழி பரிசோதனையான கருணை, உண்மை, நேர்மை, நல்லெண்ணம் ஆகியவற்றை பின்பற்றி அனைவருக்கும் நல்லது செய்து இந்த மாயாஜாலத்தில் வாழ்வோம்!

2025 என்பது ஒரு வெற்று துணி. நம்பிக்கை, சேவை, தாக்கம் ஆகிய வண்ணங்களை வரைவதற்கு அது தயாராக உள்ளது. நாம் எல்லோரும் கனவு காண்போம். செயல்படுவோம். முன்னெப்போதும் இல்லாத வகையில் சாதிப்போம்.

**அனிருதா ராய்சௌத்ரி**
RI இயக்குனர் 2023–25

Rotary Institute KOCHI 2024

*பின்வரும் பக்கங்களில் கொச்சி*
*ரோட்டரி இன்ஸ்டிடியூட்டின் கவரேஜ் உள்ளது..*



ஹேமந்த் பன்ஸ்வால்


*மாநாட்டு ஒருங்கிணைப்பாளர் RI இயக்குநர் அனிருதா ராய்சௌத்ரி (இடது) மாநாட்டுத் தலைவர் PDG ஜான் டேனியலுடன்.*

# மூன்றாம் உலகப் போர் தொடங்கிவிட்டது...மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையே : வாங்சுக்

ரஷீதா பகத்




*சுற்றுச்சூழல் ஆர்வலர் சோனம் வாங்சுக்*



வன்முறையும் மோதலும் நாடுகளை துண்டாடிக் கொண்டிருக்கும் உலகில், பல்வேறு பகுதிகளில் போர்கள் நடந்து கொண்டிருக்கும் சூழலில், சுற்றுச்சூழல் ஆர்வலர் சோனம் வாங்சுக், கொச்சி இன்ஸ்டிடியூட்ல் பங்கேற்றவர்களிடம் ஒரு வித்தியாசமான சிந்தனையை முன்வைத்தார்: “உலக சமாதானம் குறித்து நாம் பேசுகையில், இன்றைய பிரச்சினை நாடுகளுக்கு இடையிலான மிகப்பெரிய போர் அல்ல, மனிதன் மற்றும் இயற்கைக்கு இடையிலான போராடுதலாகும். மூன்றாவது உலகப் போர் ஏற்கனவே மனிதர்கள் மற்றும் இயற்கைக்கு இடையே நடந்து கொண்டிருக்கிறது என நான் நம்புகிறேன்’’ என்றார்.

அவர் புள்ளி விவரங்கள் மூலம் தன் கருத்தை நிரூபித்தார். ஒவ்வொரு ஆண்டும், காற்று மாசுபாட்டால் மட்டும் ஏழு மில்லியன் மக்கள் இறக்கின்றனர். மற்ற காலநிலை தொடர்பான இறப்புகளைச் சேர்த்தால், அது 10 மில்லியனாக உயர்கிறது. “இந்த 10 மில்லியன் மக்கள் எண்ணிக்கை என்ன என்று யோசித்தேன்? இரண்டு பெரிய போர்களான முதல் மற்றும் இரண்டாம் உலகப் போர்கள் ஒட்டுமொத்தமாக சுமார் 10 ஆண்டுகள் நீடித்தன. அவற்றால் சுமார் ஏழு மில்லியன் மக்கள் இறந்தனர், ஆனால் சுற்றுச்சூழல் சீரழிவு மற்றும் மாசுபாடு தொடர்பான காரணங்களால் ஒவ்வொரு ஆண்டும் 10 மில்லியன் மக்களை நாம் இழக்கிறோம். அப்படியானால் மூன்றாம் உலகப் போர் ஏற்கனவே நடந்து கொண்டிருக்கிறது தானே.’’

ஆனால் இந்த பெரிய பிரச்சனைக்கான பதில் “சூரிய சக்தி கொண்ட கட்டிடங்கள் அல்லது மின்சார வாகனங்கள் அல்லது எந்த வடிவத்திலும் தொழில்நுட்பத்தில் இருந்து வராது. இந்த பிரச்சினைக்கு தீர்வு கிடைக்க வேண்டுமென்றால், முழு உரையாடலின் திசை மாற வேண்டும். மக்கள் விஞ்ஞானி களின் பேச்சை கேட்கமாட்டார்கள்... ஆனால் மத தலைவர்களுக்கு மக்கள் செவிசாய்ப் பார்கள். அவர்கள் இந்த பொருள் குறித்து பேசத் தொடங்கி, அதை முன்னுரிமையாக்க வேண்டும்.’’

ஆனால் அதைவிட சிறந்தது, “எந்த மதமும் வருவதற்கு முன்பு இருந்ததைப் போலவே மீண்டும் இயற்கையை வழிபடுபவர்களாக நாம் மாற வேண்டும்’’ என்று அவர் கூறினார். இதற்காக நாம் நமது தற்போதைய மதங்களை விட்டுவிட வேண்டிய தில்லை, ஆனால் அவற்றைக் கொஞ்சம் மாற்றி, “இந்து, முஸ்லீம், கிறிஸ்தவ அல்லது பௌத்த இயற்கை வழிபாட்டாளர்களாக மாறுங்கள், அது நமக்கு வெளிச்சத்தைக் காண்பிக்கும்’’ என்றார்.

“நமது எதிர்காலத்தை மட்டுமல்ல, இந்த கிரகத்தை நம்முடன் பகிர்ந்து கொள்ளும் மற்ற உயிரினங்களின் எதிர்காலத்தையும்’’ கவனித்துக் கொள்ளும் ஒரு வாழ்க்கை முறையைத் தழுவ அழைப்பு விடுத்த வாங்சுக், “கடைசி 300 ஆண்டுகளில் நாம் கண்ட குருட்டு வளர்ச்சி மற்றும் பரபரப்பில் இன்றைய உலகின் பிரச்சினைகளுக்கான பதில் இல்லை; அதுவே நம்மை மேலும் கீழே தள்ளும்’’ என்று அவர் குறிப்பிட்டார்.

இந்திய பாரம்பரிய ஞானத்தையும், 2,500 ஆண்டுகளுக்கு முன்பு புத்தர் கூறியதையும் வாங்சுக் மேற் கோளிட்டார். “மனிதனின் வெற்றி மிகவும் சிறந்த கார், வீடு, ஆடை, பொருள் செல்வம் போன்ற ஆயிரம் ஆசைகளை நிறைவேற்றுவதில் அல்ல, ஒரே ஒரு ஆசையை விலக்குவதில்தான் இருக்கிறது. நமக்கு தேவைப்படும் புதுமை தொழில்நுட்பமோ அல்லது பொறியியல் முறையிலோ அல்ல, ஆனால் இவ்வாறான தீர்க்கமான மாற்றங்களில்தான் இருக்கிறது’’ என்று அவர் கூறினார்.

லடாக்கின் மாணவர்கள் கல்வி மற்றும் கலாச்சார இயக்கத்தின் (SECMOL) நிறுவனர்-இயக்குனரான அவருடைய வாழ்க்கை அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டு 3 இடியட்ஸ் என்ற பாலிவுட் வெற்றிப்படத்தில் அமீர்கான் நடித்த விஞ்ஞானி புன்சுக் வாங்டு கதாபாத்திரம் உருவாக்கப் பட்டது. கொச்சி இன்ஸ்டிடியூட்டில் தனது நேர்த்தியான மற்றும் எளிய உரையால் ரசிகர்களை அவர் ஈர்த்தார்.’’

லடாக்கின் பலவீனமான சுற்றுச்சூழலில் வசிக்கும் சுற்றுச் சூழல் ஆர்வலர், தொடக்கத்தில் இன்ஸ்டிடியூட் அமர்வுகள் நடை பெற்ற குளிரான அரங்கத்தை நகைச்சுவையாக விமர்சித்தார், அங்கு ஆண்கள் ஜாக்கெட்டுகள் அணிந்திருந்தனர். கொச்சியின் வெப்பத்தில் ஒரே ஒரு சட்டையுடன் இருக்கலாம் என்று நான் நினைத்தேன். ஆனால் இங்கு நான் லடாக்கில் இருப்பது போலவே உடை அணிய வேண்டியுள்ளது, அதிக ஏர் கண்டிஷனிங் ஏற்படுத்தும் பாதிப்புகளை விளக்கியபோது, இந்தியாவில் 27C வெப்பநிலை ஆறுதல் அளிக் கக் கூடியது என்றும், அதற்குக் கீழ் செல்லும் ஒவ்வொரு டிகிரிக்கும் ஆறு சதவிகித ஆற்றல் தேவைப்படும் என்றும் கூறினார். ஒரு அறையை 20C வெப்பநிலையில் கொண்டுவர 40–50 சதவிகிதம் கூடுதல் ஆற்றல் தேவைப்படும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

இப்போது லடாக்கில் வெப்பநிலை -20C ஆக உள்ளது, மற்றும் விரைவில் அது -25C ஆகும், என்று வாங்சுக் கூறினார்.

வாங்சுக் உலகை பாதிக்கும் காலநிலை

# வாங்சுக்கின் மாயாஜால பள்ளி



லடாக்கில் உள்ள வாங்சுக்கின் பள்ளி.

உயர்ந்த ஹிமாலயப் பிராந்தியத்தில் சுற்றுச்சூழல் சீரழிவால் உருவான காலநிலை நெருக்கடியால் ஏற்படும் சவால்களை எதிர்கொள்ள, "நாங்கள் லடாக்கில் அடுத்தடுத்த பேரழிவுகளை தடுக்க உகந்த முறையில் அணுகு கின்றோம் மற்றும் புதிய முறைகளை முயற்சிக்கின்றோம். கடந்த 35 ஆண்டு களாக, எங்கள் பள்ளியில் உள்ளூர் வாழ்க்கைக்கு ஏற்றவாறு புதுமைகளை உருவாக்க முயன்றுவருகிறோம். ஆனால் இன்று உலகளாவிய அளவில் தழுவ வேண்டிய புதுமைகளை உருவாக்கவும் தேவையுள்ளது. எங்கள் சிறிய முயற்சிகள் மட்டும் இதற்கு போதாது" என்று சுற்றுச்சூழல் நிபுணர் சோனம் வங்சுக் கொச்சி இன்ஸ்டிட்யூட்டில் உரையாற்றினார்.

தோல்வி என்பது ஒரு பெரிய விஷயமாக இருந்த கல்வி முறையில் சீர்திருத்தங்களைக் கொண்டுவர 1990களில் தொடங்கப்பட்ட பள்ளி கடந்த காலத்திலிருந்து முற்றிலும் மாறுபட்ட எதிர்காலத்திற்கு இளைஞர்களைத் தயார்படுத்த முயற்சிக்கிறது.

"இந்த (SECMOL) பள்ளி இயற்கை பொருட்களால் கட்டப்பட்டது. மேலும் இது சூரிய சக்தியால் இயக்கப்படுகிறது. லடாக் போன்ற மிகவும் குளிர்ந்த இடத்தில், குளிர்காலத்தில் இந்தப் பள்ளியை சூடேற்றவோ அல்லது சமைக்கவோ கூட புதைபடிவம் அல்லது வேறு எந்த ஆற்றலும் பயன்படுத்தப்படுவதில்லை. இந்தப் பள்ளியில் எல்லாமே சூரிய சக்தியில்தான் நடக்கிறது, இது உலகின் முதல் கார்பன் நியூட்ரல் பள்ளி" என்று அவர் கூறினார்.

"மாணவர்கள் வாழ்வதன் மூலமும் அனுபவிப்பதன் மூலமும் கற்றுக்கொள்கிறார்கள். தாங்கள் பெறும் கல்வியை கொண்டு நிஜ உலகப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்கின்றனர். அவர்கள் உலகத்தையே ஒரு வகுப் பறையாக மாற்றி, புத்தகங்களில் உள்ளவற்றைப் பயன்படுத்தி சூரிய சக்தியில் சமையல், சூரிய ஆற்றல், இயற்கை விவசாயம் போன்ற செயல்பாடு களின் மூலம் சிக்கல்களைத் தீர்க்கிறார்கள். எல்லாமே சூரியனின் உதவியுடன் நடக்கிறது, அது நமக்குத் தாராளமாக கிடைத்திருப்பதால், சமைப்பது முதல் புதிய காய்கறிகளை உற்பத்தி செய்யும் கிரீன் ஹவுஸ், விளக்குகள், மின்சாரம், தண்ணீர் கொதிகலன், தண்ணீர் பம்பிங் என எல்லாம் சூரிய சக்தியால் நிகழ்கிறது... நம்முடைய வளாகத்தில் உள்ள மாடு களுக்கூட சூரியனால் சூடாக்கப்படும் மாட்டுப்பண்ணையில்தான் வாழ்கின்றன.

"எண்ணெய், காற்று, மரம், நிலக்கரி அல்லது வேறு எந்த எரிபொருளும் இல்லாமல், வெளியில் -20 டிகிரி செல்சியஸ் ஆக இருக்கும் போது உட்புற வெப்பநிலை +18 டிகிரி செல்சியஸ் இந்தக் கட்டிடங்கள் கொண்டிருக்கும். மேலும் அழகு என்னவென்றால், தீர்வுக்கான இயற்பியல் மற்றும் நோக்கு நிலைக்கான புவியியல் பற்றிய சிறிய வரையறையுடன், கட்டிடங்கள் கோடையில் குளிர்ச்சியாகவும் குளிர்காலத்தில் வெப்பமாகவும் இருக்கும்."

இந்த தொழில்நுட்பம் தற்போது கடுமையாக இராணுவப்படை நிறைந்த லடாக்கின் மற்ற பகுதிகளுக்கும் விரிவுபடுத்தப்பட்டு வருவதாக வாங்சுக் கூறினார். "தென்னிந்தியா போன்ற சூடான இடங்களிலிருந்து பலர் வருவதால், 100,000 வீரர்கள் சூடாக இருக்க எண்ணெய் மற்றும் புதைபடிவ எரிபொருட்களை எரிக்கிறார்கள். இது உங்களால் நினைத்துக்கூட பார்க்க முடியாத அளவுக்கு கார்பன் வெளி யேற்றத்தை ஏற்படுத்துகிறது. இந்தியா, சீனா மற்றும் பாகிஸ்தான் ஆகிய மூன்று நாடுகளின் படைகளால் அந்த பலவீனமான பகுதியில் ஒரு மில்லியன் டன்கள் உமிழ்வு வெளியேற்றப்படுகிறது. எனவே நாங்கள் இப்போது இந்த தொழில் நுட்பத்தை இந்திய இராணுவத்திற்கும் விரிவுபடுத்துகிறோம், நம் இராணுவம் மூன்று இராணுவத்திலும் சுற்றுச்சூழல் ரீதியாக முற்போக்கானது என்று நான் நம்புகிறேன்."

அவர் மேலும் கூறுகையில், "இப்போது நம் இராணுவம் சூரிய வெப்பமூட்டும், கார்பன்-நடுநிலை தங்குமிடங்களில் வாழ்கிறது, இதனை அவர்கள் உடன் இணைந்து நாங்கள் உருவாக்கி கொடுத்துள்ளோம். இது எரிபொருள் பயன் பாட்டையும், கார்பன் உமிழ்வையும், தீ விபத்துகளையும் குறைக்கிறது. எதிரியின் துப்பாக்கிச் சூட்டை விட, அந்தப் பகுதியில் உள்ள வீரர்கள் தற்செயலாகத் தீயில் அதிகமாக இறந்தனர். எனவே இப்போது நமது வீரர்கள் அந்த உயரத் தில் சூடாகவும் மகிழ்ச்சியாகவும் வாழ்கிறார்கள்."

அவர் மேலும் கூறுகையில், "எங்கள் வீடுகள் மற்றும் பள்ளிகளில், குளிர்காலத்தில் வெப்பநிலை எப்போதும் 18 முதல் 25 வரை இருக்கும். எந்த நேரத்திலும், டெல்லியில் உள்ள ஒரு வீட்டை விட வெப்பம் இங்கே அதிகமாக இருக்கும். ஒவ்வொரு முறையும் நான் லடாக்கிலிருந்து டெல்லிக்கு வரும்போது எனக்கு குளிர்ச்சியாக இருக்கும். சிறிதளவு அறிவியலும் புதுமையும் பயன்படுத்தினால் இதைப் போல எங்கும் இருக்க முடியும்." ■

நெருக்கடி குறித்து, குறிப்பாக அவருடைய தாயகமான ஹிமாலய பகுதியில் நிகழும் பிரச்சனைகளைப் பற்றி பேசினார். ''லடாக்கில் காலநிலை மாற்றத்தின் கடுமையான விளைவு களை நேரடியாக அனுபவிக்கிறோம்'' என்று கூறிய அவர், லடாக் மற்ற எந்த இடத்தையும் போல் இல்லாமல், இன்னொரு கிரகத்தைப் போல் உணரப்படுகிறது என்று விளக்கினார். இயற்கை அந்த மண்ணை கைவிட்டதாகவும் அவர் கூறினார்.

ஹிமாலய மலைகள் காஷ்மீர், ஷிம்லா போன்ற பசுமையாகவும் செழிப்பானதாகவும் இருப்பவை. ஆனால் ஹிமாலய தொடர்ச்சி முற்றிலும் வேறுபட்ட ஒரு உலகம். நான் காலையில் என் ஜன்னலைத் திறக்கும்போது, இது பூமியைவிட செவ்வாய் கிரகத்தைப் போன்று காட்சியளிக்கிறது. விண்வெளியைப் போலவே, இங்கே வெப்பநிலை கோடையில் +35C லிருந்து குளிர்காலத்தில் -35C ஆக மாறுகிறது. இங்கே, உங்களின் தலை வெயிலிலும் பாதங்கள் நிழலிலும் இருந்தால், ஒரே நேரத்தில் வெயில்காய்ச்சல் மற்றும் குளிர்காய்ச்சல் ஏற்படும்.

இந்தப் பகுதி மிகக் கடுமையான வழிகளில் காலநிலை மாற்றத்தை எதிர்கொண்ட போதிலும், மனித தலையீடுகளால் மாயாஜாலத்தை நிகழ்த்த முடியும் மற்றும் முன்பு நிகழ்த்தப்பட்டும் உள்ளது. லடாக் கிராமத்தில் பச்சை நிறத்திட்டு களின் படங்களைக் காட்டி, “இது இயற்கையின் செயல் அல்ல, ஆனால் உங்களைப் போல பருவமழையால் ஆசீர்வதிக்கப்படாத ஒரு பிராந்தியத்தில் எங்கள் முன்னோர்கள் செய்த செயல்'' என்று கூறினார்.

இந்த பசுமையான நிலப்பகுதிகள், உருகும் பனிக் கட்டிகளை சரியாகப் பயன்படுத்திய உள்ளூர் விவசாயிகளின் புதுமையான முயற்சிகளால் உருவாகியவை. கற்களைக் குத்தி வழிசெய்து, உலர்ந்த மணற்கரைகளை சிறு நீரோடை களால் பசுமை நிறைந்த நிலங்களாக மாற்றினர். ''இவ்வாறு அவர்கள் உருவாக்கிய மாயாஜாலத்தால், பார்லி, கோதுமை, ஆப்ரிகாட், ஆப்பிள், பீச், பிளம்ஸ் போன்ற பழங்கள் இங்கு விளைகின்றன. மக்கள் இங்கே காலங்காலமாக உயிர்வாழ்வது மட்டுமல்லாமல், அவர்களின் வண்ணமயமான நாகரிகமும் அதன் சொந்த இசை, நடனம், இலக்கியம் மற்றும் ஆன்மீகம் ஆகியவற்றால் செழித்து வளர்ந்துள்ளனர்.

ஆனால் இப்போது, புவி வெப்பமடைதல் மற்றும் காலநிலை மாற்றத்தினால் இப்பகுதி மிகப்பெரிய சவாலை எதிர்கொள்கிறது. ''எங்கள் பனிப்பாறைகள் மிக வேகமாக உருகி வருகின்றன. நீங்கள் தொலைக்காட்சியில் பார்க்கலாம், ஆனால் உயரமான இமயமலையில் உள்ள மக்களை அது எப்படி பாதிக்கின்றது என்று உங்களுக்குத் தெரியாது, மிக விரைவில் அது நாட்டின் மற்ற பகுதிகளிலும் குறிப்பாக வட இந்தியாவில் தாக்கத்தை ஏற்படுத்தும்.''

இந்த பகுதி உலகின் பெரும்பாலான பனிப்பாறைகள் மற்றும் உறைந்த நன்னீர் ஆகியவற்றைக் கொண்டுள்ளது என்று வாங்சுக் கூறினார். ''வட மற்றும் தென் துருவத்திற்குப் பிறகு, இந்து குஷ் இமயமலை மூன்றாம் துருவம் என்று அழைக்கப்படுகிறது.'' விமானத் தில் இருந்தபோது அவர் பிடித்த ஒரு படத்தை காட்டினார், அதில் 10 பனிப்பாறைகள் தென்பட்டன. இந்தப் பகுதியில் சுமார் 50,000 பனிப்பாறைகள் இருந்தன, அவை நம் கோளுக்கு மிகவும் மதிப்புமிக்கவை என அவர் குறிப்பிட்டார். ''அவை உருகும் போது, வட இந்தியாவின் ஆறுகள் மற்றும் சமவெளியில் பாய்ந்து வாழ்க்கைக்கு ஊட்டமளிக்கின்றன. இந்தப் பகுதி நேரடியாகவோ மறைமுகமாகவோ உலக மக்கள் தொகையின் நான்கில் ஒரு பங்கான சுமார் இரண்டு பில்லியன் மக்களை ஆதரிக்கிறது,'' என்று அவர் கூறினார்.

ஆனால் இந்த பனிப்பாறைகள் ஆபத்தான வேகத்தில் உருகிக் கொண்டிருக்கின்றன. ஒரு உயரமான பனிப்பாறையின் படத்தைக் காட்டி, ''நான் வாலிபனாக இருக்கும்போது உயர்ந்து கம்பீரமாக இருந்த பனிப்பாறைகள் இன்று சுருங்கி சிறியதாக உள்ளது. பூமி வெப்பமடைந்து, ஒவ்வொரு கோடையிலும் அது கரைகிறது.''

*PRID கமல் சங்வி மற்றும் RID அனிருதா ராய்சௌத்ரியுடன் வாங்சுக்.*



இந்த உருகலின் தாக்கங்கள் கவலைக்கிடமானவை. வாங்சுக் ஒரு எடுத்துக்காட்டை முன்வைத்தார், 2006-ம் ஆண்டு அவர்கள் பள்ளிக்கு அருகிலுள்ள ஒரு கிராமத்தில் ஒரு திடீர் வெள்ளம் ஏற்பட்டது, இது மிகுந்த அழிவை ஏற்படுத்தியது. பல பண்ணைகள், வயல்கள், மிருகங்கள் மற்றும் வீடுகளை அழித்துவிட்டது. தனது மாணவர்களுடன் சேர்ந்து, அவர் அங்கு நிவாரண முயற்சி களில் பங்கேற்றார். அதில் ஒரு 80 வயதான கிராமவாசியிடம் இந்த மாதிரி பேரழிவுகள் அடிக்கடி நிகழுமா என்று கேட்டார், அவர் தனது வாழ்நாளில் இதுபோன்ற ஒன்றையும் கண்டதில்லை என்று சொன்னார்.'' அது 2006-ல் நடந்தது; அடுத்த பேரழிவு 2010 இல் வந்தது, அப்போது லே நகரத்தில் நான்கில் ஒரு பங்கை அழித்தது. அதில் 1,000 பேர் உயிரிழந்தனர். அதற்கு பிறகு 2013 மற்றும் 2017-ல் மேலும் இரண்டு பெரிய பேரழிவுகள் வந்தன, மத்தியில் பல சிறிய பேரழிவுகளும் நிகழ்ந்தன.''

உயர்ந்த இந்து குஷ் மலையிலுள்ள இந்த மோசமான நிலைமை, உள்ளூர் மக்களின் வாழ்க்கைகளை மட்டும் அழிக்கவில்லை, ''இது உங்களின் அடுத்த தலைமுறைக்கு கிடைக்க வேண்டிய நீரை இழக்கச் செய்கின்றது. இது இப்போது வெள்ளங்களை ஏற்படுத்தி வருகின்றது, ஆனால் அடுத்த தலைமுறை எதிர்கொள்ளும் வரட்சி இன்னும் மோசமாக இருக்கும். ஏனெனில், இந்த பனிப் பாறைகள் இந்தியாவின் வடக்கு பிராந்தியம், கங்கை மற்றும் பாகிஸ்தானின் இந்தஸ் ஆகியவற்றின் சமவெளிகளுக்கு நீரளிக்கின்றன. தற்போது கொந்தளிப்பாக கீழே பாயும் இந்த நீர் அழிவுகளை ஏற்படுத்து கின்றது; ஆனால் நாளை வரும் நிலைமை அதைவிட மோசமாக இருக்கும்.''

### செயற்கை பனிப்பாறைகளை உருவாக்குதல்

காலநிலைக் நெருக்கடியின் மோசமான விளைவுகளைப் புரிந்து கொண்டு, தற்போதைய நெருக்கடியை சமாளிக்க புதுமையான மாற்றங்களை மேற்கொள்வதின் அவசியத்தை ரோட்டரி உறுப்பினர்கள் உணர வேண்டும் என்று வலியுறுத்திய வாங்சுக், உருகி வரும் பனிப்பாறைகள் காரணமாக ஏற்படக்கூடிய தண்ணீர் பற்றாக்குறையை சமாளிக்க, ''இயற்கை பனிப்பாறைகள் அழிந்து வரும் சூழலில், தண்ணீர் ஓட்டம் இருக்கும் வரை நாமே செயற்கை பனிப்பாறைகளை உருவாக்க முயல வேண்டும் எனத் தீர்மானித்து, அதற்கான பணிகளைத் தொடங்கியுள்ளோம்'' என்று தெரிவித்தார்.

இதற்கான செயல்முறை, ''குளிர்காலத்திலும் ஓடும் நீரோட்டங்களை மீண்டும் உறையச் செய்வதுதான். நீர் முழுவதும் உறையுமென நீங்கள் நினைக்கலாம், ஆனால் பனியின் அடியில் சில நீரோட்டங்கள் தொடரும். இவற்றை நாம் பள்ளியில் கற்றுக்கொண்ட ஜியோமெட்ரி வடிவங்களைப் பயன்படுத்தி பனிப்பாறைகளாக உறையச் செய்கிறோம். சாதாரண பனிகள் பொதுவாகத் தட்டையாக உருவாகுகின்றன, சூரியனுக்கு நேரடியாக வெளிப்படுகையில் மொத்தமாக உருகி விடுகின்றன. ஆனால் சற்று ஜியோமெட்ரியை பயன்படுத்தி, கோள வடிவங்களாகவும், கூம்பு வடிவங்களாகவும் உருவாக்கினால், குறைந்த மேற்பரப்பில் அதிகளவை பெற முடியும். இது விவசாயிகளுக்கு மிகவும் தேவையானது.''

அவர்கள் 6 முதல் 12 மாடி கட்டிடங்கள் உயரம் கொண்ட பனிப்பாறைகளை உருவாக்கியுள்ளனர் என கூறினார். இதில் பெரிய பாறைகள் 10 மில்லியன் லிட்டர் தண்ணீரை வைத்திருக்கும் திறன் கொண்டவை. ''அவை குளிர்காலத்தில் உருவாகின்றன, பின்னர், அதன் வடிவத்தின் காரணமாக மார்ச் அல்லது ஏப்ரல் மாதங்களில் உருகுவதில்லை. விவசாயிகளுக்கு உண்மையிலேயே தண்ணீர் தேவைப்படும் ஜூன் வரை அவை இருக்கும்.'' செயற்கையாக உருவாக்கப்பட்ட இந்த பனிப்பாறை மெதுவாக உருகுவதால், சொட்டு நீர் பாசனம் போல் இந்த அமைப்பு செயல்படுவதால் தண்ணீர் கிடைக்கிறது. எனவே, இது வரை மரங்களைப் பார்த்திராத பாலைவனங்களில் மரங்கள் எங்களிடம் பூக்கின்றன என்றார்.

''இந்த சிறிய செயற்கை பனிப்பாறைகள் அல்லது சூரிய சக்தி இமயமலை மற்றும் அதன் பனிப்பாறைகளின் விதியை மாற்றாது. இந்த கிரகத்தில் விஷயங்கள் மாற, புதுமை மிகப் பெரிய அளவில் நடக்க வேண்டும்.''

துரதிருஷ்டவசமாக, நாம் தேவையான மாற்றத்தை போதுமான வேகத்தில் ஏற்றுக்கொள்ளவில்லை. ''பொறியாளர்கள் மற்றும் தொழில் நுட்ப வல்லுநர்கள் தீர்வுகளைக் கண்டுபிடிப்பார்கள் என்று நாம் நினைக்கிறோம். சிக்கல் தொழில் நுட்பத்தில் அல்ல, அது நமது உலகத்தைப் பற்றிய பார்வையில், எதிர்கால தலைமுறைகளுக்கான நமது உணர்விலும், மனிதர்களுக்கு மற்றும் மற்ற உயிரினங்களுக்கான நமது பரிவில் தான் உள்ளது.

புதுமைக்கான மனிதனின் பாரம்பரிய தேடலில் நம்பிக்கை வைத்து, ''மனிதர்களின் மிகப் பெரிய கண்டுபிடிப்பு ராக்கெட்டுகள் அல்லது மின்சார வாகனங்கள் அல்ல என்று நான் நினைக் கிறேன். என்னைப் பொறுத்த வரை, அவர்களின் மிகப்பெரிய கண்டுபிடிப்பு கடவுள் என்ற சித்தாந்தம். அது தற்போதைய காலத்திற்கு மாற்றியமைக்கப்பட வேண்டும்.'' ஏனெனில் வலிமையே சரியானது என்று கருதப்பட்ட, சட்டமோ அல்லது அமைப்பு முறையோ இல்லாத காலத்தி லிருந்தே அது இருந்துக் கொண்டிருக்கிறது.

வன்முறையால் நிரம்பிய உலகில், வலிமையே சரி என்று இருந்த இடத்தில், கடவுள் மற்றும் மதம் என்ற சித்தாந்தத்தை மனிதன் கொண்டு வந்தான், அது அற்புதகமாக வேலை செய்தது! ''ஆனால் இப்போது இன்றைய பிரச்சனைகளை சமாளிக்க, தற்போதைய காலத்திற்கு ஏற்றவாறு மாற்றியமைக்கப்பட்ட கடவுள் 2.0 என்ற புதிய பதிப்பு தேவைப் படுகிறது'' என்று அவர் உரையை முடித்தார்.

புகைப்படங்கள்: ரஷீதா பகத்


# XAVIER UNIVERSITY SCHOOL OF MEDICINE AND KLE ANNOUNCE

# 6 YEARS

PRE-MED TO

## DOCTOR OF MEDICINE / DOCTOR OF VETERINARY MEDICINE

## PROGRAMME





**First 2 years**
Start @
KLE, Campus
Karnataka, India

**Next 2 years**
Continue @
Xavier's Campus
Aruba, Caribbean
island - Netherlands

**Next 2 years**
Complete @
Xavier's affiliated
Teaching Hospitals
USA / Canada

## TO ATTEND

# WEBINAR

## REGISTER NOW

**XUSOM.COM/INDIA/**

**First 2 years**
Start @
KLE, Campus
Karnataka, India

**Next 3 years**
Continue @
Xavier's Campus
Aruba, Caribbean
island- Netherlands

**Final year**
Complete @
Xavier's affiliated
Teaching Hospitals
USA / Canada

**Limited Seats**

**Session starts in January 2025**

To apply, Visit:
**application.xusom.com**
email: infoindia@xusom.com

XAVIER STUDENTS ARE ELIGIBLE FOR **H1/J1 Visa** PROGRAMME

ADVT.

# உறுப்பினர் சரிவை தடுக்க வேண்டும்

ரஷீதா பகத்

ரோட்டரிக்கு புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பதில் இந்திய ரோட்டேரியன்கள் அரும்பணியாற்றி வருகின்றபோதிலும் உறுப்பினர்கள் விலகல் என்பது பெரும் பிரச்னையாகவே உள்ளது என்று RI தலைவர் ஸ்டெஃப்னி அர்ச்சிக், கொச்சி மண்டல கழக மாநாட்டில் தொடக்க உரையாற்றுகையில் தெரிவித்தார்.

ரோட்டரியின் எதிர்காலம் அதன் வளர்ச்சியில் உள்ளது. அதற்கு மூன்று வழிகள் உள்ளன. “முதலாவது நமது பாரம்பரியமான சங்கங்களுக்கு உறுப்பினர்களை ஈர்ப்பது. ஆனால், பாரம்பரிய சங்கங்கள் மீது ஆர்வம் இல்லாதவர்கள் புதிய மாதிரிகளுடன் புதிய சங்கங்களை உருவாக்குவோம். மக்கள் வருவதற்கு புதிய வழிகளை உருவாக்குவோம். மூன்றாவது வழி நம்மிடம் இருக்கும் உறுப்பினர்கள் வெளியேறாமல் தக்கவைப்பது. அதுதான் நாம் இந்தியாவில் செய்ய வேண்டிய முக்கிய பணியாகும்” என்றார் அவர்.

இந்தியாவில் உள்ள ரோட்டரி சங்கங்களுக்கு புதிய உறுப்பினர்களை ஈர்ப்பதில் எந்தப் பிரச்னையும் இல்லை. உங்களின் ஈர்ப்பு நடவடிக்கை வியக்கத்தக்க வகையில் உள்ளது. “ஆனால், இந்தியாவிலிருந்து வரும் உறுப்பினர்கள் சேர்க்கை தொடர்பான ஆய்வு அறிக்கையை பார்க்கும்போது உயர்ந்து கொண்டே போகும் உறுப்பினர்கள் எண்ணிக்கை டிசம்பர் 31 மற்றும் ஜூலை 1 தேதிகளில் சறுக்கலை சந்திக்கிறது. உறுப்பினர்கள் வெளியேறுவதுடன், நிலுவைத் தொகையையும் செலுத்து வதில்லை. ஒரு நல்ல செய்தி என்னவெனில் சறுக்கலுக்குப் பின் நாம் மீண்டு எழுவதுதான். ஆனால், உறுப்பினர்களை இழக்காமல் இருந்திருந்தால் அந்த வரைபடம் எப்படி இருக்கும்? என்பதுதான் நான் குறிப்பிட வந்த விஷயம். நமது சங்கங்களை நாம் தவிர்க்கமுடியாததாக மாற்றினால் உறுப்பினர்கள் விலகலால் ஏற்படும் சரிவை நாம் தடுத்து நிறுத்த முடியும். உறுப்பினர்களும் வெளியேறாமல் இருப்பார்கள்.

இதற்கான பதில் நமது செயல் திட்டத்தில் உள்ளது என்று RI தலைவர் கூறினார். அதில் நான்கு முன்னுரிமைகள் பட்டியலிடப் பட்டுள்ளன. இதை சங்கங்கள் எப்படி பயன்படுத்தலாம் என்பது பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. சங்கத்தின் கலாசார செயல்பாடுகளை பாருங்கள். சங்கம் எப்படிச் செயல்படுகிறது. இப்போதுள்ள நிலையிலிருந்து நாம் இன்னும் எப்படி முன்னேறலாம் என்று பார்க்க வேண்டும். ஒரு வேளை நன்றாகச் செயல்படவில்லை என்றால் எப்படி சிறப்பாக செயல்படுவது என்பது பற்றி யோசிக்க வேண்டும். எனவே முதலில் செயல் திட்டத்தில் கவனம் செலுத்துங்கள். அதன் பின்னர் பிரச்னைக்குத் தீர்வுகாணலாம். ஒவ்வொரு ஆண்டும் டிசம்பர் மற்றும் ஜூலை மாதங்களில் வீழ்ச்சியை சந்திப்பதற்கு பதிலாக நாம் வளர வேண்டும்.

இது தனக்கு முக்கியமானது என்று ஸ்டெஃப்னி தெரிவித்தார். அவர் 34 ஆண்டுகள் ரோட்டரிக்காக செலவழித்துள்ளார். அதன் மூலம் தலைமைத்துவம், ஒருமைப்பாடு, பன்முகத்தன்மை போன்ற முக்கிய விழுமியங்களில் அவருக்கு நல்ல அனுபவம் இருந்தது. இதற்காக அவர் ரோட்டரிக்கு மிகவும் நன்றியுள்ளவராக இருக்கிறார்.

மற்றொரு முக்கியமான அம்சமாக உறுப்பினர்கள் விலகல், எண்ணிக்கையில் ஏற்பட்டுவரும் தொடர் சரிவை சுட்டிக்காட்டி அவர் பேசினார். “உறுப்பினர்கள் எண்ணிக்கை அதிகரிப்பதில் தொடர்ந்து நாம் கவனம் செலுத்தாமல் இருந்தால் இறுதியில் சங்கமே இல்லாமல் போய்விடும்”. இது ஒவ்வொரு ஆண்டும் நடக்கும். சங்கத்தில் 20 உறுப்பினர்கள் இருக்கிறார்கள் என்றால் 2 பேர் கடந்து செல்வார்கள், 2 பேர் இடமாற்றம் காரணமாக வெளியேறுவார்கள். ஒருவர் சங்கத்தின் செயல்பாடுகள் பிடிக்காமல் வெளியேறலாம். “எனவே முதல் ஆண்டில் நீங்கள் புதிய உறுப்பினர்களைச் சேர்க்கவில்லை என்றால் 20 பேர் உள்ள உங்கள் சங்கத்தின் உறுப்பினர் எண்ணிக்கை 15 ஆக குறைந்துவிடும். அடுத்த ஆண்டு, உறுப்பினர்கள் சேர்க்கையில் கவனம் செலுத்தாவிட்டால் சங்கத்தில்




*RI தலைவர்*
*ஸ்டெஃப்னி அர்ச்சிக்.*

12 பேர் மட்டுமே இருப்பார்கள். உலகில் உள்ள ஒவ்வொரு சங்கமும் விலகிச் செல்லும் உறுப்பினர்களுக்கு பதிலாக புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பதில் கருத்தாக இருக்க வேண்டும். ரோட்டரியின் மாயாஜாலத்தை பகிர்ந்து கொள்வதன் மூலம் நாம் பிரகாசமான ஆரோக்கியமான எதிர்காலத்தை நோக்கி பயணிக்கலாம்.


நாம் (ரோட்டேரியன்கள்) கவனம் செலுத்த வேண்டிய இரண்டாவது விஷயம் என்னவென்றால், “நாம் அமைதியை கட்டமைப்பவர்கள். அதற்கு நமக்கு உதவ பல கருவிகள் உள்ளன. உலக கருத்தொற்றுமை மற்றும் அமைதி என்னும் அடித் தளத்தில் கட்டமைக்கப்பட்டது

> “தலைமையில் மாற்றம் வந்தாலும் அனைத்து நிலைகளிலும் நல்ல திட்டங்கள் தொடர வேண்டும். உங்களுக்கு தலைமை பதவி இல்லாததால் நீங்கள் தலைவர் இல்லை என்று அர்த்தமல்ல.
>
> **ஸ்டெஃப்னி அர்ச்சிக்**
> RI தலைவர்




RID *அனிருதா ராய்சௌத்ரி, ஷிப்ரா,* RI *தலைவர் ஸ்டெஃப்னி,* PDG *ஜான் டேனியல் மற்றும் மீரா.*

தான் ரோட்டரி. நாம் அமைதியை வலியுறுத்தும் தரகர்களோ அல்லது பணயக் கைதிகளை விடுவிப்பதற்கு பேச்சுவார்த்தை நடத்தும் அல்லது போரை முடிவுக்கு கொண்டு வரும் மக்கள் அல்லது அமைப்போ அல்ல. அது நமது வேலை அல்ல. அமைதியை கட்டமைப்பவர்கள் என்ற முறையில் நாம் செய்வதெல்லாம் மோதல்கள் வராமல் தடுப்பதுதான். சமூகத்தில் அமைதியான சூழ்நிலையை உருவாக்குவதுதான். மக்களுக்கு சாப்பிட போதுமான உணவு இல்லை என்றால் அவர்களுக்கு உணவளிப்போம். மக்களுக்கு தூய்மையான குடிநீர் தேவை என்றால் அதற்கு ஏற்பாடு செய்வோம். மக்கள் கல்வி அறிவில்லாதவர்களாக இருந்தால் அவர்களுக்கு கல்வி கற்பிப்போம். மக்களுக்கு வேலைவாய்ப்பு தேவைப்பட்டால் அவர்களுக்கு திறன்களை வழங்குவோம். அமைதியான சமூகத்துக்கு தேவை யான சூழலை உருவாக்குவோம். அவநம்பிக்கை கொண்ட மக்கள் அவநம்பிக்கையான காரியங்களைச் செய்கிறார்கள். குடிநீர் இல்லாதவர்கள் சுத்தமான குடிநீருக்காகப் போராடுகிறார்கள்.




*ரோட்டரி அமைதிக் கம்பம்.*

ரோட்டரி கற்றல் மையத்தில் உள்ள அமைதி முன்னெடுப்பு அகாதெமிக்கு வருகை தருமாறு ரோட்டேரியன்களை ஸ்டெஃப்னி வலியுறுத்தி கேட்டுக் கொண்டார். இது ஒரு ஆன்லைன் கற்றல் திட்டமாகும். “இங்கு இரண்டு மணி நேரத்தில் நீங்கள் அமைதி முயற்சி க்கான 8 முக்கிய அம்சங்களை கற்றுக்கொள்ள முடியும்”. மற்றொரு பயனுள்ள திட்டம் இளைஞர் பரிமாற்றத் திட்டமாகும். இதன் மூலம் மாணவர்கள் பல்வேறு நாடுகளுக்குச் சென்று அழைப்பு விடுத்த நாடுகளிலுள்ள குடும்பத்தினர், ஆசிரியர்கள், ரோட்டேரியன்களுடன் கலந்துரையாட முடியும். அவர்கள் நாட்டு மொழி, கலாசார மற்றும் செயல்பாடுகளை தெரிந்துகொள்ள

முடியும். சுருக்கமாகச் சொன்னால் அவர்கள் ஒரே நேரத்தில் அமைதியை கட்டமைக்கிறார்கள்.

பல்வேறு இடங்களிலும் சமூகத்திலும் ரோட்டரி அமைதிக் கம்பம் நடும் திட்டத்தை செயல் படுத்துமாறு அவர் ரோட்டேரி யன்களை வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார். உள்ளூர் மொழியில் “பூமியில் அமைதி நிலவட்டும்” என்னும் எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட அந்த கம்பம் நினைவுச்சின்னமாக திகழட்டும். “புதிய அமைதிக் கம்பங்களில் “QR” குறியீடு உள்ளது. அதன் மூலம் ரோட்டரியைப் பற்றிய தகவல்களைத் தெரிந்துகொள்ள முடியும். நான் அந்த அமைதிக் கம்ப திட்டத்தை விரும்புகிறேன். ஏனெனில் இது உள்ளூர் ரோட்டேரி யன்களுக்கு பெருமை சேர்ப்பதாகும் என்று அவர் மேலும் கூறினார்.

இஸ்தான்புல்லில் ரோட்டரியின் புதிய அமைதி மையத்தை ஏற்படுத்தியதன் முக்கியத்துவத்தை கொண்டாடும் வகையில் “Healing in a Divided World” என்னும் தலைப்பில் எனது தலைமையில் அமைதி மாநாடு வரும் 2025 பிப்ரவரி 20–21 தேதிகளில் நடைபெற உள்ளது என்று கூறிய அவர், இந்த கருத்தரங்கில் பிரபலமான பேச்சாளர்கள் கலந்து கொள்கின்றனர். அமைதி மற்றும் அமைதி நடவடிக்கையில் ஈடுபடுதல், அமைதிக் கம்பத்தை நிறுவுதல், அமைதி மையத்துக்கு சென்று அங்கு பயிற்சி பெறும் மாணவர்களைச் சந்தித்தல் என பல நிகழ்வுகள் நடைபெற உள்ளன. அரங்கத்தில் உள்ள அனைத்து ரோட்டேரியன்களும் இஸ்தான்புல் கருத்தரங்கில் பங்கேற்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

அமெரிக்காவில் உள்ள அமைதி மையத்தில் நடைபெற்ற பட்டமளிப்பு விழா நிகழ்ச்சியில் ஸ்டெஃப்னி கலந்து கொண்டார். மேலும் இங்கு பெற்ற கற்றல் அனுபவத்தைக் கொண்டு மாணவர்கள் என்ன செய்ய விரும்புகிறார்கள் என்பதையும் கேட்டறிந்தார். “25 இளைஞர்கள் எழுந்து நின்று உலகத்தை மாற்றப்போகும் அற்புதமான வழிகளைப் பேசியதை நான் ஆச்சரியத்துடன் கேட்டேன். எனக்கு 25 வயதாக இருந்தபோது நான் என்ன செய்துகொண்டிருந்தேன்? நிச்சயமாக நான் உலகை மாற்றவில்லை.”



இது எனக்கு பத்தாவது மாநாடு என்று கூறிய ஸ்டெஃப்னி, ரோட்டரி தலைமை மற்றும் திட்டங்களுக்கு தாரக மந்திரத்தை தொடர வேண்டியதன் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்தினார். “தலைமை மாற்றத்தால் திட்டங்களைச் செயல்படுத்துவதை நாம் நிறுத்திவிட வேண்டும் என்று அர்த்தமல்ல”. சேகர் மேத்தா, RI தலைவராக இருந்த போது மகளிர்க்கு அதிகாரம் அளிக்கும் திட்டத்தைக் கொண்டுவந்தார். அது எல்லா இடங்களுக்கும் பரவியது. சங்கங்களும் இளம் பெண்கள் மற்றும் மகளிரை தொடர்ந்து ஆதரித்து வருகின்றன. கடந்த ஆண்டு கோர்டன் மெக்கினலி, மனநலப் பிரச்னைகளை எப்படிக் கையாள்வது என்பது பற்றியும், அது தொடர்பான களங்கத்தை எப்படி அகற்றுவது என்பது பற்றியும் விழிப்புணர்வை ஏற்படுத்தினார். உலகம் முழுவதும் உள்ள சங்கங்கள் அவரது வேண்டு கோளை ஏற்று மனநல ஆரோக்கியத் துக்கான முயற்சிகளில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றன.”

எனவே தலைமையில் மாற்றம் வந்தாலும் அனைத்து நிலைகளிலும் நல்ல திட்டங்கள் தொடர வேண்டும். இதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். புதியவர்கள் வரும்போது நமக்கு புதுப்புது யோசனைகள் புதிய கண்ணோட்டங்கள் கிடைக்கும். உங்களுக்கு தலைமை பதவி இல்லாததால் நீங்கள் தலைவர் இல்லை என்று அர்த்தமல்ல. நமது சங்கத்தை வலிமைப்படுத்த வேண்டுமானால் நாம் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். அப்படிச் செய்தால் நீடித்த மாற்றத்தை உருவாக்க முடியும்.”

ரோட்டரி இன்டர்நேஷனல் இயக்குநரும், அமைப்பாளருமான அனிருதா ராய்சௌத்ரி பேசுகையில், PDG ஜான் டேனியல் தலைமையில் மாநாட்டின் குழுவினர் கடுமையாக பணியாற்றி மறக்கமுடியாத அனுபவத்தை தந்துள்ளனர். பாம்பு படகு போட்டி, கோஃல்ப் போட்டிகள் நடத்தி TRF-க்கு நிதி திரட்டியுள்ளனர். அரை மராத்தான் மற்றும் தனித்து வமான திட்டங்கள் அந்த இடத்தில் தொடங்கிவைக்கப்படும். DRRs மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட DRRs உள்பட 50 ரோட்ராக்டர்கள் இதில் பங்கேற்றனர், என்றார்.

முன்னதாக மாநாட்டுக்கு வந்த பிரதிநிதிகளை வரவேற்றுப் பேசிய ஜான் டேனியல், சாதனையாக 1,200 பங்கேற்பாளர்கள் மாநாட்டில் பதிவு செய்திருப்பதாக கூறினார்.

படங்கள்: ஹேமந்த் பன்ஸ்வால்

# பயன்படுத்தப்படாத CSR ஆதாரங்கள் மற்றும் பயன்படுத்தப்படாத பணியாளர்கள்

ஜெய்ஸ்ரீ

"ரோட்டரியின் மாயம் மூத்த தலைவர்களிடையே மட்டும் நடப்பதில்லை. உங்கள் சங்கங்களில், உங்கள் சமூகங்களில், ஒவ்வொரு முறையும் நீங்கள் ஒரு யோசனையைச் செயல்படுத்தி ஒருவரின் வாழ்க்கையை மாற்றும்போது அவை நடக்கின்றன. ஒரு சிறந்த உலகத்தை உருவாக்க நீங்கள் செய்யும் அனைத்திற்கும் நன்றி." இந்த வார்த்தைகளின் மூலம் RI தலைவர் ஸ்டெஃப்னி அர்ச்சிக், TRF கருத்தரங்கில் அறக்கட்டளைக்கு தங்கள் பங்களிப்பைத் தொடர ரோட்டேரியர்களை ஊக்கப் படுத்தினார். வாழ்க்கையையும் சமூகங்களையும் மாற்றியமைப்பதில் TRFன் பங்கை எடுத்துக்காட்டும் வகையில் அவர் தனது "எண்ணற்ற அனுபவங்களை" பகிர்ந்து கொண்டார்.



RI தலைவர் ஸ்டெஃப்னி அர்ச்சிக்

TRF அறங்காவலர் பரத் பாண்டியாவால் நடத்தப்பட்ட குழு விவாதத்தில், இன்ஸ்டிடியூட் கன்வீனர் மற்றும் RI இயக்குநர் அனிருதா ராய்சௌத்ரி, RI இயக்குநர் ராஜு சுப்ரமணியன் மற்றும் TRF அறங்காவலர் மார்தா ஹெல்மன் ஆகியோர் பல்வேறு ரோட்டரி அம்சங்களில் தங்கள் எண்ணங் களைப் பகிர்ந்து கொண்டனர்.

இந்தியாவின் CSR-ஐ முன்னிலைப் படுத்திய சுப்ரமணியன், கார்ப்பரேட் பங்களிப்புகள் ஆண்டுக்கு ரூ.30,000 கோடியைத் தாண்டுவதாகக் குறிப் பிட்டார். "பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் பிற தொழில் துறை அலகுகளின் முழு திறனையும் நாம் இன்னும் பெறவில்லை, அவை உண்மையில் அவற்றின் நிதிகள் அர்த்தமுள்ள தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய நம்பகமான வழிகளைத் தேடுகின்றன. ரோட்டரியின் நுணுக்கமான நிதி மேலாண்மை மற்றும் சமூகத் திட்டங் களுக்கான அர்ப்பணிப்பு ஆகியவை அதை சிறந்த பங்காளியாக ஆக்குகின்றன" என்று அவர் கூறினார். கார்ப் பரேட்களுடன் ஈடுபடுவதற்கு ரோட்டரிகள் தங்கள் தொழில்முறை நெட்வொர்க்குகளைப் பயன்படுத்து மாறு வலியுறுத்தினார்.

பயன்படுத்தப்படாமல் இருக்கும் TRF-ன் தொழில் நுட்ப பணியாளர்களின் முக்கியத்து வத்தையும் அவர் வலியுறுத்தினார். "இணக்கத்தை உறுதிப்படுத்துவதற்கு அப்பால், இந்த பணியாளர்கள் மானிய முன்மொழிவுகளை வலுப்படுத்தலாம், விண்ணப்பப் பிழைகள் மற்றும் நிராகரிப்புகளைக் குறைக்கலாம். அவர்கள் ரோட்டரியின் ஏழு கவனம் செலுத்தும் பகுதிகளில் நிபுணர்கள். பாடம் சார்ந்த நிபுணர்களான அவர்களை ஆரம்பத்திலேயே ஈடுபடுத்துங்கள்" என்று அவர் அறிவுறுத்தினார்.

RRFC-களின் பங்கைப் பாராட்டிய RI இயக்குனர், "கொடுப்பது அதிகரித்து வருகிறது, மற்றும் 100% வழங்கும் சங்கங்கள் இப்போது நிஜமாகிவிட்டன, என்றார்.

ரோட்டரியின் போலியோ ஒழிப்பு முயற்சிகள் குறித்து பாண்டியாவின் கேள்விக்கு பதிலளித்த RI இயக்குனர் ராய்சௌத்ரி, குறிப்பாக பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் போன்ற பகுதிகளில் அரசியல் ஸ்திரமின்மை மற்றும் அணுகல் சிக்கல்கள் நீடிக்கிறது என கூறினார். இந்த சவால்களை எதிர்கொள்ள, ரோட்டரி, அதன் சர்வதேச போலியோபிளஸ் குழு மற்றும் பிராந்திய பங்காளர்கள் மூலம், மூலோபாய நடவடிக்கை களைத் தொடங்கியுள்ளது மற்றும் நோய்த்தடுப்பு ஊக்குவிப்பில் கவனம் செலுத்துகிறது. சமீபத்தில் TRF தனது கூட்டாளரான குளோபல் போலியோ ஒழிப்பு முன்முயற்சிக்கு $27.5 மில்லியனை வழங்கியது, இது போலியோ பரவும் நாடுகள் மற்றும் அவற்றின் அண்டை நாடுகளில் நடவடிக்கைகளை தீவிரப்படுத்து வதற்காக வழங்கப்பட்டது.

TRF அறங்காவலர் மார்தா ஹில்மேன், இந்தியாவிற்கு தனது மூன்றாவது விஜயத்தை மேற்கொண்டிருந்தார், 2019-ல் பெங்களூருவில் ஒரு செக்டேம் திட்டத்தை பார்வை யிட்டதை அவர் நினைவு கூர்ந்தார். "அதன் எளிமை மற்றும் சுற்றுச்சூழலில் ஆழமான தாக்கம் - வறண்ட நிலத்திற்கு புத்துயிர் அளித்தல் மற்றும் நிலையான விவசாயத்தை உருவாக்குதல் ஆகியவற்றால் நான் ஆச்சரியம்



**இடமிருந்து:** TRF *அறங்காவலர் பரத் பாண்டியா,* RID *அனிருதா ராய்சௌதுரி,* TRF *அறங்காவலர் மார்தா ஹெல்மன் மற்றும்* RID *ராஜு சுப்பிரமணியன்.*

அடைந்தேன். ரோட்டரி GGகளில் எட்டில் ஒரு பங்கு இந்தியாவில் நடக்கிறது. கொடுப்பதில் இந்தியா இரண்டாவது இடத்தில் இருந்தாலும், GG-களை திறம்பட பயன்படுத்துவதில் முதலிடத்தில் உள்ளது. CSR உடன் நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பதை உலகம் முழுவதும் கவனித்துள்ளது, மேலும் அந்த வெற்றியை உலகம் முழுவதும் பின்பற்றுவோம் என்று நம்புகிறோம்'' என்று அவர் கூறினார்.

ரோட்டரி செயல் திட்டத்துடன் TRF எவ்வாறு இணைகிறது என்ற பாண்டியாவின் கேள்விக்கு பதிலளித்த மார்த்தா, "TRF தான் ரோட்டரியின் செயல் திட்டம். இது உக்ரைன் போர் நிவாரணத்திற்காக $17 மில்லியன் நிதியளித்துள்ளது, மோதல்களுக்கு மத்தியிலும் ரோட்டரி வளர உதவுகிறது. சுமார் 1,000 ரோட்டேரியன்களுடன், போர் தொடங்கியபோது உக்ரைனில் ரோட்டரி புதிதாக இருந்தது. கடைசியாக நான் சோதித்தபோது எண்ணிக்கை 1,600-ஆக அதிகரித்துள்ளது. வெடிகுண்டுகள் அங்கே விழுகின்றன, இருந்தும் தொழிலதிபர்கள் மற்றும் பெண்கள் ரோட்டரியில் சேர நேரம் உள்ளது, ஏனெனில் அவர்கள் ரோட்டரியின் தாக்கத்தைக் காண்கிறார்கள். ரோட்டரி மாறிக்கொண்டிருக்கிறது. மிகப்பெரிய தழுவல், நிச்சயமாக, சுற்றுச்சூழலாகும், ஏனென்றால் நமது சூழல் ஆரோக்கியமாக இல்லாவிட்டால் அமைதி, மகிழ்ச்சி இருக்காது என்பதை நாம் கற்றுக்கொள்கிறோம். செயல் திட்டம் என்பது அறக்கட்டளை மற்றும் நாங்கள் செய்யும் பணிகளைப் பற்றி பேசுவதற்கான மற்றொரு வழியாகும்.''

ரோட்டரியின் அமைதி மையங்களைப் பற்றி அவர் குறிப்பிடுகையில்: "அமைதி என்பது போர் இல்லாதது மட்டுமல்ல. லெபனானில் உள்ள போர்நிறுத்தம் அமைதிக்கு சான்றில்லை. உண்மையான அமைதியானது அடித்தளத்தில் இருந்து வளர்க்கப் படுகிறது மற்றும் அதற்கு அமைப்பு சிக்கல்களை தீர்க்கும் கட்டமைப்புகள் தேவைப்படுகின்றன. உலகெங்கிலும் உள்ள ரோட்டரி பீஸ் ஃபெலோக்கள் மேற்கொண்டுள்ள சவாலான, நீண்ட காலப் பணி இதுவாகும்'', என்றார்.

ரோட்டரியின் எதிர்காலம் குறித்து அவர் கூறியது, "நம் போலியோ திட்டங்களில் இருந்து இரண்டு விஷயங்களைக் கற்றுக்கொண்டோம் - ஒன்று, சங்க மட்டத்திலிருந்து சிறந்த முயற்சிகள் தொடங்குகின்றன. போலியோ திட்டம் ஒரு சங்கத் திட்டமாக தொடங்கப்பட்டது. மற்றும் இரண்டு, நாம் பெரிய, சிறந்த, தைரியமான விஷயங்களைச் செய்தால், உலகத்தை மாற்றலாம் - ப்ரோகிராம்ஸ் ஆஃப் ஸ்கேல் போன்ற திட்டங்கள் மூலம் என்றார்.

இந்தியாவின் பங்களிப்புகளை கூறி, பல ஆண்டுகளாக TRF வழங்குவதில் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை பெற்றுள்ளதை பாண்டியா சுட்டிக்காட்டினர். பங்களிப்புகள் 2019–20ல் $7.1 மில்லியனிலிருந்து 2022–23ல் $8.9 மில்லியனாக உயர்ந்தது, இந்த ஆண்டு வெறும் ஐந்து மாதங்களில் 12 மாவட்டங்கள் 100% கிவிங் சங்கங்களின் மைல்கல்லை எட்டியுள்ளன.

"நம் மண்டலங்கள் மொத்த GG களில் 22–23 சதவிகிதம் செய்கின்றன. கடந்த ரோட்டரி ஆண்டில் 17.97 மில்லியன் டாலர் மதிப்புள்ள 279 மானியங்களைச் செயல்படுத்தி யுள்ளோம், 2022–23ல் 14.3 மில்லியன் டாலர் மதிப்புள்ள 219 மானியங்களைச் செய்துள் ளோம்.'' CSR மானியங்களில் சங்கங்களின் செயல்பாடும் பாராட்டுக் குரியது, என்றார். 2021–2022 CSR மானியங்களின் முதல் ஆண்டாகும். அப்போது $2.8 மில்லியனில் இருந்து, கடந்த ஆண்டு $8.1 மில்லியனாக அது வளர்ந்தது. இந்தியாவில் உள்ள ரோட்டரி சங்கங்கள் 390க்கும் மேற்பட்ட நிறுவனங்களுடன் கூட்டு சேர்ந்து $10.6 மில்லியன் திரட்டியுள்ளன, என்று அவர் கூறினார்.■

# அடுத்த ரோட்டரி அமைதி மையம் புனே அல்லது சியோலில்

ரஷீதா பகத்

*அடுத்த ரோட்டரி அமைதி மையம் புனேவில் உள்ள சிம்பியோஸிஸ் பல்கலைக்கழகம் அல்லது சியோலில் நிறுவப்படலாம் என்று அமெரிக்காவில் உள்ள பூத்பே ஹார்பர் ரோட்டரி சங்க உறுப்பினரும், TRF அறக்கட்டளை அறங்காவலருமான மார்த்தா ஹெல்மன், கொச்சி இன்ஸ்டிடியூட்டில் நடந்த ஒரு பேட்டியில் ரோட்டரி செய்திக் குழுவிடம் தெரிவித்தார். துருக்கி தலைநகர் இஸ்தான்புல்லில் TRF சமீபத்தில் ரோட்டரி அமைதி மையத்தை நிறுவப்படுவதை சாத்தியமாக்கிய, ஒட்டோ மற்றும் ஃப்ரான் வால்டர் அறக்கட்டளை மூலம் 15 மில்லியன் டாலர் நிதி பெறுவதற்கு முக்கிய காரணமாக இருந்தவர் மார்த்தா ஹெல்மன்.*

**அவரது பேட்டியின் சுருக்கம் இதோ:**

*நீங்களும், மறைந்த உங்கள் கணவரும் TRF-க்காக பெரும் தொகையை பெற்றது குறித்து பேசுவதற்கு முன்னதாக, நீங்கள் ஏன், எப்போது, எப்படி ரோட்டரியில் சேர்ந்தீர்கள் என்று கூறுங்கள்.*

மறைந்த எனது கணவரும் நானும் 2003 ஆம் ஆண்டு ஒன்றாக ரோட்டரியில் சேர்ந்தோம். எங்களின் சிறிய சமூகத்தில் நாங்கள் புதியவர்கள். அப்போதுதான் பே ஹார்பருக்கு இடம்பெயர்ந்தோம். மக்களைச் சந்திக்க விரும்பியதால் ரோட்டரியில் சேர்ந்தோம். அது ஒரு எளிமையான நிகழ்வு.

*இதுவரையிலான உங்கள் பயணம் பற்றி?*

முதல் ஆண்டு ரோட்டரி எனக்கானதா என்பது குறித்து உறுதியாகத் தெரிய வில்லை. அதன் பின்னர் நான் சர்வதேச சேவையைக் கண்டறிந்தேன். மானியங்கள் பற்றி கேள்விப் பட்டதும் வியந்துபோனேன். 2006–07-ல் சங்கத்தின் தலைவ ரானேன். அதைத் தொடர்ந்து மாவட்ட அறக்கட்டளைக் குழுவில் (இப்போது அமைதிக்கான பெரு நன்கொடையாளர் முன்முயற்சி) ஒருங்கிணைப்பாளராக சேர்ந்தேன். 2012–13 இல் மாவட்ட ஆளுநராகவும் 2018–19-ல் IA பயிற்சியாளராகவும் 2022-ல் TRF அறங்காவலராகவும் ஆனேன்.

*அமைதி மைய நிதி எப்படி வந்தது?*

மறைந்த எனது கணவர், நியூயார்க் நகரில் உள்ள ஒரு சர்வதேச சட்ட நிறுவனத்தில் வழக்குரைஞராக இருந்தார். அதன் நிறுவன பங்குதாரர் ஓட்டோ வால்டர். அவர் நாஜிக்களிடமிருந்து தப்பிக்க 1937-ல், ஜெர்மனியிலிருந்து அமெரிக்காவுக்கு இடம் பெயர்ந்தார். அவருக்கு நான்கு மொழிகள் தெரியும். ஆனால், ஆங்கிலம் தெரியாது. ஜெர்மனில் சட்டப்படிப்பில் அவர் பெற்ற பட்டத்துக்கு அமெரிக்காவில் மதிப்பில்லை. அந்த நேரத்தில் மந்த நிலை மற்றும் 25 சதவீதம் பேர் வேலை வாய்ப்பின்றி இருந்தனர். யூதர்கள் மற்றும் இடம் பெயர்ந்தவர்கள் மீது ஒரு வெறுப்பு இருந்தது. ஆனால், அவர் கடுமையாக உழைத்தார். அமெரிக்காவில் சட்டம் பயின்றார். 50-களின் நடுவில் சட்டப்படிப்பை முடித்தார். மற்றொரு ஜெர்மன் நாட்டு யூதருடன் சேர்ந்து சொந்தமாக சட்ட ஆலோசனை நிறுவனத்தைத் தொடங்கினார்.

*1937-ல் அவருக்கு வயது என்ன?*

அவர் 1909-ம் ஆண்டு பிறந்தார், எனவே அவர் ஒரு இளைஞராகவே இருந்தார். அவர் ஜெர்மனியில் ஒரு பார் கவுன்சிலுக்குச் சென்றார். ஆனால், அவர் தடை செய்யப்பட்டார். யூதர்கள் மருத்துவராக, வழக்குரைஞராக அல்லது தொழில் நிர்வாகியாக இருக்க முடியாது என்று நாஜிக்கள் வெறுப்புச் சட்டம் கூறியது. மதத்தை காரணம் காட்டி அவருக்கு வழக்குரைஞர் தொழில் செய்ய தடைவிதிக்கப் பட்டது. அதன் பின்னர் சில மோசமான சம்பவங்கள் நடந்தன. இறுதியில் அவர் ஜெர்மனியை விட்டு வெளியேறினார்.

எப்படியிருந்தாலும் அவரது சட்ட நிறுவனம் அமெரிக்காவில் சிறப்பாகவே செயல்



TRF அறங்காவலர் மார்தா ஹெல்மன்



பட்டுவந்தது. 80-களின் தொடக்கத்தில் மூன்று விஷயங்கள் நடைபெற்றன. முதலாவதாக, ஒரு சிறிய குடும்ப அறக்கட்டளையைத் தொடங்குவதற்கு போதுமான வருமானத்தை அவர் பெற்றிருந்தார். ஏறக்குறைய ஒரு பணக்காரரின் பரோபகார குணம் அவரிடம் இருந்தது. இரண்டாவதாக அவர் நியூயார்க் நகரின் ரோட்டரி சங்கத்தில் சேர்ந்தார். மூன்றாவதாக அவரது சட்ட நிறுவனம், புதிதாக சட்டம் பயின்ற எனது கணவரை வேலைக்கு அமர்த்தியது.

*இது நாம் பேசும் நியூயார்க் நகரம் பற்றி*

ஆம். 80-களின் முற்பகுதியிலும் 90-களின் முற்பகுதிக்கும் இடைப்பட்ட காலத்தில் ஓட்டோ மற்றும் எனது கணவர் பிராங்க் இடையிலான உறவு முதலாளி என்ற நிலையிலிருந்து வழிகாட்டி, நண்பர் என்கிற நிலைக்குச் சென்றது. 90-களின் தொடக்கத்தில் ஓட்டோ, தனக்கு குழந்தைகள் இல்லாததால், உயிலை மாற்றி எழுதினார். சிகை அலங்கார நிபுணர், டிரைவர் மற்றும் வீட்டு வேலையாள் ஆகியோரை கவனித்துக் கொண்ட பிறகு, அனைத்தையும் அவர் குடும்ப அறக் கட்டளையின் கீழ் கொண்டு வந்தார். எனது கணவரை அதன் நிர்வாகி யாக்கினார்.

ஓட்டோ, 90 வயதில் 2003-ம் ஆண்டு இறந்தார். அவர் மனைவி அடுத்த 6 வாரங்களில் காலமானார். எனது கணவர், அவருக்கு அடுத்து நான் இருவரும் ஓட்டோவின் பெரும் சொத்துள்ள அறக்கட்டளைக்கு பொறுப்பாளரானோம்.

*அது எவ்வளவு என்று கூறமுடியுமா?*

சுமார் 18 மில்லியன் டாலர்; ராக்ஃபெல்லர் போல பெரும்பணக்காரர் அல்ல, ஆனால், நிறைய சம்பாதித்திருந்தார். அவர் 30 வயதில் ஒன்றும் இல்லாதவராக இருந்து இப்போது பெரும் செல்வத்தை விட்டுச் சென்றுள்ளார். அவர் பிறந்த நாடான ஜெர்மனியும், வாழ்ந்த நாடான அமெரிக்காவும் ஒருபோதும் போரில் ஈடுபடக் கூடாது என்பதே அவரது வாழ்க்கையின் லட்சியமாக இருந்தது. அதற்காகவே தன் வாழ்நாளை கழித்தார். மேலும் இருநாடுகளின் அரசாங்கங்களால் கௌரவிக்கப் பட்டார்.

இதற்கிடையே பனிப்போரின் போது அமெரிக்க விமானப்படையில் இருந்த எனது கணவர் பெர்லினில் இருந்தார். சோவியத் விமானப் படை விமானிகளின் சொல்படி நடப்பதே அவரது வேலையாக இருந்தது. பின்னர் அவர், கிழக்கு ஐரோப்பாவில் சோவியத் பிடியில் இருந்த நாடுகளில் இருந்து இடம்பெயர்ந்து வந்தவர்களை நேர்காணல் செய்ய வேண்டியிருந்தது.

*அவர் இராணுவத்தில் எத்தனை ஆண்டுகள் பணியாற்றினார்?*

விமானப் படையில், உளவுதுறை பிரிவில் சார்ஜென்டாக ஐந்து ஆண்டுகள் பணியாற்றினார்.

முதலில் நாங்கள் 3 மில்லியன் டாலருக்கு ஒரு காசோலையை எழுதி, அமெரிக்க சட்டப்பள்ளியில் ஓட்டோவின் பெயரில் ஓர் இருக்கையை ஏற்படுத்தினோம். அதன் பிறகு 15 மில்லியன் டாலர் இருந்தது. ஓட்டோ தனது வாழ்நாளில் செலவிட்ட பணத்தை பார்த்ததன் அடிப்படையில் வழிகாட்டு தல்களுடன் ஒரு வாரியத்தை உருவாக்கினோம். அவர் ஒரு ரோட்டேரியனாக இருந்ததாலும் அமைதியில் ஆர்வம் காட்டி வந்ததாலும், அமைதி மையங்களுக்கு நிதியுதவி செய்யத் தொடங்கினோம். முதுகலை பட்டப்படிப்பில் ஓட்டோ மற்றும் பிராங்க் வால்டர் பெயரில்

ஒரு அறக்கட்டளையை ஏற்படுத்தினோம்.

இது 2013, 14, 15-ல் நடந்தது. 2018-ம் ஆண்டு TRF அறங்காவலர்கள் மத்தியக் கிழக்கு, வடக்கு ஆப்பிரிக்காவுக்கு உட்பட்ட பகுதிகளில் புதிதாக அமைதி மையங்களை தொடங்க முடிவு செய்தனர். 2020-ல் கோவிட் தொற்றின் தொடக்க காலத்தில், நடைபெற்ற மெய்நிகர் சந்திப்பில் (Zoom Meet) நைஜிரியாவைச் சேர்ந்த RI துணைத்தலைவர் இன்கா பாபலோலா, உகாண்டாவின் (ஆப்பிரிக்கா) மகரேரேயில் அமைதி மையம் தொடங்குவது குறித்துப் பேசினார். ஆப்பிரிக்கப் பிரச்னைகளுக்கு ஆப்பிரிக்க தீர்வுகளைக் கொண்டு வர அமைதி முயற்சிகளை மேற்கொள்ளும் ஆப்பிரிக்கர்களுக்கு பயிற்சி அளிக்க வரலாற்றில் முதன் முறையாக அமைதி மையம் அமைக்கப்படுவதாகக் கூறினார்.



பின்தங்கிய சமூகத்தைச் சேர்ந்த நான் அவரது பேச்சைக் கேட்டு அதிர்ந்துபோனேன். 400 ஆண்டு கால அடிமை வர்த்தகம், 150 ஆண்டுகள் காலனி ஆதிக்கம், ஆப்பிரிக்காவின் பிரச்னைகளுக்கு தீர்வுகாண, ஆப்பிரிவிக்காவின் எதிர்காலம் பற்றி அவர்கள்தான் தீர்மானிக்க வேண்டும் என்று உலகம் சொன்னதாக ஒரு ஆப்பிரிக்கர் கூறியது எனக்கு வியப்பை அளித்தது. எனவே நான் எனது கணவருடன் பேசினேன். நாங்கள் ஒட்டோ மற்றும் பிரான் வால்டர் அறக்கட்டளை நிர்வாகக் குழுவுடன் பேசினோம். இதன் விளைவாக 2020-ல் கோவிட் தொற்று இறுதிக்காலத்தில் நான் எவன்ஸ்டனைத் தொடர்பு கொண்டு மத்திய கிழக்கில் புதிய அமைதி மையத்திற்கு பெயரிடுவதற்கான உரிமை பெற எவ்வளவு செலவாகும் என்று கேட்டேன். பின்னர் 2020 இறுதியில் இஸ்தான்புல்லில் அமைதி மையத்தை நிறுவ முடிவு செய்யப்பட்டது.

2021-ம் ஆண்டு அறங்காவலர்கள் எங்கள் பெருநன்கொடையை ஏற்றுக்கொண்டனர். ரோட்டரியின் வரலாற்றில் முதன் முறையாக ஒரு திட்டம் நிதியளிப்பவரின் பெயரில் உருவானது.

*அப்படியானால் நீங்கள் எல்லா பணத்தையும் கொடுத்தீர்களா?*

ஆம். அனைத்தையும் கொடுத்தோம். பரோபகாரத்தை பொருத்தவரை 15 மில்லியன் டாலர் ஒரு பெரிய தொகை என்றாலும், தேவையை கணக்கிட்டால் அது ஒரு சிறு துளிதான்! இரண்டு ஆண்டுகளுக்கு முன் இஸ்தான்புல்லில் உள்ள Bahcesehir University-யைத் தேர்ந்தெடுத்த குழுவில் நான் இடம்பெற்றிருந்தேன். முதல் தொகுதிக்கான மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டனர். தலைவர் ஸ்டெஃப்னி அர்ச்சிக், பிப்ரவரியில், இஸ்தான்புல்லில் அமைதி மாநாட்டை நடத்துகிறார். இதுதான் கதை.

*உங்களுக்கும் உங்கள் கணவருக்கும் இதை முடிவு செய்வது எவ்வளவு கடினமாக இருந்தது? உங்கள் மனதில் வேறு மாற்று வழிகள் இருந்ததா?*

சிறிய குடும்ப அறக்கட்டளைகள் நீண்டநாள் இருக்காது என்று எனது கணவர் உணர்ந்தார். ஏனெனில் ஒரு கட்டத்தில் நிறுவனர் எது முக்கியமோ அதை மறந்துவிடுவார். பணம் தவறாகப் பயன்படுத்தப்படாது. ஆனால், பணம் திருப்பிவிடப்படும். அது நடக்க நாங்கள் விரும்பவில்லை. ஓட்டோவின் பெயர் கடைசிவரை நிலைத்திருக்க வேண்டும் என்று நாங்கள் விரும்பினோம்.

ஓட்டோ, தனது பாரம்பரியத்தின் காரணமாக எங்கள் மீது நம்பிக்கை வைத்திருந்தார். அவர் எந்த அறிவுரையும் சொல்லவில்லை. அதுபோல TRF சரியானதை மட்டுமே செய்யும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

*30 மாதங்களுக்கு முன்பு மறைந்த உங்கள் கணவர், இந்த மையத்தை பார்க்க முடியாமல் போனது வருத்தமளிக்கிறதா?*

ஆம். உண்மைதான். ஆனால், அமைதி மையம் நிறுவப்படும் என்ற நினைப்பில் அவர் வாழ்ந்தார். ஆனால், இடத்தை தேர்வு செய்வதற்கு முன்பு இறந்துவிட்டார். அதனால் பரவாயில்லை. அமைதி என்பது ஒருவரின் வாழ்நாளைவிட பெரியது என்பதை இது நிரூபிக்கிறது.

*பிரச்சனைகள் நிறைந்த உலகில் அமைதிக்கான முயற்சிதான் முக்கியமானது. மோதல்கள், வன்முறைகள் மற்றும் ஆக்கிரமிப்புகளை பாருங்கள். உங்களுக்கு என்ன தோன்றுகிறது?*

தற்போது நடைபெற்று வரும் போரை நம்மால் முடிவுக்கு கொண்டுவர முடியாது. போர் நிறுத்தத்தையும் நம்மால் அறிவிக்க முடியாது. மத்திய கிழக்கில் ஏற்பட்டு வரும் மோதல்களைத் தீர்க்க 100 அல்லது 200 ஆண்டுகள் கூட ஆகலாம். ஆனால், அடுத்த தலைமுறைக்காக நாம் பணியாற்ற வேண்டும். தற்போதைய பிரச்னைகள் ஒரு வருடத்திற்கு முன்பு தொடங்கியதல்ல, 2023 அக்டோபர் 11-ம் தேதி நடந்தது, மத்திய கிழக்கில் அல்ல,

மேற்கத்திய நாடுகளால், பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியம் ஏற்பட்டபோது உருவானது. மேலும் 1947-ல் பாலஸ்தீனியர்கள் வீடற்றவர்களாக நிர்கதியாக இருந்தபோது ஒரு போர் நடந்தது. அதுமுதல் அவர்கள் அகதிகள் முகாம்களிலேயே வாழ்ந்து வருகிறார்கள். எனவே அமைதிக்கான முயற்சியை நாம் முன்னெடுக்க வேண்டியுள்ளது.

ஒரே இரவில் மாற்றம் நிகழ்ந்து விடாது. ஆனால், இன்றுள்ள பிரச்னைகளுக்குத் தீர்வுகாண பல தலைமுறைகள் ஆகலாம். அக்டோபர் 11-ம் தேதி நடந்தது பயங்கரமானது, கொடூரமானது. பயங்கரவாதிகளின் செயல்களை நாம் காசாவில் வாழும் மக்களுடன் தொடர்புபடுத்தி குழப்பிக் கொள்ளக் கூடாது. மத்தியக் கிழக்கில் நடந்து வரும் சம்பவங்கள் மனச் சோர்வை ஏற்படுத்துகிறது. காசாவில் பாலஸ்தீனியர்கள் மட்டுமல்ல, வேறு சிலரும் அங்கு வாழ்ந்து வருகிறார்கள். ரோட்டேரியன்களின் செயல்பாடுகள் என்னை மிகவும் ஈர்க்கின்றன. ஏனெனில் நீங்கள் பள்ளிக்கு புத்தகங்கள் வழங்கும்போது அல்லது போலியோ தடுப்பூசி போடும்போது எண்ணிக்கை அடிப்படையில் கொடுக்கலாம். ஆனால், அமைதியை எண்ண முடியாது. ஆனாலும் TRF-ல் உள்ள 2 பில்லியன் டாலர் எண்டௌவ்மென்ட் நிதியில், எட்டில் ஒரு பங்கான 250 மில்லியன் டாலர் ரோட்டேரியன்களால் அமைதி முயற்சிக்கு செலவழிக்கப்பட்டுள்ளது.

ரோட்டேரியன்கள் அமைதியை விரும்புகிறார்கள். TRF மூலம் அமைதியை கட்டமைக்க முடியும் என்று ரோட்டேரியன்கள் நம்புகிறார்கள். எனது கணவரின் வாழ்வும், இறப்பும் நிரூபிப்பதுபோல, ஓட்டோவின் மரணம் நிரூபிப்பது போல, அது யாருடைய வாழ்நாளிலும் நடக்காது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

*மத்திய கிழக்கு மட்டுமல்ல, உலகைச் சுற்றியுள்ள பல பகுதிகளும் வன்முறைச் சம்பவங்களால் துண்டாடப்படுகின்றனவே?*

ஆம். நாம் இப்போது ஒரு காலக் கட்டத்தில் வாழ்கிறோம். நாம் என்ன செய்யலாம் என்றால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவலாம். நமது ரோட்டரியின் அமைதிக்காவலர்கள் ராஜதந்திரிகள் அல்ல. சொகுசு அறைகளில் தங்கியிருப்பவர்களும் அல்ல. அவர்கள், தொண்டு நிறுவனங்களுடன் சேர்ந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி செய்து வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்த பணியாற்றிவருகிறார்கள்.

நம்மிடம் தற்போது 1,900 பட்டதாரிகள் உள்ளனர். புதிய அமைதி மையங்கள் மூலம் இது இன்னும் அதிகரிக்கும். இது ஒரு தொடர் நடைமுறையாகும்.

இதுதான் நிலைமை. தாய்லாந்தில் உள்ள சுலாலோங்க் ரோன் பல்கலைக்கழகத்தில் 2018-ல் அறங்காவலர்கள் ஒரு பட்டதாரி சான்றிதழ் திட்டத்தை கொண்டுவந்தனர். ஐந்து பல்கலைக் கழகங்கள் மேற்படிப்பு திட்டத்தை வழங்க முன்வந்தபோதிலும் பட்டதாரி சான்றிதழ் திட்டத்தை வளர்ப்பதன் மூலம் அமைதி மையத்தை வளர்க்கலாம் என்று முடிவு செய்தனர். பிராந்திய அளவில் மட்டும் பட்டதாரி சான்றிதழ் திட்டத்தை செயல்படுத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஆசிய மையத்திற்காக நாங்கள் இப்போது ஒரு பள்ளியைத் தேர்வு செய்து வருகிறோம். ஆசியா என்பது பெரிய பரப்பளவிலான இடமாகும். அங்கு இரண்டு அல்லது மூன்று அமைதி மையங்கள் அமைக்கலாம். ஆனால், அதற்கு அதிக நிதி தேவைப்படும். நம்மிடம் ஒரு மையத்திற்கான நிதி மட்டுமே உள்ளது. நாங்கள் 12 நாடுகளில் உள்ள 60 பல்கலைக்கழகங்கள் மூலம் 60 பள்ளிகளைத் தொடங்கினோம். ரோட்டேரியன்கள் அதிகம் உள்ள இடங்களில் இதை அமைக்க வேண்டும். மாணவர்களுக்கு விசா கிடைக்க வேண்டும். அமைதியை கட்டமைப்பதில் நிபுணத்துவம் பெற்ற பல்கலைக்கழகமாக இருக்க வேண்டும்.

நாங்கள் இந்தியாவில் புனேயிலும், தென்கொரியாவில் சியோலிலும் இடங்களை பார்வையிட்டு தேர்வு செய்துள்ளோம்.



அமைதி மையம் அமைக்க இரண்டுமே போட்டிபோடுகின்றன. இந்தியாவிலும், கொரியாவிலும் ரோட்டேரியன்கள் வலுவாக உள்ளனர்.

*நிதி தயாராக உள்ளதா, அதற்கு எவ்வளவு செலவாகும்?*

ஆம். நிதி தயாராக உள்ளது. அதற்கு 20 மில்லியன் டாலர் செலவாகலாம். அறங்காவலர்கள் வரும் பிப்ரவரி மாதம் சந்தித்துப் பேசி முடிவு செய்ய உள்ளனர். புதிய பள்ளி தேர்வு செய்யப் பட்டதும், 2027-ம் ஆண்டு ஜனவரியில் திறக்கப்படும்.

கடந்த 25 ஆண்டுகளில் நாங்கள் ரோட்டரி அமைதி மையங்களைக் கொண்டிருந்தோம். ஆசியாவைச் சேர்ந்த மாணவர்களில் நான்கில் ஒரு பங்கினர் இந்தியாவைச் சேர்ந்தவர்கள். நமது அமைதி மையங்களை இந்தியா மிகவும் வலிமையாகப் பயன்படுத்துகிறது.

படங்கள்: ரஷீதா பகத்

வடிவமைப்பு: N. கிருஷ்ணமூர்த்தி



RI தலைவர் ஸ்டெஃப்னி அர்ச்சிக், RID அனிருதா ராய்சௌத்ரி மற்றும் PDG ஜான் டேனியல் உடன்.



PRIP சேகர் மேத்தா RIPN சங்கூ யுனுடன்.

Rotary Institute KOCHI 2024





TRF அறங்காவலர் பரத் பாண்டியா மற்றும் மாதவி.



பெண் பிரதிநிதிகளுடன் PRIP கல்யாண் பானர்ஜி.

# கொச்சி தருணங்கள்



TRF விருந்தில்.



RID ராஜு சுப்ரமணியன் மற்றும் RIDE நாகேஷ் உடன் PRIP ராஜேந்திர சாபூ மற்றும் உஷா.




RIDE M முருகானந்தம் மற்றும் சுமதி.





PRIDs P T *பிரபாகர் மற்றும் மகேஷ் கோட்பாகி.*

RIDs *ராஜு சுப்ரமணியன்*
*மற்றும் அனிருதா ராய்சௌத்ரி*





*வினிதா வெங்கடேஷுடன் கேத்தரின் கம்ப்.*

PRIP K R *ரவீந்திரன் மற்றும் வானதி*
*உடன்* RID *சுப்ரமணியன் மற்றும் வித்யா*



ஜான் டேனியல்
உடன் மீரா.





RIPN சங்கூ யுன் மற்றும் முன்னாள்
TRF அறங்காவலர் குலாம் வஹன்வதி.



TRF அறங்காவலர் மார்த்தா ஹெல்மன்,
வித்யா மற்றும் சுப்ரமணியன்.



குலாம் வஹன்வதி, ராஜேந்திர சாபூ மற்றும் மார்த்தா.



பெண் பிரதிநிதிகள் வித்யா சுப்ரமணியனுடன் செல்ஃபி எடுத்துக் கொண்டனர்.





PRID A S வெங்கடேஷ் மற்றும் வினிதா.



அனிருதா ராய்சௌத்ரி மற்றும் ராஜேந்திர சாபூ



பரத் பாண்டியா, மாதவி மற்றும் ராஜு சுப்ரமணியன்



PRID *பாஸ்கர் மற்றும் மாலா.*



PRID *கமல் சங்வி மற்றும் சோனல்.*



RIPN *யுன் மற்றும்* PRIP *ரவீந்திரன்.*



*மகேஷ் கோட்பாகி மற்றும் அமிதா.*



**இடமிருந்து:** DGN*ரவிசங்கர் டகோஜு, உஷா சாபூ,* PRIP *ரவீந்திரன், வானதி மற்றும் பாவ்லா டகோஜு.*

படங்கள்: ரஷீதா பகத், ஜெய்ஸ்ரீ மற்றும் ஹேமந்த் பன்ஸ்வால்

வடிவமைத்தவர்: கிருஷ்ணா பிரதீஷ் S

# ரோட்டரியின் சேவை மற்றும் தாக்கத்தின் மரபு

ஜெய்ஸ்ரீ

ரோட்டேரியர்களான நாம் இந்த கிரகத்தின் சிறந்த குடியாளர்களாக இருக்கிறோம், ஏனெனில் நாம் உண்மையிலேயே சுயத்திற்கு மேல் சேவை என்ற குறிக்கோளுடன் வாழ்கிறோம். நாம் ஒன்றிணைந்து நம்பிக்கையின் வடிவமைப்பாளர்களாகவும், இரக்கத்தின் முன்வீரர்களாகவும், மாற்றத்திற்கான முன்னோடிகளாகவும் செயல்படுவோம். சிந்தனை மிக்க திட்டமிடல் மற்றும் உறுதியான அர்ப்பணிப்பு மூலம், நாம் வாழ்க்கைகளை மாற்றுவ தோடு மட்டுமல்லாமல், எதிர்கால தலைமுறைகளுக்கான பிரகாசமான மற்றும் சமநிலையான உலகத்தை உருவாக்குவோம்'' என்று PRIP ஷேகர் மேத்தா கொச்சி ரோட்டரி இன்ஸ்டிடியூட்டின் தொடக்க பொதுக் கூட்டத்தின் போது கூறினார்.

நன்கு திட்டமிடப்பட்ட மனிதாபிமான திட்டங்கள் இந்தியா முழுவதும் உள்ள சமூகங்களை எவ்வாறு மாற்றியமைத்துள்ளன என்பதை அவர் எடுத்துரைத்தார். போலியோவை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான உலகளாவிய போராட்டம், நன்கு வரையறுக்கப் பட்ட திட்டம், உத்தி, செயல்படுத்தல் மற்றும் மதிப்பீடு ஆகியவற்றுடன் எவ்வாறு அசாதாரணமான முடிவுகளை அடைய முடியும் என்பதை எடுத்துக்காட்டுகிறது, என்று அவர் குறிப்பிட்டார். ரோட்டரியின் எழுத்தறிவு முயற்சி களும் இந்த அணுகுமுறைக்கு மற்றொரு உதாரணம்.

மருத்துவத்துறையில் ரோட்டரியின் தாக்கம் அதே அளவில் ஆழமாக உள்ளது. "நம் ஆர்வமும் நோக்கமும் தான் நம் பலம்'' என்று மேத்தா கூறினார், மேலும் RC டெல்லி பிரீமியர் ஒரு நீர் திட்டத்திற்காக ப்ரோக்ராம்ஸ் அஃப் ஸ்கேல் பரிசை பெற்றதற்காக மகிழ்ச்சி தெரிவித்தார்.

TRF-க்கு ரோட்டரி மாவட்டங் களின் பங்களிப்புகளை கவனத்தில் கொண்டு, "ஒவ்வொரு ஆண்டும் நாம் தாராளமாக வழங்குவது மட்டுமல்லாமல், இந்த நிதியை நம் உள்ளூர் சமூகங்களில் திறம்பட பயன்படுத்தி நம்பிக்கை, வளர்ச்சி மற்றும் தாக்கத்தை உருவாக்கு கிறோம்'' என கூறினார்.

உறுப்பினர்களின் வளர்ச்சியில், ரோட்டரியின் விரிவாக்கத்தின் "விடிவெள்ளியாக'' இந்தியாவின் பங்கைக் கொண்டாடினார். "இந்த உறுதியான வளர்ச்சி, விதிவிலக்கான சேவை மற்றும் பங்களிப்புகளுடன் இணைந்து, நம் மண்டலங்களை நிறுவனத்திற்குள் சக்தி மையமாக நிலைநிறுத்தியுள்ளது. 120 ஆண்டு கள் பழமையான நம் அமைப்பின் பாரம்பரியம் அதிசயமானது, ஆனால் இன்னும் அதிகமாக செய்யும் திறன் நம்மிடம் உள்ளது.''

2029, 2031 அல்லது 2032ம் ஆண்டுக்கான RI மாநாட்டை டெல்லியில் நடத்துவதற்கான முன்மொழிவு வாரியத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக மேத்தா கூறினார். "டெல்லியில் நடைபெறும் மாநாடு, இங்கு செய்யப்படும் நம்பமுடியாத பணிகளுக்கு சரியான அங்கீகாரமாக இருக்கும். இந்த கனவை நனவாக்க ஒன்றிணைந்து செயல்படுவோம் என்றார்.

இந்த அமர்வை தொகுத்து வழங்கிய PRID C பாஸ்கர், "சேவை என்பது ஒரு திட்டம் மட்டுமல்ல; இது ஒரு வாழ்க்கை முறை, இதில் கொடுப்போர் பெறுபவர்களுக்கு இணையாகவே பெறுகிறார்கள். நிதி ரீதியாக போராடும் மாணவருக்கு ஆதரவளிப்பது, ஒதுக்கப்பட்ட சமூகங்களுக்கு ஆதரவளிப்பது அல்லது ஒருவருக்கு செவிசாய்வது போன்ற எளிமையான செயல்கள் கூட மிகப்பெரிய மதிப்பைக் கொண்டுள்ளன. சேவை செய்ய விருப்பம் இருந்தால் போதும்'' என்றார்.■

*PRIP சேகர் மேத்தா மற்றும் ராஷி ஆகியோர் மீரா டேனியலால் கௌரவிக்கப்படுகிறார்கள்.*





Rotary
District 3192
THE MAGIC OF ROTARY
JOIN NOW
REGISTER NOW!
SOUTH ASIA INTERNATIONAL PEACE CONFERENCE - 2025
GET YOUR EARLYBIRD OFFER NOW..!
Let's create a world where Peace is nurtured by nature and well-being!
"Healthier World, Greener Tomorrow"
Join Rotary in India for an extraordinary gathering dedicated to fostering peace through critical global issues: the environment and health. This landmark conference will bring together thought leaders, policymakers, and change makers to explore how sustainable environmental practices and better healthcare can lead to lasting peace.
Be part of the dialogue, take action, and help shape a future where peace thrives through a healthier planet and healthier people.
Date & Venue:
22nd & 23rd March 2025 @ KTPO Whitefield, Bengaluru, India
SAVE THE DATE
Goals & Outcomes - Health
• Promote Access to Healthcare
• Enhance Health Education
• Support Disease Prevention and Treatment
• Improve Maternal and Child Health
• Address Mental Health Issues
• Strengthen Healthcare Infrastructure
• Support Clean Water and Sanitation
• Empower Healthcare Workers
• Foster Collaboration and Innovation
Scan for Registration
www.saipc.in
FOR QUERIES, PLEASE CONTACT: INFO.DGOFFICE2425@GMAIL.COM,
MOBILE NO. +91 8123303888 / +91 81233 84222,
OFFICE POSTAL ADDRESS: # 192, 3RD FLOOR,18TH CROSS, 20TH MAIN, MRCR,
VIJAYANAGAR, BENGALURU- 560 040
KARNATAKA, INDIA


ADVT.

# முன்னாள் தலைவர்கள் சிறப்பிக்கப்பட்டனர்

ரஷீதா பகத்

கொச்சி இன்ஸ்டிடியூட்டில், ரோட்டரிக்கு செய்த பங்களிப்பிற்காக மூன்று முன்னாள் RI தலைவர்கள் சிறப்பிக்கப்பட்டனர்.

இன்ஸ்டிடியூட்டில் அமைதியின் தலைப்பில் உரையாற்றிய முன்னாள் RI தலைவர் கல்யாண் பானர்ஜி, "உலகம் இவ்வளவு கொந்தளிப்பில் இருப்பதைப் பார்க்கும் போது, நம் உலகில் அமைதி சாத்தியமா என்று நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள்," என்றார்.

ஐ.நா. செப்டம்பர் 21-ஐ உலக அமைதி தினமாகக் கடைப்பிடிக்கும் நிலையில், 15,000 பேர் தினமும் பட்டினி காரணமாக இறக்கின்றனர், ஒரு பில்லியன் மக்கள் ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப் பட்டுள்ளனர். ஒரு பில்லியனுக்கும் அதிகமான மக்களுக்கு பாதுகாப்பான குடிநீர் கிடைப்பதில்லை; இன்னும் ஒரு பில்லியன், அவர்களில் மூன்றில் இரண்டு பங்கு பெண்கள், படிப்பறிவற்றவர்களாக உள்ளனர். இப்படிபட்ட உலகில் ஒவ்வொரு நாளும் அமைதிக்கான தினமாகக் குறிக்கப்பட வேண்டும் என்று அவர் கூறினார். மிக மோசமான சூழ்நிலை என்னவென்றால், தற்போது உலகளவில் 20 ஆயுதம் தாங்கிய மோதல்கள் தீவிரமடைந்து வருகின்றன, 300,000 குழந்தைகள் அப்போர்களில் தள்ளப்பட்டுள்ளனர், மேலும் 37 மில்லியன் மக்கள் தங்கள் சொந்த ஊர்களிலேயே அகதிகளாக வாழ்கின்றனர் என அவர் கூறினார்.

இத்தகைய குழப்பமான சூழ்நிலையில், ரோட்டேரியர்கள் ரோட்டரி அறக்கட்டளை மூலம் நிறைய உதவிகளை வழங்க முடியும், வழங்கியும் உள்ளனர். "வளரும் நாடுகளில் கூட, $100 என்பது பெரிய பணம் அல்ல. இது உங்களுக்கும் உங்கள் மனைவிக்கும் ஒரு நல்ல உணவகத்தில் இரவு உணவையோ அல்லது ஒரு நல்ல ஜோடி காலணிகளையோ குறிக்கலாம். ஆனால் நிஜ உலகில், இது நம்பிக்கைக்கும் ஏமாற்றத்திற்கும், வாழ்க்கைக்கும் மரணத்திற்கும் இடையிலான வேறுபாட்டை உருவாக்கும்" என்று அவர் TRF-க்கு நன்கொடை அளிக்க அவர்களை வலியுறுத்தினார்.

இன்றைய ஆப்கானிஸ்தானில் பிறக்கும் ஒவ்வொரு பெண் குழந்தையும் எதிர்கொள்ள வேண்டிய




PRIP *ராஜேந்திர சாபூ பிரதிநிதிகளிடையே உரையாற்றுகிறார். உஷா சாபூ மற்றும்* RID *அனிருதா ராய்சௌத்ரி ஆகியோரும் உள்ளனர்.*



*மாநாட்டில்* PRIP *கல்யாண் பானர்ஜி கௌரவிக்கப்படுகிறார்.* **இடமிருந்து:** *அறங்காவலர் மார்தா ஹெல்மன்,* PDG *ரவி வட்லாமணி, ஷிப்ரா,* RID *அனிருதா ராய்சௌத்ரி மற்றும்* PDG *ஜான் டேனியல் ஆகியோரும் உள்ளனர்.*

''மனிதாபிமானமற்ற'' சூழ்நிலைகளை நினைத்துப் பாருங்கள் என்று ரோட்டேரியர்களைக் பானர்ஜி கேட்டுக் கொண்டார். ''இன்று உண்மையான எல்லைகள் நாடுகளுக்கு இடையில் அல்ல, சக்தி வாய்ந்தவர்களுக்கும் சக்தியற்றவர்களுக்கும், சுதந்திரமானவர்களுக்கும் கட்டுப்படுத்தபட்டவர்களுக்கும், சலுகை பெற்றவர்களுக்கும் அவமதிக்கப்பட்டவர்களுக்கும் இடையே உள்ளன.'' ரோட்டேரியர்கள் உண்மையான அமைதிகர்த்தர்களாக திகழ நினைத்தால் இந்த பிளவுகளை இணைத்து, இடைவெளிகளை மூட வேண்டும்.'' உலகில் அமைதியை வளர்க்க ரோட்டரி அமைதி மையங்கள் பாடுபடுகின்றன, அவற்றுக்கு ரோட்டேரியர்களின் ஆதரவு அவசியம்.

வறுமையும் பசியும் நீடிக்கும் வரை, உலகம் புரிதலையும் அமைதியையும் எட்ட இயலாது. எனவே அனைத்து ரோட்டேரியர்களின் பொதுவான குறிக்கோள் மனித துயரத்தை ஒழிப்பதாக இருக்க வேண்டும், என்று அவர் மேலும் கூறினார்.

PRIP ராஜேந்திர சாபூ தனது சுருக்கமான உரையில், RI தலைவராக தனது பணியை முடித்தவுடன், அடுத்து என்ன செய்வது என்று யோசித்துக்கொண்டிருந்ததை நினைவு கூர்ந்தார், தனது துணைவியார் வானதி உடனிருக்க PRIP K R ரவீந்திரன் மாநாட்டில் சிறப்பிக்கப்பட்டார், மேலும் ரோட்டரிக்காக அவர் செய்த முக்கிய பங்களிப்புகள் நினைவுகூரப்பட்டன.

ஆனால் அனைவரின் மத்தியில் கவனத்தை ஈர்த்தவர் உஷா சாபூவே. தனது சுருக்கமான, ஆனால் மனதின் ஆழத்திலிருந்து வந்த உரையால், பலரின் கண்களை ஈரமாக்கினார். அவர் கூறியதாவது: ''எங்கள் இருவருக்குமான உங்கள் அரவணைப்பு மற்றும் மரியாதைக்காக நான் உங்கள் அனைவருக்கும் நன்றி சொல்ல விரும்புகிறேன். ராஜாவால் தான் விரும்புவதைச் சரியாக வெளிப்படுத்த முடியாது.'' கோவிட் அவரது செவித்திறன் மற்றும் பேச்சுத்திறனை பாதித்ததே இதற்கு காரணம். ''ஆனால் ரோட்டரிக்கான அவரது ஆர்வமும் அர்ப்பணிப்பும் எந்தவிதத்திலும் பாதிக்கப்படவில்லை. 90 வயதுக்கு மேல் இருந்தும், ரோட்டரி மற்றும் உங்கள் மேல் அவர் கொண்டுள்ள அன்பின் காரணமாகவே இன்று இங்கு இருக்கிறார். நாங்கள் இன்னும் செய்யக் கூடியவற்றை தொடர்ந்து செய்ய உங்கள் பிரார்த்தனைகளில் எங்களை நினைவில் கொள்ளுங்கள்'' என்று அவர் உரை முடிக்க, அரங்கமே கைத்தட்டல்களால் அதிர்ந்தது.



**இடமிருந்து:** RID *ராய்சௌத்ரி,* PRIP K R *ரவீந்திரன், வானதி மற்றும் ஷிப்ரா.*

படங்கள்: ரஷீதா பகத்

# புதிய AKS உறுப்பினர்கள் கௌரவிக்கப்பட்டனர்

ஜெய்ஸ்ரீ




TRF *அறங்காவலர் பரத் பாண்டியா,* RI *தலைவர் ஸ்டெஃப்னி அர்சிக் மற்றும்* TRF *அறங்காவலர் மார்த்தா ஹெல்மன் ஆகியோர்* PDG N *சுப்பிரமணியன் மற்றும் லலிதா ஆகியோரை கௌரவித்தனர்.*

மண்டல இன்ஸ்டிடியூட் முன்னதாக, ஒன்பது ரோட்டேரியர்கள் மதிப்பு மிக்க ஆர்ச் கிளம்ப் சொசைட்டியில் சேர்க்கப் பட்டனர். "உங்களைப் போன்ற நபர்கள், உங்கள் தொலைநோக்கு பார்வை மற்றும் பெருந் தன்மையால், அறக் கட்டளையை வலுவாக வைத்திருக்கிறீர்கள் என சேர்க்கப்பட்டவர்களின் பெருந்தன்மைக்கு RI தலைவர் ஸ்டெஃப்னி அர்ச்சிக் நன்றி தெரிவித்தார்.

TRF அறங்காவலர் பரத் பாண்டியா நன்கொடையாளர்களிடம் அவர்களின் பணம் "சரியான திசையில், கட்டமைக்கப்பட்ட முறையில்'' செல வழிக்கப்படும் என்று உறுதியளித்தார்.

இன்ஸ்டிடியூட்டில் TRF அறங்காவலர் தலைவர் மார்க் மலோனியின் சார்பாக பங்கேற்ற TRF அறங்காவலர் மார்தா ஹெல்மேன், இந்தியாவில் ரோட்டேரியர்களின் முயற்சி களைப் பாராட்டினார்.

"இந்த முன் முயற்சிகள் அனைத்தும் அசாதாரணமானவை; அவை நிதி ஆதரவின் முக்கிய பங்கையும் எடுத்துக்காட்டுகின்றன,'' என்று அவர் கூறினார். புதிய AKS உறுப்பினர்களிடம் உரையாற்றிய அவர், "கடந்த ஆண்டு எனது சேர்க்கை நிகழ்வை அனுபவித்ததின் மூலம், இந்த தருணம் எவ்வளவு முக்கியமானது என்பதை நான் உணர்கிறேன்,'' என்றார்.

சற்று முன்னதாக, புதிய AKS உறுப்பினர்கள், கொடுப்பதன் சாராம்சம் மற்றும் TRF-ஐ ஆதரிக்கத் தூண்டியது பற்றிய தங்கள் கதைகளைப் பகிர்ந்து கொண்டனர்.

RID 3011 **PDG N சுப்ரமணியன்** கூறுகையில், "ரோட்டரியின் உலகளாவிய அணுகுமுறை, அதன் கவனம் செலுத்தும் பகுதிகள் மற்றும் நமக்காக நாம் அமைத்துக் கொள்ளும் துணிச்சலான இலக்குகள் ஆகியவற்றை நான் விரும்புகிறேன், என்றார்.

RID 3211 PDG **கிருஷ்ணன் G நாயர்** கூறுகையில், "நான் ஒரு ரோட்டேரியனாக இருக்கும் வரை மற்றும்




RID *அனிருதா ராய்சௌத்ரி மற்றும் ஷிப்ரா.* **கீழே:** *புதிய உறுப்பினர்கள்* **(வலமிருந்து):** M R *ஜெய்சங்கர், ராஜஸ்ரீ மற்றும்* PDG *கிருஷ்ணன்* G *நாயர், ஹேமந்த் பாசின், ஜோஷிதா மற்றும் சவுரப் கெமானி, மகிந்தர் ஜெயின் மற்றும் மஞ்சீத் கிருபளானி.*





PRIP சேகர் மேத்தா, RIPN சங்கூ யுன் மற்றும் PRID மகேஷ் கோட்பாகி. RIDE M முருகானந்தம் மற்றும் சுமதி பின்னால் காணப்படுகிறார்கள்.



PRIP ராஜேந்திர சாபூ, PRID பாஸ்கர், PRIP K R ரவீந்திரன், மாலா பாஸ்கர், வானதி ரவீந்திரன், உமா நாகேஷ், உஷா சாபூ.



RID ராஜு சுப்பிரமணியன் மற்றும் RI பொருளாளர் ரோண்டா பெத் ஸ்டப்ஸ்.

குறைந்தது $1 அளிக்க ஆற்றலுடன் இருக்கும் வரை, நான் அறக்கட்டளைக்கு தொடர்ந்து ஆதரவளிப்பேன். எங்களுடைய பங்களிப்பின் காரணமாக யாரோ, எங்கோ, மகிழ்ச்சியான, அமைதியான வாழ்க்கையை வாழ்கிறார்கள் என்பதை அறிந்துகொள்வது, எனது குடும்பத்திற்கும் எனக்கும் போதுமான வெகுமதியாகும்.

**சௌரப் கெமானி** 2010-ல் RC கல்கத்தாவில் தனது மனைவி ஏற்கனவே ரோட்டேரியராக இருந்ததால் தனக்கு உறுப்பினர் பதவி மறுக்கப்பட்டதை நினைவு கூர்ந்தார். RI-யில் தம்பதிகளாக உறுப்பினர்களை ஏற்க முடிவு செய்யும் வரை அவர் ஐந்து ஆண்டுகள் காத்திருக்க வேண்டி யிருந்தது. “சமூக சேவை என்பது ஒரு காசோலையை எழுதுவதை விட பெரியது. உண்மையான உரிமை என்பது நிதியை ஏற்பாடு செய்வதிலும், திட்டங்களை வெற்றிகரமாக முடிப்பதை உறுதி செய்வதிலிருந்தும் வருகிறது” என்று அவர் குறிப்பிட்டார்.

**ஹேமந்த் பாசின்** RC டெல்லி சவுத் எண்ட், RID 3011-ன் உறுப்பினர், அவரது 70-வது பிறந்த நாளில் அவருக்குப் பரிசளிக்க அவரது குழந்தைகள் முன்மொழிந்த மெர்சிடிஸ் காரை மறுத்ததை பற்றி விவரித்தார், அதற்குப் பதிலாக AKS-ல் சேர TRF-க்கு தொகையை அளித்தார். “மற்றொரு வாகனத்தை எங்கள் கேரேஜில் சேர்ப்பதற்குப் பதிலாக, இந்த பணத்தை ரோட்டரி அறக்கட்டளைக்கு நன்கொடையாக வழங்கி, அர்த்தமுள்ள செயல்களில் முதலீடு செய்து, சுற்றியுள்ள மக்களின் ஆசீர்வாதத்தையும் நல்வாழ்த்துகளையும் பெறவேண்டும் என்று நான் அவர்களிடம் கேட்டுக் கொண்டேன்,” என்றார்.

மகிந்தர் ஜெயின், புற்றுநோயால் பாதிக்கப் பட்டவர் மற்றும் RC மெட்ராஸின் 30 ஆண்டு உறுப்பினராக இருப்பவர், TRF-க்கான அவரது பங்களிப்பு இரண்டு காரணங்களை ஆதரிக்கும்-தாய் மற்றும் சேய் ஆரோக்கியம் மற்றும் சமூக பொருளாதாரத்தில் பின்தங்கிய நரிகுரவா பழங்குடியினருக்கு தங்குமிடம் வழங்கும்.

**மன்ஜீத் கிருபலானி**, மூன்றாம் தலைமுறை ரோட்டேரியர். TRF-க்கு அவர் அளித்த நன்கொடை தனது பெற்றோர் மற்றும் தாத்தா பாட்டிகளின் நினைவைப் போற்றுவதாகக் கூறினார். மன்ஜீத் RC பாம்பே, RID 3141-ன் உறுப்பினர்.

**M R ஜெய்சங்கர்** RC பெங்களூர் மிட் டவுன், RID 3191, தெற்கு பெங்களூரில் 101 உடல் ஊனமுற்றோருக்கு சக்கர நாற்காலிகளையும், வசதி குறைந்த 125 பேருக்கு குறைந்த விலையில் வீடுகளையும் விநியோகிப்பதில் அவர் ஈடுபட்டதை நினைவு கூர்ந்தார்.

RC கொச்சின் சென்ட்ரல், RID 3201-ன் உறுப்பினரான **கோச்சௌஸ்ப் சிட்டிலப்பில்லி** மற்றும் RC கொச்சின் சவுத் RID 3201-ஐ சேர்ந்த **நவாஸ் மீரான்** ஆகியோர் மண்டல இன்ஸ்டிடியூட்டில் கலந்து கொள்ளாதிருந்தபோதிலும் கௌரவிக்கப்பட்டனர்.

படங்கள்:
ஹேமந்த் பன்ஸ்வால்.

# மாநாட்டின் சுவாரஸ்யமான தருணங்கள்

ரஷீதா பகத் மற்றும் ஜெய்ஸ்ரீ

கொச்சி இன்ஸ்டிடியூட், ரோட்டரி இந்தியாவின் ஆண்டுகளில் ஒரு "முழுமையான மாநாடு" என்ற இடத்தைப் பிடிக்கும். அதில் பற்கேற்பாளர்களின் தேவைகள் மற்றும் ரசனைகளை பூர்த்தி செய்யும் வகையில் சில சிறப்பான பேச்சாளர்கள் முதல் மனிதாபிமான திட்டங்கள், சிறந்த உணவு மற்றும் பொழுதுபோக்கு வரை அனைத்தும் சேர்நத கலவை இருக்கும்.

கொச்சியில் இது ஒன்றும் முதல் மாநாடு இல்லை என்று முன்னாள் RI தலைவர் கல்யாண் பானர்ஜி தெரிவித்தார். கொச்சி கிராண்ட் ஹயாத் தங்கும் விடுதியில் உள்ள பிரம்மாண்டமான அரங்கில் மாநாட்டுப் பிரதிநிதிகளிடையே அவர் உரையாற்றினார். வேம்பநாடு ஏரியின் உப்பங்கழியை பார்வையிடும் வகையில் சொகுசாக அமைந்திருந்தது அந்த விடுதி. கொச்சியில் இரண்டு ரோட்டரி மண்டல மாநாடுகளுக்கு சென்றதை அவர் நினைவுகூர்ந்தார். முதன் முறையாக 1995-ம் ஆண்டு ரோட்டரி வாரிய இயக்குநர் என்ற முறையில் கொச்சி வந்திருந்தார்.


அப்போது ரோட்டரி தலைவராக இருந்த மறைந்த கிளென் கின்ராஸ், வெளிநாட்டிலிருந்து வந்திருந்த சிலருடன் அங்கு இருந்தார். அந்தக் காலத்தில் கொச்சியில் குளிரூட்டப் பட்ட அரங்குகள் இல்லை. எனவே நாங்கள் பெருமளவில் பழைய மாடலான விண்டோ ஏசி கருவிகளை கொண்டுவந்து அரங்கத்தில் உள்ள ஜன்னல்களில் பொருத்தி அதை இயக்கி அரங்கத்தை குளிரூட்ட வைத்தோம். பங்கேற்பாளர்களும் வேறு வழியின்றி எங்களின் முயற்சி யை ஏற்றுக்கொண்டு குளிர்ச்சி யை அனுபவித்தனர். ஏனெனில் அவர்களுக்கு வேறுவழியில்லை.

கொச்சி மாநாட்டில் அப்போது ரோட்டரி இயக்குநராக இருந்த K R ரவீந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அவர் கலந்து கொண்டார். அப்போது கல்யாண் பானர்ஜி RI நியமனக் குழுவால் RI தலைவர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்போது குளிரூட்டப்பட்ட அரங்கம் மிகவும் குளிர்ச்சியாக இருந்தது. ஆனால், பல்வேறு காரணங்களுக்காக ரோட்டேரியன்கள்தான் சூடாக இருந்தனர்.

நீர்முனையில் எழில் கொஞ்சும் அந்த விடுதியின் அரங்கில் கேரளத் திருவிழாபோல் நிகழ்ச்சி திட்டமிட்டு செயல்படுத்தபட்டது. நிகழ்ச்சியின் சிறப்பு அம்சம் கேரள பாரம்பரிய பாம்பு படகுப் போட்டியாகும். 225 DGE-ண் மற்றும் DGN-களுக்கு இது ஒரு பரவசமான அனுபவத்தை தந்தது. இவை தவிர திருச்சூர் பூரம் திருவிழா போன்று அணிவகுத்து நின்ற யானைகள், செண்ட மேளம், கேரள பாணியிலான தெரு உணவு, வேடிக்கை, விளையாட்டுகள், கலைநிகழ்ச்சிகள், புகைப்படங்கள் என மறக்கமுடியாத அனுபவமாக இருந்தது.

ரோட்டரி உலகில் இந்திய ரோட்டேரியன்கள் சேவை திட்டங்களைச் செயல்படுத்துவதில் புகழ்பெற்றவர்கள் மற்றும் கெட்டிக்காரர்கள். பாரம்பரியத்தின் அடிப்படையில் இந்த நிகழ்ச்சியில்

*RIPN சங்கூ யுன் உள்ளிட்ட ரோட்டரி தலைவர்கள் படகுப் போட்டியில் பங்கேற்றனர்.*



சில மகத்தான, மறக்கமுடியாத திட்டங்கள் தொடங்கிவைக்கப் பட்டன.

“கிரீன் ஏஞ்சல்ஸ்” திட்டத்தின் கீழ் 119 பெண்களுக்கு (ரோட்டரியின் 119-வது ஆண்டுவிழாவை குறிக்கும் வகையில்) CNG-யில் இயங்கும் ஆட்டோரிக்க்ஷாக்கள் வழங்கும் திட்டத்தை RI தலைவர் ஸ்டெஃப்னி அர்ச்சிக் தொடங்கி வைத்தார். மாநாட்டுத் தலைவர் ஜான் டேனியல் குடும்ப அறக்கட்டளையான Y-டேனியல் அறக்கட்டளையின் கூட்டு முயற்சியுடன் இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டது.

RIPN சங்கூ யுன் கொடியசைத்து தொடங்கிவைத்த அரை மராத்தானில் குழந்தைகள், பெரியவர்கள் என 5,000 பேர் கலந்துகொண்டனர். கொச்சி நைட்ஸ் ரோட்டரி சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளின் நலனுக்காக ரூ.20 லட்சம் நிதி திரட்டப்பட்டது. ரோட்டேரியன்களுக்கான ரோட்டரித் தலைவர் கோப்பை கோல்ஃப் போட்டி நடத்தப்பட்டு TRF-க்கு நிதி திரட்டப்பட்டது.

நாற்பத்தி ஆறு ரோட்ராக்ட் தலைவர்கள் இந்த நிறுவனத்தில் பயிற்சிபெற ஆதரவு அளிக்கப்பட்டது. அவர்களுக்கு உணவு, தங்கும் இடம் உள்ளிட்ட அனைத்து செலவுகளும் ஏற்கப்பட்டன.

ரஷீதா பகத்



PDG *ரவி வட்லாமணி மற்றும்* TRF *அறங்காவலர் மார்தா ஹெல்மேன் ஆகியோருடன்* PRIP *கல்யாண் பானர்ஜி.*

DEI முன்முயற்சியில் ரோட்டரியின் அர்ப்பணிப்பை வெளிப் படுத்தும் வகையில், “Miracle on Wheels” குழுவினர் நாட்டிய நாடகத்தை வியக்கத்தக்க வகையில் அரங்கேற்றினர்.

சைவம், அசைவம் மற்றும் ஜைன உணவுகள் என சர்வதேச உணவு வகைகள் விருந்தில் பரிமாறப்பட்டன. அதை மாநாட்டுப் பிரதிநிதிகள் சுவைத்து சாப்பிட்டனர். கேரளத்தின் பாரம்பரியமான சத்யா என்னும் விருந்து வாழை இலையில் பரிமாறப்பட்டது சிறப்பு அம்சமாகும்.

DGE-க்களின் பட்டமளிப்பு விழாவில் மேள, தாள நிகழ்வு அனைவரின் பாராட்டையும் பெற்றது. தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு ஆளுநரும் ஒற்றுமையாக தாள வாத்தியங்களை இசைத்து ஒற்றுமையையும் தோழமையையும் வெளிப்படுத்தினர். அவர்களின் மனைவிமார்கள், ஷிப்ரா ராய் சௌத்ரியின் யோசனையின் பேரில் மேற்கு வங்கத்தின் பாரம் பரியமான “லால் பாட் ஷாடா” (சிவப்பு பார்டருடன் கூடிய வெள்ளைப் புடவை) புடவை அணிந்து பார்வையாளர்களை பிரமிக்க வைத்தனர்.

நாளின் முடிவில், அமைப்பாளர் RID அனிருத்த ராய்சௌத்ரி, தலைவர் PDG ஜான் டேனியல் மற்றும் குழுவினர் இந்த விழா சிறப்புற நடைபெற கடுமையாக உழைத்திருந்தது தெளிவாகத் தெரியவந்தது. “நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மேற்பார்வையிடுவதற்காக நானும் மீராவும் எங்கள் இருப்பிடத்தை 40 நாட்கள் கொல்லத்திலிருந்து கொச்சிக்கு தாற்காலிகமாக மாற்றியிருந்தோம். ஒவ்வொரு நாளும் அதிகாலை 4 மணிக்கு எழுந்து, இரவு 11 மணி வரை செயலாற்றினோம். இந்த நிகழ்வுக்காக மொத்தம் 36 குழுக்கள் அமைக்கப்பட்டன” என்றார் டேனியல். ■

ரஷீதா பகத்



*சத்யா விருந்து கொண்டாடும் பிரதிநிதிகள்.*

# இந்தியாவால் மட்டுமே உலகில் அமைதியை ஏற்படுத்த முடியும்

**V முத்துகுமரன்**

‘‘வன்முறை, மோதல்கள், பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், சுற்றுச்சூழல் நெருக்கடிகள் மற்றும் தொழில்நுட்ப சீர்குலைவுகள் உலகில் மனிதகுலத்துக்கு பேரழிவை ஏற்படுத்தி வரும் நிலையில், உலகில் அமைதியை நிலைநாட்டும் பணிக்கு தலைமை ஏற்கும் நிலையில் இந்தியா உள்ளது’’ என்கிறார் ஊடகவியலாளரும், ஃபர்ஸ்ட் போஸ்ட் யூ டியூப் சேனலின் ஆசிரியருமான பால்கி சர்மா உபாத்யாய.

கொச்சி இன்ஸ்டிடியூட்டில் உலக நடைமுறைகள் படிப்படியாக சிதைந்து வருவதை தடுத்து நிறுத்த வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார். மேலும் உலகளாவிய தெற்கு பகுதியின் தலைவராக இருக்கும் இந்தியாவுக்கு, போர்கள், பொருளாதார ஏற்றத் தாழ்வுகள் மற்றும் செயற்கை நுண்ணறிவு மற்றும் பிற தொழில் நுட்பங்களால் ஏற்படும் பாதிப்புகளை தடுத்து நிறுத்தி உலகை வழிநடத்தும் ஆற்றல் உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார். கடந்த 2022-ம் ஆண்டிலிருந்து நடந்து வரும் உக்ரைன் போரால் சர்வதேச அளவில் சீர்குலைவு ஏற்பட்டுள்ளது. எரிசக்தி, உணவு விநியோக சந்தை வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு 30 மில்லியின் மக்கள் ஐரோப்பாவில் இடம்பெயர வழிவகுத்துவிட்டது. ‘‘எதிர்காலத்தில் உக்ரைன் போர் மேலும் என்ன பாதிப்பை ஏற்படுத்தும் என்று தெரியாதவாறு நிச்சயமற்ற தன்மை நிலவுகிறது’’ என்றும் அவர் எச்சரிக்கிறார்.

இந்தியாவும் பிறநாடுகளும் ராஜதந்திர ரீதியில் இந்த போரை முடிவுக் கொண்டுவர முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றன. உக்ரைன்-ரஷியா இடையே போர் தொடங்கிய நிலையிலேயே, இந்திய பிரதமர் நரேந்திர மோடி, ரஷிய அதிபர் புதினிடம், இது ‘‘போர் யுகம் அல்ல’’ என்று தெளிவுபடுத்தியதாக அவர் கூறினார். கடந்த 2023-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 7-ம் தேதி ஹமாஸ் தீவிரவாதிகள் அதிரடி தாக்குதல் நடத்தி நூற்றுக்கணக்கான இஸ்ரேலிய மக்களை பிணையாக பிடித்து வைத்ததை அடுத்து ஒருபுறம் இஸ்ரேல் மறுபுறம் ஹமாஸ்-ஹிஸ்புல்லா-ஈரான் இடையே முழு அளவு போராக வெடித்துள்ளது.

இந்த சிக்கலான இஸ்ரேல்-பாலஸ்தீன மோதலில் மட்டும் கடந்த இரண்டு ஆண்டுகளில் காஸாவில் 40,000-த்துக்கும் மேலான அப்பாவி மக்கள் பலியாகியுள்ளனர். தற்போது சிரியா, யேமன், சூடான் மற்றும் எத்தியோப்பியா உள்பட உலகில் 30-துக்கும் மேலான மோதல்கள் நடந்து வருகின்றன. சிரியாவில் நடந்து வரும் உள்நாட்டுப் போரில் மட்டும் கடந்த 13 ஆண்டுகளில் 5 லட்சம் பேர் உயிரிழந்துள்ளனர்.



முன்னாள் TRF அறங்காவலர் குலாம் வஹன்வதி பிரைட் ஆஃப் இந்தியா விருதை பத்திரிகையாளர் பால்கி சர்மாவுக்கு வழங்கினார். PDG முத்துபழனியப்பன் இடப்புறம் காணப்படுகிறார்.

V முத்துகுமரன்

**தீவிரவாதிகள், கூலிப்படைகள்**

மோதல்கள் நிறைந்த இன்றைய உலகில், எந்த ஒரு நாடும், தீவிரவாதிகள், பயங்கரவாதிகள், தனிப்பட்ட ஓநாய்கள் மற்றும் போர் விதிமுறைகளை பின்பற்றாத கூலிப்படைகளை எதிர்த்துப் போராட வேண்டியுள்ளது.

கடந்த 2–3 ஆண்டுகளில் இந்த மோதல் மண்டலங்களுக்கு 2.4 டிரில்லியன் மதிப்புள்ள, 50 சதவீத ஆயுதங்களை ஏற்றுமதி செய்ததன் மூலம் அமெரிக்காவின் ராணுவ தளவாட தொழிற்ச ாலைகள் பெரும் பயன் அடைந்து ள்ளன என்கிறார் பால்கி சர்மா. பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் மீது கவனத்தை திருப்பும் விதமாக ‘‘உலகமயமாக்கல் சில பணக்கார நாடுகள் மற்றும் தனி நபர்களின் கைகளில் செல்வத்தை குவித்து ள்ளதாக உலக வங்கி அறிக்கை தெரிவிக்கிறது. அதாவது 9.2 சதவீத மக்கள் ஒருநாளைக்கு வெறும் 2 டாலருக்கு குறைவான வருமானத்தில் வாழ்க்கை நடத்தி வருகின்றனர் என்றும் தெரிவித்துள்ளது. மேலும் உலகில் 700 மில்லியன் மக்கள் வறுமையின் பிடியில் சிக்கித் தவித்து வருவதாக ஐ.நா. அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

வறுமையின் கொடுமையைச் சமாளிக்கும்போது, ‘‘உணவு மட்டும் வழங்கினால் போதாது, மக்களுக்கு தங்குமிடம், கல்வி, சுகாதாரம் இன்னும் வளர்ச்சிக்கான வாய்ப்புகளையும் வழங்க வேண்டும். சப்-சஹாரா ஆப்பிரிக்கா, தெற்காசியாவில் ஒரு பகுதி மற்றும் லத்தீன் அமெரிக்கா இங்கெல்லாம் பெரும் ஏற்றத்தாழ்வுகளும் துன்பங் களும் நீடிக்கின்றன. இவற்றுக்கும் தீர்வுகாணப்பட வேண்டும் என்கிறார் அவர்.

**காலநிலை மாற்றம்**

ஐ.நா. ஆய்வின்படி, ‘‘காலநிலை மாற்றம் உலகளாவிய அமைதிக்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளது. மேலும் பசுமை இல்ல வாயுக்களின் வரலாற்று உமிழ்வுகள் காரணமாக வறட்சி, வெள்ளம் மற்றும் இயற்கை பேரழிவுகள் ஒரு பெரும் சக்தியாக உருவெடுக்கின்றன.

COP உச்சி மாநாட்டில் நிர்ணயிக்கப்பட்ட உமிழ்வு இலக்குகளை எட்டுவதில் நாடுகள் ஒன்றையொன்று குற்றஞ் சாட்டுவதிலேயே குறியாக இருக்கின்றன. காலநிலை மாற்றம் அரசில் கருத்தொற்றுமைக்காக காத்திருக்காது. ‘‘வெள்ளம், வறட்சி மற்றும் சூறாவளி ஆகியவை புவிசார் நிகழ்வுகள் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இதனால் பாதிக்கப்படுவது ஏழை நாடுகள்தான். ஏனெனில் இயற்கை வளங்கள் குறைவாக இருப்பதால் மக்கள் வாழ்வாதாரம் தேடி வேறு இடங்களுக்குச் செல்ல நேரிடுகிறது. அதாவது, பூமி கிரகத்திலேயே அவர்கள் அகதிகளாகின்றனர், என்கிறார் அவர்.

காலநிலை மாற்றங்கள் மட்டும் மேற்கு மற்றும் மத்திய ஆப்பிரிக்காவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நான்கு சதவீதத்துக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றன.

செயற்கை நுண்ணறிவு AI இயங்குதளங்கள் மூலம் ஏற்படப் போகும் பாதிப்புகள் ஒரு புயலாக உருவாகி பெரும் சவால்களாக இருக்கலாம். இது வேலை வாய்ப்புச் சந்தை மற்றும் சமூக கட்டமைப்பில் என்ன பாதிப்பை ஏற்படுத்தும் என்பது நமக்குத் தெரியாது. கொள்கை வகுப்பாளர்கள் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பங்களை பின்பற்ற நினைக்கும்போது, அரசியல்வாதிகள் ஏதோ மக்களுக்குச் சேவை செய்வதாக கூறுவார்கள். ஆனால், மற்றவர்கள் செலவில் தங்களது சொந்த நலனுக்காக செயல்படுகிறார்கள் என்பதுதான் உண்மை. புதிய அரசியலமைப்புக்காக ஐம்பது நாடுகள் தேர்தல்களை நடத்தியுள்ளன. ஆட்சி மாற்றம் ஏற்படும்போது உகாண்டா, மாலத் தீவுகள் மற்றும் வங்கதேசம் போன்ற நாடுகளில் அதிக இடையூறுகளை நாம் எதிர்பார்க்கலாம். இரண்டாவது முறையாக அமெரிக்க அதிபராக பதவியேற்றுள்ள டொனால்டு டிரம்ப், உலகின் செயல்பாட்டில் என்ன விளைவுகளை ஏற்படுத்துவார் என்பது நமக்கு தெரியாது.

பல தசாப்தங்களாக வேற்று மையில் ஒற்றுமையின் சாம்பியனாக விளங்கும், அகிம்சை மற்றும் பன்முகத்தன்மை மீது நம்பிக்கையுள்ள இந்தியா, புவிசார் உலகில் அமைதியை நிலைநாட்டுவதில் உன்னதமான இடத்தில் உள்ளது.

**அனைவரிடம் பேசுவோம்**

இப்போது நடந்து வரும் போரில் இந்தியா எந்த ஒரு நாட்டின் சார்பாகவும் இல்லை. அமைதியை கட்டியெழுப்பும் நாடாகவே இந்தியா செயல்பட்டு வருகிறது. நாம் அமெரிக்காவிடமிருந்து ஆளில்லா விமானங்களையும், ஆயுதங்களையும் ரஷியாவிடமிருந்து உயர் தொழில்நுட்ப ராணுவ தளவாடங்கள் மற்றும் எண்ணெய் வாங்குகிறோம். ஈரான் மற்றும் சவூதி அரேபியாவுடன் நெருங்கிய உறவு வைத்துள்ளோம். இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனத்துடன் நட்புறவை வளர்த்து வருகிறோம்.

உலகில் பெரும்பாலான நாடுகளின் நல்லெண்ணத்தை நாம் பெற்றுள்ளோம். இந்தியா இதுவரை 2,00,000 இந்திய ராணுவத்தினரை அமைதிகாப்பு படையாக 40 நாடுகளுக்கு அனுப்பியுள்ளது. உள்நாட்டு கலவரங்களால் பாதிக்கப்பட்ட காங்கோ, தெற்கு சூடான், லெபனான், ஆப்கானிஸ்தான் மற்றும் சில நாடுகளில் வாழ் வாதாரத்தை கட்டியெழுப்பும் பணியில் நமது வீரர்கள் ஈடுபட்டு வருகின்றனர். பலதரப்பு விதிகள் அடிப்படையில் உலகளாவிய ஒழுங்குமுறைக்கு ஏற்ப ஐக்கிய நாடுகள் சபையை சீர்திருத்த இந்தியா முயற்சித்து வருகிறது. தில்லியில் நடைபெற்ற ஜி-20 நாடுகள் உச்சிமாநாட்டில் நாம் ஆப்பிரிக்க ஒன்றியத்தை உயரடுக்கு குழுவில் இணைத் துள்ளோம். தற்போது வன்முறை மற்றும் மோதல்களால் விரிசல் அடைந்து இருக்கும் உலகில் ஒரு ஒழுங்கை கட்டமைக்க ஒத்துழைப்பு மற்றும் கூட்டாண் மைகள் மூலம் சுமுகமான உரையாடல் நடத்துவதற்கும் நாம் தயாராகி வருகிறோம், என்றார். வாஹன்வதி, PDG முத்து பழனியப்பனுடன் இணைந்து பால்கி சர்மாவுக்கு *Pride of Nation* விருது வழங்கப்பட்டது.■

# நிலையான எதிர்காலத்தை நோக்கி

V முத்துகுமரன்

ஒரு வலுவான கலாச்சாரம் மற்றும் கார்ப்பரேட் மதிப்புகள் தலைமைத்துவ சிறப்பிற்கு அடித்தளமாக அமைகின்றன, அவற்றை ஒத்துழைப்பு மற்றும் தொடர்ச்சியான வெற்றியின் மூலம் நிலைப்பெறச் செய்யவேண்டும் என்று கொச்சி இன்ஸ்டிடியூட்டில் உங்களைத் தாண்டிப் பாருங்கள் என்ற தலைப்பில் இந்திய ஹோட்டல்ஸ் கம்பெனி லிமிடெட் (IHCL) MD புனீத் சத்வால் கூறினார்.

எளிய, மிகச்சிறிய இலக்குகளை மனதில் கொண்டு பணியாற்றுங்கள், இதன்மூலம் நம் பிராண்டிங், முன்னுரிமைகள் மற்றும் போர்ட்ஃபோலியோக்களை தடைகள் இல்லாமல் மறுகட்டமைப்பதில் கவனம் செலுத்த முடியும். ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளுக்கான கூட்டணிகள் மற்றும் கூட்டாண்மை மூலம் வளர்க்கப்படும் வளர்ச்சி மனப்பான்மையைக் கொண்டிருப்போம்.'' இந்தியாவில் 1 டிரில்லியன் டாலர் சந்தை மூலதனத்தைத் தாண்டிய முதல் விருந்தோம்பல் நிறுவனமாக IHCL இருந்தாலும், 2017 வரை அது ஒரு ரோலர்கோஸ்டர் பயணத்தையே கொண்டிருந்தது.

1868-ல் அதன் நிறுவனர் ஜம்செட்ஜி டாடாவால் நிறுவப்பட்ட டாடா குழுமத்தின் பழமையான மற்றும் முன்னோடி நிறுவனங்களில் ஒன்றான IHCL 2017 வரை டாடா குழுமத்தின் வைரம் என்று அறியப் பட்டது. "உலக நிதி நெருக்கடி (2007–08) மற்றும் 26/11 மும்பையில் உள்ள தாஜ் ஹோட்டலில் நடந்த பயங்கரவாதத் தாக்குதல் பண வளம் மிக்க நிறுவனத்தை வளர்ச்சி அளவீடுகளில் குறைவாகச் செயல்பட வைத்தது'' என்று அவர் விளக்கினார். "ஆனால் அவர்கள் சவால்களை நேருக்குநேர் எதிர்கொண்டு, தைரியமாகவும் மாறுபட்டும் செயல்பட்டனர் மற்றும் சிக்கல்களை சமாளிக்கத் தகுந்த தன்மை மற்றும்



*RIDs அனிருதா ராய்சௌத்ரி, ராஜு சுப்பிரமணியன் ஆகியோர் India Climate Collaborative தலைமை நிர்வாக அதிகாரி ஸ்லோகா நாத்துக்கு விருது வழங்கினார்கள்.*

உறுதிகொண்டுள்ளவர்களாக மாற்றமடைந்தனர்.''

2017-ன் 142 ஹோட்டல்களுக்கு எதிராக, இன்று அவை உலகம் முழுவதும் 232 செயல்பாடுகளைக் கொண்டுள்ளன, இவை அனைத்தும் கூட்டாண்மை மற்றும் கூட்டணிகள் மூலம் செய்யப்பட்டன.

முன்னதாக, PRID P T பிரபாகர் 40 ஆண்டுகளுக்கு முன்பு மும்பையில் உள்ள டாடா மெமோரியல் மருத்துவமனையில் ஒரு சில புற்றுநோயாளிகளுக்கு ஒரு சிறு தொழிலதிபர் ஹரக்சந்த் சவ்லா உணவுப் பொட்டலங்களை விநியோகிக்கத் தொடங்கியதை நினைவுகூர்ந்தார். "அவரது முயற்சியின் பலனாக, இப்போது பல கார்ப்பரேட் நிறுவனங்கள் ஒரு நாளைக்கு 1,000 நோயாளிகளுக்கு உணவு வழங்குவதற்கு பணம் மற்றும் வளங்களை சேகரித்துள்ளன'' என்று அவர் கூறினார்.


The India Hotels Company *நிர்வாக இயக்குநர் புனீத் சத்வாலுக்கு* PRID P T *பிரபாகர் விருதை வழங்கினார்.*

### காலநிலை உறுதிப்பாடு

"மாறும் உலகில் உறுதிப்பாடு'' என்ற தலைப்பில் பேசிய India Climate Collaborative (ICC) நிறுவனர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி ஷ்லோகா நாத், இப்போது பாதிக்கக்கூடிய சமூகங்களில் அழிவை ஏற்படுத்தி வரும் காலநிலை நெருக்கடியின் அச்சுறுத்தல்களை சுட்டிக்காட்டினார். "காலநிலை மாற்றத்தின் விளைவாக பல உயிரினங்கள் அழிந்து வருகின்றன, மேலும் வெள்ளம் மற்றும் வறட்சி கோடிக்கணக்கான குடும்பங்களை பாதிக்கிறது. அவர்கள் இந்த கடுமையான காலநிலையை எப்படி சமாளிக்க வேண்டும் என்று அறியாமல் உள்ளனர்'' என்றார்.

இது சமூக மற்றும் பொருளாதார சமத்துவத்தின் பேரழிவாகும், ஏனெனில் பெண்கள், குழந்தைகள், விவசாயிகள் மற்றும் குறைந்த வருமானக் குடும்பங்கள் காலநிலை நெருக்கடியின் பெரும்பாதிப்பை எதிர்கொள்கின்றனர். "சுத்தமான ஆற்றல், உணவு மற்றும் நல்ல கல்விக்கான அணுகல் அவர்களுக்கு இல்லை. காலநிலை நெருக்கடியை எதிர்கொள்வதில் மனித இனத்திற்கு பொருந்தி, புதுமை செய்ய மற்றும் வெற்றியோடு முன்னேற ஒரு பெரிய வாய்ப்பு உள்ளது. இயற்கை அடிப்படையிலான தீர்வுகள் மிகச் சிக்கலற்றவை மற்றும் செலவு குறைவானவை, மேலும் அவை காலநிலை நெருக்கடியை சமாளிக்க மிகப் பயனுள்ளதாக உள்ளன'' என்று அவர் கூறினார்.

"இந்திய விவசாயிகள் ஒழுங்கற்ற மழை மற்றும் பயிர் இழப்புகளால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், "விவசாயிகளின் பாதியினரை பசுமை வேலைவாய்ப்புகளுக்கான பயிற்சிக்கு மாற்ற முடியும், ஏனெனில் நாட்டின் GDPயின் 70 சதவீதம் நகரப்பகுதிகளிலிருந்து வருகிறது, இவை கடுமையான காலநிலை மாற்றங்களால் அதிகமாகப் பாதிக்கப்படுகின்றன'' என்று அவர் விளக்கினார்.

இரண்டாவதாக, "உண்மையான, நிலையான மாற்றத்தை உண்டாக்கு வதற்கான உள்ளூர் தீர்வுகள் மற்றும் புதுமைகளை'' மையமாகக் கொண்டு முக்கிய பொருளாதாரத் துறைகளில் காலநிலை உறுதிப்பாட்டை உட்பொதிக்க வேண்டும். "காலநிலை நெருக்கடி மனிதகுலத்தின் சிறந்தவர்களையும் சோதனைக்கு உட்படுத்துகிறது, மேலும் நாம் எவ்வாறு பயன்படுத்துகிறோம், சாப்பிடுகிறோம், பயணிக்கிறோம் மற்றும் கட்டுகிறோம் என்பதன் கண்ணோட்டத்தை மாற்றி, நமது பூமியை மீட்டெடுத்து, பருவநிலை மாற்றங்களுக்கு எதிராக அதனை மேலும் உறுதியானதாக ஆக்க வேண்டும். நீடித்த காலநிலை தீர்வுகளுக்கு, எல்லை தாண்டிய நமது கூட்டாளர்களுடன் இணைந்து, இயற்கை மற்றும் சமூகங்களுடன் இணக்கமாக செயல்பட வேண்டும்'' என்று அவர் கூறினார்.

ஸ்லோகாவை வரவேற்று RI இயக்குநர் ராஜு சுப்ரமணியன் கூறுகையில், ரோட்டரி சுற்றுச் சூழலை ஏழாவது கவனம் செலுத்தும் பகுதியாக அறிமுகப்படுத்தி யிருந்தாலும், "கிரீன்ஹவுஸ் வாயுக்களின் வெளியேற்றம் நமது வாழ்விடங்களை அழிக்க வழிவகுப்பதால் இந்த நடவடிக்கை சற்று தாமதமாக வந்துள்ளது'' என்றார். அவர் பெங்களூருவை உதாரணமாக காண்பித்து, கட்டிடதாரர்கள் மற்றும் அதிகாரிகள் இடையிலான ஒப்பந்தத்தின் காரணமாகப் பல மரங்கள் வெட்டப்பட்டதையும், நூற்றுக்கணக்கான ஏரிகள் காணாமல் போனதையும் குறிப்பிட்டார்.

படங்கள்: V முத்துகுமரன்

# TRF Star Performers (2023–24)

| Trophy | Zone 4 | Zone 5 |
|---|---|---|
| Highest Contribution to TRF Annual Fund | Arun Bhargava (3141) | T R Vijayakumar (3201) |
| Highest Contribution to TRF Endowment Fund | Arun Bhargava (3141) | Ravi Raman (3232) |
| Highest Contribution to TRF Polio Fund | Milind Kulkarni (3142) | Ravi Raman (3232) |
| Highest per capita APF Contribution to TRF | Arun Bhargava (3141) | Jerome Rajendram (3220) |
| Highest Total Contribution to TRF | Arun Bhargava (3141) | Ravi Raman (3232) |
| Highest Donor Participation (% wise) | Nihir Dave (3060) | T R Vijayakumar (3201) |
| 100% Club Participation for TRF Giving | Mehul Rathod (3055)<br>Arun Bhargava (3141)<br>Milind Kulkarni (3142) | S Raghavan (2982)<br>Jerome Rajendram (3220) |
| Highest Giving Club towards TRF Polio Plus Fund | President G Sukumaran Nair, RC Hiranandani Estate (3142) | President P Srinivasan, RC BHEL City Tiruchirapalli (3000) |




RID 3141 DG *சேத்தன் தேசாய்க்கு* RI *தலைவர் ஸ்டெஃப்னி அர்ச்சிக் விருதை வழங்குகிறார்.* **இடதிலிருந்து:** *அறங்காவலர் பரத் பாண்டியா,* RID *ராஜு சுப்ரமணியன், அறங்காவலர் மார்த்தா ஹெல்மன் மற்றும்* RID *அனிருதா ராய்சௌத்ரி ஆகியோரும் உள்ளனர்.*



RID 3234 DRFC B *தாக்ஷாயணியை அறங்காவலர் மார்த்தா மற்றும்* RID *ராய்சௌத்ரி வாழ்த்துகின்றனர்.*



**இடமிருந்து:** RID *சுப்பிரமணியன்,* RIPN *சங்கூ யுன்,* RID 3132 DGE *சுதீர் லாட்டூர்,* RI *தலைவர் ஸ்டெஃப்னி மற்றும்* PDG *ஸ்வாதி ஹெர்கல்.*

# — Zones 4, 5, 6 and 7

| Trophy | Zone 6 | Zone 7 |
|---|---|---|
| Highest Contribution to TRF Annual Fund | Hira Lal Yadav (3291) | Manjoo Phadke (3131) |
| Highest Contribution to TRF Endowment Fund | Hira Lal Yadav (3291) | V Srinivas Murthy (3192) |
| Highest Contribution to TRF Polio Fund | Rajendra Prasad Dhoju (3292) | Subbarao Ravuri (3020) |
| Highest per capita APF Contribution to TRF | Hira Lal Yadav (3291) | Manjoo Phadke (3131) |
| Highest Total Contribution to TRF | Nilesh Agarwal (3240) | Manjoo Phadke (3131) |
| Highest Donor Participation (% wise) | Rajendra Prasad Dhoju (3292) | H R Keshav (3181) |
| 100% Club Participation for TRF Giving | Ashok Kumar Gupta (3100) Nilesh Agarwal (3240) | Subbarao Ravuri (3020); Manjoo Phadke (3131); Swati Herkal (3132); B C Geetha (3182) |
| Highest Giving Club towards TRF Polio Plus Fund | President Jayant Dagadu Khairnar, RC Nasik Grapecity, (3030) | President Prasad V R Sadhu, RC Vijayawada Midtown (3020) |

| Zone 4, 5, 6 & 7 (India, Nepal and Sri Lanka) | RI District |
|---|---|
| Nitish Laharry Trophy for Highest Total Contribution to TRF | 3141 |
| Binota and Kalyan Banerjee Trophy for Highest Endowment Fund Contribution | 3192 |
| Usha and Raja Saboo Trophy for Highest Annual Fund Contribution to TRF | 3131 |
| Highest Polio Fund Contribution to TRF | 3020 |
| District with highest new AKS members | 3011 |

ஜெய்ஸ்ரீ




PDGs *ஸ்ரீனிவாஸ் மூர்த்தி* (3192), *மஞ்சூ ஃபாட்கே* (3131) *மற்றும் ஜீதேந்தர் குப்தா* (3011) *ஆகியோர் விருதுகளுடன்.*



**இடமிருந்து:** RI *தலைவர் ஸ்டெஃப்னி* PDG *சுப்பாராவ் ரவுரி* (3020), *அறங்காவலர் மார்த்தா மற்றும்* RID *ராய்சௌத்ரி.*

*உறுப்பினர் மற்றும் பொதுப் பட விருதுகள் அடுத்த இதழில்.*

**படங்கள்:** V *முத்துக்குமரன்*

# ஆதரவற்ற பெண்களை ஆதரிக்கும் RC தில்லி மயூர் விகார்

ரஷீதா பகத்



தில்லிக்கு அருகிலுள்ள ஃபரீதாபாதில் இருக்கும் ஆர்ய கன்யா சதனில் 70க்கும் மேற்பட்ட ஆதரவற்ற பெண்கள் வசித்துவருகிறார்கள். இவர்களுக்கு உதவி தேவைப்படும்போதெல்லாம், தில்லி மயூர் விகார் ரோட்டரி சங்கம், RID 3012, ஆதரவுக் கரம் நீட்டிவருகிறது.

10 ஆண்டுகளுக்கும் மேலாக, முன்னாள் தலைவர் அர்விந்த் ஜெயின் தலைமையில் இந்தச் சங்கத்தின் மூத்த ரோட்டரியன்களும் மற்றவர்களும் 32 ஆண்டுகளுக்குமுன் ஹரியானா அரசாங்கம் கொடுத்த நிலத்தில் கட்டப்பட்ட இந்த ஆதரவற்றோர் இல்லத்துக்கு உதவிக்கொண்டிருக்கிறார்கள். “ஓர் NGO இயக்கிவரும் இந்த இல்லம் ஃபரீதாபாதின் வளமான 15வது பிரிவில் உள்ளது, தங்களைக் கவனித்துக்கொள்ள யாரும் இல்லாத ஆதரவற்ற பெண்களுக்கு உறைவிடம் வழங்குகிறது.

இந்தப் பெண்கள் சிறு வயதிலிருந்து பெரியவர்களாகும்வரை இங்கு வாழ்கிறார்கள், பள்ளிக்கு, கல்லூரிக்குக்கூட அனுப்பப் படுகிறார்கள். இவர்களில் சிலருக்குத் தொண்டுள்ளம் கொண்டவர்களின் உதவியுடன் திருமணம் செய்துவைக்கப் பட்டுள்ளது. எங்கள் சங்க உறுப்பினர்களும் இதற்கு உதவி யுள்ளார்கள்’’ என்கிறார் இந்தச் சங்கத்தின் உறுப்பினரான T D பாட்டியா.





*அசோக் வோஹ்ராவும் அவரது மனைவி நீலுவும் ஒரு சிறுமிக்கு கம்பளி ஆடைகள் மற்றும் ஒரு வருட பள்ளிக் கட்டணத்தை பரிசாக அளித்தனர்.*

கடந்த ஐந்து ஆண்டுகளில், முன்னாள் தலைவர் ஜெயின் லட்சக் கணக்கில் நன்கொடையளித்து இந்த ஆதரவற்றோர் இல்லத்துக்கு உதவிக்கொண்டிருக்கிறார். "இந்தப் பெண்கள் சிறு வயதிலிருந்தே ஆதரிக்கப்படுவதால், இவர்களுக்கு உறைவிடம், உணவு, உடைகள், கல்வி வழங்கப்படுவதால், தகுதி பெற்றவர்களுக்கு வேலை கிடைக்க உதவி வழங்கப்படுவதால், அவ்வப் போது இந்த இல்லத்துக்குத் தேவைப்படும் உதவிகளை எங்கள் சங்கம் செய்துவருகிறது."

நவம்பரில், ஜெயின் மற்றும் மற்ற சில ரோட்டரியன்கள் வழங்கிய நிதியின் மூலம், இந்தப் பெண்களைக் குளிர்காலத்திலிருந்து பாதுகாக்கும் போர்வைகள், கதகதப்பான உடைகளை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. இந்தப் பெண்களுக்காகப் பஜனை நிகழ்ச்சி ஒன்றுக்கும் ஏற்பாடு செய்தார் ஜெயின்.

"10 ஆண்டுகளுக்குமுன், இந்த இல்லம் எங்கள் சங்கத்தின் முன்னாள் தலைவரும் KEI இன்டஸ்ட்ரீஸ் தலைவருமான ராஜீவ் குப்தாவையும் அவருடைய மனைவி ஷஷி-யையும் அணுகி உதவி கேட்டது" என்கிறார் பாட்டியா. "அவர்கள் விருப்பத்துடன் வழிகாட்டினார்கள், சங்கத்தின் மற்ற உறுப்பினர்களையும் கொடையளிக்கச் செய்தார்கள். இப்போதும் அவர்கள் இந்தப் பெண்களுக்குப் பெரிய அளவில் உதவிவருகிறார்கள், உணவு, உடைகளோடு, சில பெண்களுக்குத் திருமணம் ஏற்பாடு செய்யவும் அவர்கள் உதவியுள்ளார்கள். இந்தத் திருமணத்துக்கான ஆடைகளோடு தாலி போன்ற தங்க நகைகளையும் இவர்கள் வழங்கியுள்ளார்கள். இப்போது கன்யா சதனில் 72 பெண்கள் வசிக்கிறார்கள். இவர்களோடு 22 ஆண்டுகளாக வாழ்ந்துவரும் குழுத் தலைவர் இவர்களைக் கவனித்துக் கொள்கிறார்."

இங்குள்ள பெண்கள் குளிர் மாதங்களைச் சமாளிப்பதற்கென்று கம்பளி உடைகளையும் மேலங்கி களையும் வழங்கத் திட்டமிட்டுள் ளார்கள் இச்சங்கத்தின் ரோட்டரி யன்கள். ஏற்கெனவே இந்த இல்லத்தைச் சேர்ந்த பல பெண்களை ரோட்டரியன்கள் தத்தெடுத்துள் ளார்கள், அவர்களுடைய கல்விக் கட்டணத்தைச் செலுத்துவது, பாடப் புத்தகங்கள், பயிற்சிப் புத்தகங்கள் போன்ற கற்றல் பொருட்களை வழங்குவது என்று பலவிதங்களில் அவர்களுடைய கல்விக்கு உதவியுள்ளார்கள்.

அசோக் வோஹ்ரா-வும் அவருடைய மனைவி நீலு-வும் சமீபத்தில் இந்த இல்லத்துக்கு வந்தபோது, ஒரு பெண்ணுக்குக் கம்பளி உடைகளையும் பள்ளிக் கட்டணத்தையும் (முழு ஆண்டுக்கு ரூ.12,000) வழங்கினார்கள். போர்வைகள், மற்ற கம்பளி உடைகளை வழங்கியபிறகு, ரோட்டரியன்கள் அங்குள்ளவர்களுக்கு உணவும் வழங்கினார்கள். இந்தச் சதனுக்கு வருகை தந்துள்ளவர்களில் சிலர், சங்கத் தலைவர் அவதேஷ் குமார், அர்விந்த் குமார் ஜெயின், N K பார்கவா, அசோக் வோஹ்ரா, அவருடைய மனைவி நீலு. இந்த இல்லத்திலிருந்து இன்னும் சில பெண்களைத் தத்தெடுக்கவும், அவர்களுடைய கல்விக்கான உதவித் தொகையையும் கற்றல் பொருட்களையும் வழங்கவும் தங்கள் சங்கம் திட்டமிட்டுள்ளதாகப் பாட்டியா தெரிவிக்கிறார்.

RC தில்லி மயூர் விகார் செய்து வரும் மற்ற வழக்கமான திட்டங்கள், கண் மற்றும் பிற நலப் பரிசோதனை முகாம்கள், யமுனைக் கரைகளில் விவசாயம் செய்யும் சிறு விவசாயிகளுடைய குழந்தைகளுக்குப் பாடப் புத்தகங்கள், குறிப்பேடுகள், குளிருக்கு ஏற்ற கதகதப்பான உடைகள், போர்வைகளை வழங்குவது ஆகும். ■

# சமூகங்களுக்கு ஊட்டமளித்தல்

ஜெய்ஸ்ரீ

RC வாத்வான் சிட்டி, RID 3060, அதன் திட்டமான புக்யா நே போஜன் (பசித் தோருக்கு உணவு) மூலம் 5 ரூபாய்க்கு இரவு உணவை வழங்க அன்னபூர்ணா ரதத்தை இயக்குகிறது. 2021–22-ல் தொடங்கப்பட்டதிலிருந்து, இந்த முயற்சி குஜராத்தின் வாத்வானின் இரட்டை நகரமான சுரேந்திர நகரில் 1.4 லட்சத்திற்கும் அதிகமான உணவை வழங்கியுள்ளது என்று சங்கத்தலைவர் ஹிதா ஜானி கூறுகிறார்.

தினமும் மாலை 5.30 முதல் 7.30 மணி வரை, ஒரு டிரக் குடிசை காலனிகளுக்கு ரொட்டி, குழம்பு, கிச்சடி மற்றும் மோர் உள்ளிட்ட சூடான, சத்தான உணவுகளை வழங்குகிறது. மேலும் பண்டிகை தினங்களில் மெனுவில் ஒரு இனிப்பும் சேர்க்கப்படுகிறது. “பெறுநர்கள் தங்கள் கண்ணியத்தை நிலைநிறுத்துவதை உறுதி செய் வதற்காக நாங்கள் ஒரு தட்டுக்கு ரூ.5 வசூலிக்கிறோம், ஆனால் இந்த தொகையை செலுத்த முடியாதவர்கள் கூட திருப்பி அனுப்பப்படுவதில்லை’’ என்று அவர் விளக்குகிறார். தினமும் சராசரியாக 150 பேர் இந்த சேவையால் பயனடைகின்றனர்.

பரோபகாரர் தன்ஜிபாய் படேல் தலைமையிலான ராம்போஜ்னாலே அறக்கட்டளை மற்றும் சங்க உறுப்பினர் கார்த்திக் பட்டேலின் தந்தை டாக்டர் யஷ்வந்த் படேல் ஆகியோரால் நிதியளிக்கப்படுகிறது. உணவு வழங்குவதற்கு தினசரி செலவான ரூ.2,500 பெரும்பாலும் சங்க உறுப்பினர்கள் பிறந்தநாள் மற்றும் ஆண்டுவிழாக்கள் போன்ற விசேஷ நிகழ்வுகளைக் குறிக்கும் வகையில் வழங்குகிறார்கள்.

அதன் 25வது ஆண்டில் இருக்கும் 60 உறுப்பினர்களைக் கொண்ட சங்கம் ஐந்து நிரந்தரத் திட்டங்களைக் கொண்டுள்ளது. அதன் ஆரம்பகால சாதனைகளில், ரோட்டரி நூற்றாண்டு விழாவை குறிக்கும் வகையில் உருவாக்கப்பட்ட தோட்டம் சமூகத்தில் ஒரு அடையாளமாக உள்ளது.

ஹிதாவின் கணவர் பிரசாந்த் ஜானி மாவட்ட ஆளுநராக இருந்த போது 2020-ல் நிறுவப்பட்ட டயாலிசிஸ் மற்றும் தலசீமியா மையம் ஆகியவை மற்ற முக்கிய முயற்சிகளில் ஒன்றாகும். இந்த மையங்களில் தினமும் 25–30 பேருக்கு சேவை செய்யபடுகிறது. “படிப்படியாக டயாலிசிஸ் மையத்தில் 13 இயந்திரங்களை நிறுவி யுள்ளோம். எங்கள் சங்கம் இரண்டு மையங்களிலும் நோயாளிகளுக்கும் அவர்களைப் பராமரிப்பவர்களுக்கும் ஒரு பிரத்யேக நிதி மூலம் காலை உணவை வழங்குகிறது’’ என்று அவர் கூறுகிறார்.

CSR மானியத்தின் உதவியுடன் கடந்த ரோட்டரி ஆண்டு தொழிற் பயிற்சி மையம் திறக்கப்பட்டது, மேலும் அதில் கணினிகள், CSC இயந்திரங்கள் மற்றும் தையல் இயந்திரங்கள் ஆகியவற்றைக் கொண்டு தொழில் சார்ந்த திறன்களில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் பயிற்சி அளிக்கப் படுகிறது. இம்மையத்தில் இளைஞர்களுக்கு கராத்தே, செஸ், கேரம் போன்றவற்றிலும் பயிற்சி அளிக்கப்படுகிறது.■

*அன்னபூர்ணா ரதத்தில் இருந்து உணவு வழங்கப்படுகிறது.*



Rotary PEOPLE OF ACTION

# ரோட்டரி உதவியால் உயிர்பெற்ற உறைவிடப் பள்ளி

கிரண் ஜெஹரா

2022-ம் ஆண்டு பிப்ரவரியில் கணினி வசதி கேட்டு குஜராத் மாநிலம், சூரத் அருகே பழங்குடியினர் கிராமமான அமல்சாடியில் உள்ள உத்தர்புனியாடி வித்யாலயா பள்ளி சூரத் ரோட்டரி சங்கத்தை (RID 3060) அணுகியது. பின்னர் சங்க உறுப்பினர்கள் பள்ளிக்குச் சென்று ஆய்வு செய்ததை அடுத்து 10 கணினி கருவிகளை பள்ளி பெற்றது.

இந்த விஜயம் ஆழமான சவால் களையும் வெளிப்படுத்தியது. “இந்த உறைவிடப் பள்ளியில் 358 மாணவர்கள் உள்ளனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். அத்தியாவசிய மற்றும் அடிப்படை வசதிகள் இல்லாமல் அவர்கள் சவால்களை சந்திக்க வேண்டி யிருந்தது. கழிப்பறைகள் பழுதடைந் திருந்தன. குடிநீர் பெறுவது அரிதாக இருந்தது. அடிப்படை சுகாதார வசதிகளும் இல்லை” என்கிறார் சங்கத்தின் திட்ட ஒருங்கிணைப் பாளர் அஜய் மகாஜன்.

அமெரிக்காவின் எமோரி திரூயிட் ஹில்ஸ் ரோட்டரி சங்கத்தின் (RID 6900) ஆதரவிலான ரூ.40 லட்சம் சர்வதேச மானிய உதவியுடன் சூரத் சங்கம் அந்த பள்ளியைச் சீரமைத்தது. மாணவர்கள், மாணவிகளுக்கு தனித்தனி கழிப்பறைத் தொகுதிகள் கட்டித் தரப்பட்டன. மேலும் கை கழுவும் நிலையம், 1500 லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் தொட்டி அமைத்து தரப்பட்டது. 115 சிறுவர் மற்றும் 90 சிறுமிகள் தங்கும் விடுதி பிளம்பிங் வேலைகள் செய்யப்பட்டு, புதிய டைல்ஸ் பதிக்கப்பட்டு, வர்ணங்கள் பூசப்பட்டு புதுப்பொலிவுடன் மாற்றியமைக்கப்பட்டது.

கணினி ஆய்வகம் விரிவுபடுத்தப் பட்டு, அதிக மாணவர்களுக்கு தொழில்நுட்ப அணுகலை வழங்கும் விதத்தில் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டன. டேபிள், நாற்காலி போன்ற தளவாடங்களும் வழங்கப்பட்டன. பின்னர், பள்ளி கூடுதல் கணினி களை நிறுவுவதற்கான அரசு நிதியை பெற்றபோது, அவை ஆசிரியர்களுக்கான ஓய்வறை கட்டு வதற்கும், ஆய்வக இடத்தை விரிவு படுத்துவதற்கும் திருப்பிவிடப்பட்டது என்றார் பள்ளியின் முதல்வர் கிரிதர் டாண்டெல்.

சங்கத்தின் உறுப்பினர்கள் தங்கள் தொழில்முறை நிபுணத்து வத்தையும் திட்டத்திற்கு கொண்டுவந்தனர். கட்டடக் கலைஞரான உமாங் தலால், திட்டமிடல் மற்றும் வேலைக்கான வரைபடங்களைக் கையாண்டார். கட்டமைப்புக்கான வடிவமைப்பை ஜவாரே வாடியா மேற்கொண்டார். கமால் காந்தி, திட்டங்களை மேற்பார்வையிட்டார். இவர்கள்



*புதிய கணினி ஆய்வகத்தில் ஒரு மாணவி.*





*பள்ளியில் RC சூரத் நிறுவிய புதிய ஹேண்ட்வாஷ் நிலையம்.*

மூவரும் தங்களது நேரத்தையும், திறமையையும் பங்களிப்புச் செய்தனர். இதன் மூலம் திட்டச் செலவுகள் கணிசமாக குறைந்தது. சமீபத்தில் மகாஜன் சங்கத்தின் இதர உறுப்பினர்களான டாக்டர் விரால் சோக்ஷி மற்றும் ஸ்வேதா ஜாஜு ஆகியோருடன் சேர்ந்து மாணவர்களுக்காக மருத்துவம் மற்றும் சுகாதார பயிலரங்குகளை நடத்தினர்.

திட்டத்தின் நிலைத்தன்மையை உறுதிசெய்ய, கடந்த 2024 செப்டம்பர் மாதம் பள்ளியில் இன்டராக்ட் சங்கம் நிறுவப்பட்டது. இன்டராக்டர்கள் தங்கள் தலைமைத்துவம் மற்றும் குழுத்திறனை மேம்படுத்துவதுடன் சீரமைக்கப்பட்ட பள்ளியை பராமரிப்பதில் முக்கிய பங்காற்றி வருகின்றனர். சுகாதார நடை முறைகள் சரிவர பின்பற்றப்படுகிறதா என்பதை கண்காணிக்கின்றனர். மாணவர்கள் உணவு சாப்பிடுவதற்கு முன் சோப்பு போட்டு கைகளை கழுவுவதையும் கழிப்பறைகள் மற்றும் பள்ளி வளாகம் தூய்மையாக இருப்பதையும் உறுதிசெய்கின்றனர். தூய்மை கலாசாரத்தை வளர்ப்பதற்கும் பொறுப்பேற்கிறார்கள் என்றும் அவர் கூறினார்.■

# விவசாயிகள்–இந்த மும்பை சங்கத்தின் முன்னுரிமை

**V முத்துகுமரன்**

பசுமைத் தொழில்நுட்பத்தில் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கும் ஒரு புதிய முயற்சியில் மும்பை குயீன் சிட்டி ரோட்டரி சங்கம், RID 3141 இதர 8 சங்கங்களுடன் இணைந்து விவசாயிகளுக்கான இரண்டு நாள் கிரீன் கோல்டு பயிற்சித் திட்டத்தை செயல்படுத்தியது. இதில் மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த 100 விவசாயிகள் கலந்து கொண்டனர். அவர்களுக்கு இயற்கை விவசாயம், இயற்கை பாதுகாப்பு, கோழி, ஆடு வளர்ப்பு மற்றும் வேளாண் தொழிலில் தற்போதுள்ள நிலை குறித்த விழிப்புணர்வு ஆகியவை குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. இறுதி நாளன்று, விவசாயிகள் முன்னேற்றத்திற்கான அறிவுமையமான, பாராமதியில் உள்ள கிருஷி விக்யான் கேந்திரத்துக்கு அவர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். விவசாயம் செய்வதில் உள்ள நவீன தொழில்நுட்பம் குறித்து அவர்கள் கேட்டறிந்தனர்.


RID 3142, 3131, 3030, 3060, 3170 மற்றும் 3132-க்கு உட்பட்ட ரோட்டரி சங்கங்கள் விவசாயிகளின் திறன் மேம்பாட்டிற்கான ஆதாரங்களுடன் களம் இறங்கின. திட்டத்தின் கூட்டாளியான ஜைடெக் அக்ரோ நிறுவனம் பயிற்சி அமர்வுகளை நடத்தியது. சங்கத்தின்



*DG சேத்தன் தேசாய் (இடமிருந்து 3வது) மற்றும் அவரது இடதுபுறம் பாம்பே குயின் சிட்டி தலைவர் அஜய் அகர்வால் மும்பை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் பயணிகளுக்கு துணிப்பைகளை வழங்குகின்றனர்.*

உறுப்பினர்கள் சந்தீப் பஜோரியா, ரவீந்திர பாடோடியா மற்றும் தினேஷ் சர்மா விவசாயிகளின் பயிலரங்கிற்கு முக்கிய ஆதரவாளர்களாக இருந்தனர். மேலும் சங்கத்தின் சர்வதேச சேவை இயக்குநர் ரால்ஃபி ஜிராட் இந்த சந்திப்புக்கான தளவாடங்களுக்கு ஏற்பாடு செய்திருந்தார்.

மற்றொரு நிகழ்வில், பால்கரில், விரார் கிழக்கில் உள்ள கணேஷ்புரியில் உள்ள பிரபலமான நோயறிதல் மற்றும் மருத்துவ சுகாதார மையமான பிரசாத் சிகிட்சாவில் உலகளாவிய மானியத்தின் உதவியுடன் நிறுவப் பட்ட HPV-DNA பரிசோதனை கருவியை (ரூ.30 லட்சம்) ரோட்டரி இன்டர்நேஷனல் இயக்குநர் ராஜு சுப்பிரமணியன் தொடங்கிவைத்தார். ரோட்டரியின் கூட்டாளர்களான



*RI இயக்குநர் ராஜு சுப்பிரமணியன் பால்கரில் உள்ள மையத்தில் சோதனை உபகரணங்களைப் பார்க்கிறார்.*



அமெரிக்காவின் ஓக்லாண்ட் ரோட்டரி சங்கத்தின் உறுப்பினர்களும் இதில் கலந்துகொண்டனர். இதேபோன்ற திட்டத்தில் மற்றொரு சர்வதேச மானிய உதவி மூலம் சங்கம், இதே சர்வதேச கூட்டாளர்கள் மூலம் நவி மும்பையில் உள்ள ஸ்ரீ சத்ய சாய் சஞ்சீவனி மருத்துவமனைக்கு அல்ட்ராசோனோகிராபி கருவியை (ரூ.34 லட்சம்) நன்கொடையாக வழங்கியிருந்தது. ஏழை நோயாளிகளைச் சென்றடையும் வகையில் மருத்துவத் திட்டத்தை செயல்படுத்தி வரும் சங்கத்தின் தலைவர் அஜய் அகர்வால் மற்றும் அவரது குழுவினருக்கு DG சேதன் தேசாய் பாராட்டு தெரிவித்தார்.

மும்பை குயீன் சிட்டி ரோட்டரி சங்கம் தலைமையிலான RID 3141-க்கு உட்பட்ட சங்கங்கள் தூய்மை இந்தியா திட்டத்தின் (ஸ்வாச் அப்யான்) ஒரு பகுதியாக மும்பை சென்ட்ரல் ரயில்நிலையத் தில் ரயில் பயணிகளுக்கு எச்சில் துப்பும் பைகளும், துணிப்பைகளும் விநியோகிக்கப்பட்டன. காந்தி ஜெயந்தி (அக்டோர் 2) நடைபெற்ற நிகழ்ச்சிகளில் சர்வதேச பெல்லோஷிப் ரோட்டேரியன் இசைக் கலைஞர்களின் சேர்ந்திசை பாட்டும், RAC KC கல்லூரி மாணவர்களின் குறும்பட நிகழ்ச்சியும் இடம்பெற்றது. DG தேசாய் தூய்மை மற்றும் ஆரோக்கியத்தின் முக்கியத்துவத்தை விளக்கிப் பேசினார். PDG ராஜேந்திர அகர்வால் மற்றும் முன்னாள் தலைவர் கிரிஷ் அகர்வால் இருவரும் ஆரோக்கியமான வாழ்க்கை மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பை உறுதிசெய்ய சுற்றுப்புறங்களை தூய்மையாக வைத்திருக்க வேண்டியதன் அவசியத்தை பொது மக்களிடம் வலியுறுத்தினர்.

பத்து மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வு மற்றும் பி.ஏ., பிகாம் தேர்வுகளில் சிறப்பிடம் பெற்ற பார்வையற்ற 125 மாணவர்களை சங்கம் கௌரவித்துள்ளது. பார்வையற்றோர் நலச் சங்கத்துடன் இணைந்து தெற்கு மும்பையில் மரைன் லைன்சில் நடைபெற்ற வண்ணமிகு நிகழ்வில் அஜய் அகர்வால் மற்றும் DG தேசாய், பார்வையற்றோருக்கு வெள்ளிநிற கைத்தடிகள், பிரெய்ல் முறையிலான புத்தகம், பென் டிரைவ் மற்றும் ரொக்கப்பரிசுகள் அனைத்தும் ரூ.2 லட்சம் மதிப்புக்கு வழங்கினர். இந்த நிகழ்வு அகில பாரதீய அகர்வால் சம்மேளனம் ஆதரவில் நடைபெற்றது.

மும்பை பையர் ரோட்டரி சங்கத்துடன் இணைந்த திட்டத்தின்




*விவசாய கருத்தரங்கில் பால்கரைச் சேர்ந்த விவசாயிகள் குழுவுடன் ரோட்டேரியன்கள்.*

கீழ் வோர்லியில் உள்ள நேரு அறிவியல் மையத்தில் வருடாந்திர அறிவியல் வினாடி-வினா போட்டி நடைபெற்றது. இதில் 190 பள்ளிகளைச் சேர்ந்த 750 மாணவர்கள் பங்கேற்றனர். இந்த போட்டி தொடர்ந்து மூன்று மாதங்களுக்கு நடத்தப்பட்டு இறுதிப்போட்டி 2025 ஜனவரியில் நடைபெற உள்ளது. கடந்த 20 ஆண்டுகளாக பள்ளிகளுக்கு இடையேயான வினாடி-வினா போட்டிகள் நடந்து வருகிறது. மேலும் மும்பை பள்ளிகளில் படிக்கும் மாணவர்களின் அறிவியல் திறனை வளர்க்கும் நோக்கில் இந்த போட்டிகள் ஒரு தனி அடையாளத்தைப் பெற்றுள்ளது.

ரோட்டேரியன் வினோத் பீம்ராஜ்கா மற்றும் அவரது குடும்பத்தினர் ஆதரவுடன் 350 ஏழை குடும்பத்தினருக்கு மளிகை சாமான்கள் அடங்கிய பை விநியோகிக்கப்பட்டது. கஃபே பரேடில் அன்னபூர்னா திட்டத்தின் கீழ் மாற்றுத்திறனாளிகள் 150 பேருக்கு காலை உணவு வழங்கப்பட்டது. இத்திட்டத்துக்கு ரூ.1.5 லட்சம் செலவானது. இதேபோன்ற முயற்சியில், சங்க உறுப்பினர்களான அனில் சொக்கானி, அம்லா ரூயா மற்றும் அனுப்குப்தா ஆகியோர் நகரின் பல்வேறு மருத்துவமனைகளில் உள்ள புற்றுநோயாளிகள் மற்றும் அவர்களின் உறவினர்களுக்கு மதிய உணவு வழங்கினர்.

மும்பை தாதரில் நடைபெற்ற இரத்த தான முகாமில் 60 பேர் இரத்த தானம் அளித்தனர். ரயில் நிலையத்தில் ரோட்டேரியன்கள் ரயில் பயணிகளுக்கு இரத்தசோகை மற்றும் தலசீமியா நோய்த் தடுப்பு வழிமுறைகளையும், வாழ்க்கை மாற்றங்கள் பற்றியும் எடுத்துரைத்து அவர்களின் பாராட்டை பெற்றனர். மேலும் இரத்த தானம் செய்யவும் முன்வந்தனர். இதர ரோட்டரி சங்கங்கள், ரோட்ராக்டர்கள் மற்றும் இன்னர்வீல் சங்கத்தினரும் இணைந்து இரத்ததான முகாமுக்கு ஏற்பாடு செய்திருந்தனர். ■



*நவி மும்பை ஸ்ரீ சத்ய சாயி சஞ்சீவனி மருத்துவமனையில் DG தேசாய் (இடமிருந்து 2வது) உடன் ரோட்டரியன்கள்.*


"Must see these shows once in a life time"
GUINNESS WORLD RECORDS
LIMCA BOOK of RECORDS
"Our shows are the perfect fit for all your events Entertaining, Motivating, and Empowering, leaving a lasting impact on every audience."
"Miracle on Wheels is the first and only organization in the world to feature professional performances on wheelchairs by differently-abled artists."
"Book our show today : 9811340308, 9597167987
Watch our Videos on YouTube 'Miracle On Wheels'

ADVT.

# ரோட்டரி ஆளுநர்



**பிரசாந்த் ராஜ் சர்மா**
வழக்கறிஞர்
RC காசியாபாத் கிரேட்டர், RID 3012

## உறுப்பினர் முக்கியத்துவம்

உறுப்பினர்த்துவ சவால்களை பகுப்பாய்வு செய்யும் போது, புதிய உறுப்பினர்கள் இணக்கமாக உணரவும், சங்கத்தில் ஒருங்கிணையவும் முதல் இரண்டு ஆண்டுகள் முக்கியமானவை என்று பிரசாந்த் ராஜ் சர்மா அடையாளம் கண்டுள்ளார். “சங்கங்கள் ஆரோக்கியமான, வரவேற்கும் சூழலை வளர்க்கும் போது, உறுப்பினர்கள் வசதியாகவும் ஆதரவாகவும் உணர்கிறார்கள், இது மற்றவர்களை சேர அழைக்க அவர்களை ஊக்குவிக்கிறது’’ என்று அவர் கூறுகிறார்.

அவரது மாவட்டம், சமீபத்தில் ஒரு பிரம்மாண்டமான தீபாவளி கொண்டாட்டத்தை நடத்தியது, இதில் 3,000 பேர் கலந்து கொண்டனர், இதில் 150–200 சாத்தியமான ரோட்டேரியர்களும் அடங்குவர். அவர்கள் ரோட்டரியில் சேர அணுகப்படுவார்கள். பல்வேறு தொழில்முறை பின்னணியை சேர்ந்த பெண்கள் மாவட்டத்தின் உறுப்பினர்களில் 30 சதவீதமாக உள்ளனர். $600,000 என்ற TRF இலக்கு அவரது பதவிக்காலத்தின் ஐந்து மாதங்களுக்குள் எட்டப்பட்டது, மேலும் $700,000 கேத் லேப் CSR திட்டம் நடந்து வருகிறது.

இந்த ஆண்டு, மாவட்டத்தில் எட்டு CSR திட்டங்கள் மற்றும் இரண்டு உலகளாவிய மானியங்கள் செயல்படுத்தப்படுகிறது, இதில் ரோட்டரி விராஜ் அங்கன்வாடி, AI-ஒருங்கிணைந்த அங்கன்வாடி மற்றும் தேவைப்படுபவர்களுக்கு செயற்கை கால்கள் வழங்கும் ரோட்டரி ஆத்மா நிர்பார் திட்டம் ஆகியவை அடங்கும்.

சர்மா 2011-ல் ரோட்டரியில் சேர்ந்தார்.



**சாது கோபாலகிருஷ்ணன்**
சார்டர்டு அக்கவுண்டன்ட்
RC புரோட்டூர், RID 3160

## வளர்ச்சியை நோக்கி

மானியத்துடனான உறுப்பினர் சந்தாகள், பிரத்தியேக மகளிர் சங்கங்கள் மற்றும் கிராமப்புறங்களில் உறுப்பினர்களைத் தக்கவைத்துக்கொள்ளவும் வளர்ச்சியடையவும் உதவும் என்று சாது கோபால கிருஷ்ணன் நம்புகிறார். 2023–24ல் 700 உறுப்பினர்களின் எதிர்மறை வளர்ச்சியை மீட்டெடுக்கவும், மொத்த உறுப்பினர் எண்ணிக்கையை தன் மாவட்ட எண்ணான 3,160 ஆக உயர்த்தவும் அவர் இலக்கு வைத்துள்ளார்.

உறுப்பினர் வளர்ச்சியை நிவர்த்தி செய்ய RIDE-கள் M முருகானந்தம் மற்றும் K P நாகேஷ் பரிந்துரைத்த 1:2:3 கோட்பாட்டுடன் (“ஒவ்வொரு ரோட்டேரியன் சேர்க்கப்பட்டதற்கு இணையாக 2 ரோட்டராக்டர்கள் மற்றும் 3 இன்டராக்டர்களை கொண்டு வருவதை உறுதி செய்ய வேண்டும்.”) அவர் உடன்படுகிறார். ‘’இது செய்யக்கூடியது மற்றும் இளைஞர்களின் ஈடுபாட்டை அதிகரிக்கும்’’ என்று DG கூறுகிறார்.

மாவட்டத்தின் இலக்கான $275,000 க்கு எதிராக கோபாலகிருஷ்ணன் TRF-க்கு $316,000 திரட்ட இலக்கு வைத்துள்ளார். ஒரு சங்கம் ஒரு நிரந்தரத் திட்டத்தைத் தொடங்குவதற்கும், கார்ப்பரேட் நிறுவனங்களிடமிருந்து CSR நிதியைப் பெறுவதற்கும் அவரது மாவட்டம் செயல்பட்டு வருகிறது.

1995-ல் ரோட்டரியில் சேர்ந்த கோபாலகிருஷ்ணன், 2012–13-ல் ஓஹாயோவிற்கு ஒரு GSE குழுவை வழிநடத்தினார்.

# களுடன் சந்திப்பு

கிரண் ஜெஹரா



**N சுந்தரவடிவேலு**
வழக்கறிஞர்
RC கோயம்புத்தூர், RID 3201

## உறுப்பினத்துவ சமநிலை

பன்முகத்தன்மை, சமத்துவம் மற்றும் உள்ளடக்கத்தை (DEI) பொறுத்தவரை N சுந்தரவடிவேலு தனது மாவட்டத்தின் பெண் உறுப்பினர்த்துவத்தை பெருமையாகக் கருதுகிறார். “சங்கங்கள் பாலின சமநிலையை பராமரிக்க முயற்சிகளை மேற்கொள்கின்றன, மேலும் எங்கள் ரோட்டேரியர்களில் மூன்றில் ஒரு பங்கு பெண்களாக இருக்க வேண்டும் என்று நான் பரிந்துரைத்துள்ளேன்,’’ என்று அவர் கூறுகிறார். RC கோவை அக்ருதியில் இரண்டு திருநங்கைகள் சேர்க்கப் பட்டுள்ளனர். “இந்த உள்ளடக்கம் ஒரு படிப்படியான செயல்முறையாகும், ஏனெனில் திருநங்கைகள் ரோட்டரி மற்றும் அதன் வாய்ப்புகளைப் பற்றி நன்கு தெரிந்து கொள்ள நேரம் தேவைப்படுகிறது, அதே நேரத்தில் சங்கங்கள் வரவேற்கத்தக்க சூழலை உருவாக்க வேண்டும்.’’

புதிய உறுப்பினர்களுக்கான விரிவான நோக்குநிலை பாடங்கள் மற்றும் வழிகாட்டுதலின் மூலம் ஆதரவான சூழல் ஆகியவை “அனைத்து உறுப்பினர்களிடையேயும் ஒற்றுமை உணர்வைத் தூண்டும் மற்றும் தீவிரமாக பங்களிக்க ஊக்குவிக்கும்’’ என்று அவர் கூறுகிறார்.

நீலகிரியில் உள்ள 100 தோடா பழங்குடியின குடும்பங்களுக்கு வீடுகள் வழங்குதல், கோவை குர்தி மலையிலிருந்து 50 கிமீ தொலைவில் பாயும் கௌசிக் நதிக்கு புத்துயிர் அளிப்பது, மாணவர்களிடையே சைபர் தாக்குதல்கள் மற்றும் சைபர் கிரைம்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல் ஆகியவை மாவட்டத்தின் முக்கிய திட்டங்களாகும். அவர் 1995ல் ரோட்டரியில் சேர்ந்தார்.



**ராக்கி குப்தா**
கல்வியாளர்
RC ஜெய்ப்பூர் மருகந்தா, RID 3056

## AMAR உத்தி

RID 3056-ன் முதல் பெண் மாவட்ட ஆளுநரான ராக்கி குப்தா, “AMAR’’ உத்தி (சேர்த்தல், பெருக்கல், தகுந்துகொள்ளுதல் மற்றும் தக்கவைத்தல்) மூலம் உறுப்பினர்களின் வளர்ச்சியில் முன்னணியில் உள்ளார். பன்முகத்தன்மை மற்றும் தக்கவைப்பு ஆகியவற்றில் கவனம் செலுத்தும் அவர், “புதிய பார்வைக் கோணங்கள் கொண்ட உறுப்பினர்களை ரோட்டரியில் ஈர்க்கக்கூடிய ஒருங்கிணைந்த சூழலை உருவாக்குவதை’’ நோக்கமாகக் கொண்டுள்ளார்.

மாவட்டத்தின் உறுப்பினர்களில் 25 சதவீதம் பெண்கள் உள்ள நிலையில், ராக்கி தொழில் வல்லுநர்கள் மற்றும் இளம் மாற்றுத்திறனாளிகளை ஈடுபடுத்த ஒரு ரோட்டரி பாஸ்போர்ட் சங்கத்தைத் தொடங்குகிறார். “இந்த நெகிழ்வான மாதிரியானது மெய்நிகர் ஈடுபாடு, மாறுபட்ட உறுப்பினர் மற்றும் சேவை சார்ந்த திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கிறது, ரோட்டரியை மேலும் அணுகக்கூடியதாக ஆக்குகிறது,’’ என்று அவர் விளக்குகிறார்.

இந்த ஆண்டு, அவரது முக்கிய முயற்சிகளில் பின்தங்கிய சமூகங்களில் புற்றுநோய் பரிசோதனைகள், 5,000 உறுதிமொழிகளை இலக்காகக் கொண்ட உறுப்பு தானம் உறுதிமொழி இயக்கம் மற்றும் பள்ளி மாணவர்களுக்கான கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் விழிப்புணர்வு அமர்வுகள் ஆகியவை அடங்கும்.

அவரது ரோட்டரி பயணம் 1997-ல் அமெரிக்காவின் ஃப்ளோரிடாவிற்கு GSE விஜயத்தில் பங்கேற்ற பிறகு தொடங்கியது.

# ரோட்டரியின் பல்வேறு திட்டங்கள்

## DEI சாம்பியன்

PRIP K R ரவீந்திரன், இலங்கையின் முன்னணி தொழிலதிபரும், ஸ்ரீலங்கா, இந்தியா மற்றும் ஆப்பிரிக்காவில் தொழிற்சாலைகள் கொண்ட பிரிண்டிங் மற்றும் பேக்கேஜிங் நிறுவனமான ப்ரிண்ட் கேர் நிறுவனத்தின் இணை நிறுவபவருமான இவர், DEI முன்னேற்றத்தில் ரோட்டரி மற்றும் தனது தனிநிறுவனத்தில் ஆற்றிய பங்களிப்புக்காக WIM (மேலாண்மையில் இருக்கும் பெண்கள்) மற்றும் உலக வங்கியின் துணை நிறுவனமான IFC ஆகியவற்றால் பன்முகத் தன்மையின் சிறந்த 10 சாம்பியன்களில் ஒருவராக அங்கீகரிக்கப்பட்டார்.

ரவீந்திரனின் அங்கீகாரம் அவரது நிறுவனத்தின் DEI முன்னிலை நிலைப் பாட்டுக்காக வழங்கப்பட்டது. அவர் தொழிலாளர்களுக்கு ஏற்ற பல திட்டங்களை வழங்குவதோடு, உடல்நல மற்றும் மனநல சவால்களை எதிர்கொள்ளுபவர்கள் மற்றும் போதைப் பொருள் பழக்கத்திலிருந்து மறுவாழ்வு பெற்றவர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்கியுள்ளார், தனது தொழிற்சாலைகளுக்கு சுற்றியுள்ள பள்ளிகள், கோவில்கள் மற்றும் சமூகங்களை ஆதரித்தும் உள்ளார்.



*விருதுடன் PRIP K R ரவீந்திரன்.*

## ஒரு சிறந்த பரோபகாரர்

RID 3192 DGN ரவிசங்கர் டகோஜு, TRF-க்கு நன்கொடை அளித்தவர், புகழ்பெற்ற கன்னட நாளிதழான பரிவர்தன் பிரபாவால் 2024 ஆம் ஆண்டுக்கான கர்நாடக ரத்னா விருது பெற்றுள்ளார்.

சமூகத்தில் அர்த்தமுள்ள மற்றும் நிலையான மாற்றத்தை உருவாக்குவதற்கான விருப்பத்தால் உந்தப்பட்ட அவரது “அயராத அர்ப்பணிப்பு மற்றும் நோக்கத்திற்காக அவருக்கு விருது வழங்கப்பட்டது. அவரது அற்புதமான முயற்சிகள் கல்வி, சமூக மேம்பாடு, மூத்த குடிமக்கள் பராமரிப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு போன்ற முக்கிய துறைகளில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன” என்று மேற்கோள் கூறுகிறது.



*கர்நாடக ரத்னா விருதுடன் DGN ரவிசங்கர் டகோஜு.*

### கிராமப் பெண்களுக்கு நீர்ச் சக்கரம்

ஆந்திரப் பிரதேசத்தின் அனகபல்லெ, அல்லூரி சீதாராமராஜூ மாவட்டங்களைச் சேர்ந்த அலமியாபாலெம், கொண்டசந்தா, டவுனுரு கிராமங்கள், பழங்குடியினப் பகுதிகளைச் சேர்ந்த கிராமப் பெண்களுக்கு 200 நீர்ச் சக்கரங்களை (உருளும் உருளைகள்) வழங்கி உதவியது RC விசாகப்பட்டினம், RID 3020.

இதுவரை இந்தப் பெண்கள் நாள் தோறும் 2 முதல் 3 கிலோமீட்டர் தொலைவுக்கு நடந்து சென்று, தலையில் நீரைச் சுமந்துவந்தார்கள். சென்ற ஆண்டு இவர்களுக்கு 100 நீர்ச் சக்கரங்கள் வழங்கப்பட்டன. இந்த ஆண்டு இந்தச் சங்கம் இந்த எண்ணிக்கையை இருமடங்காக்கியுள்ளது. இந்தத் திட்டத்தை SNF இந்தியா ஆதரித்துள்ளது. முன்னாள் தலைவர் மது புர்ரா இந்தத் திட்டத்தை ஒருங்கிணைத்தார்.



*ரோட்டேரியன்கள் நீர்ச்சக்கரங்களை பழங்குடியின பெண்களுக்கு விநியோகிக்கிறார்கள்.*

### புணே பள்ளிகளில் மட்கச்செய்யும் குழிகள்

கார்பன் அடித்தடத்தைக் குறைக்கும் இலக்குடன், புணே-விலுள்ள பள்ளிகள், அமைப்புகளில் எதுவும் வீணாகாத மாதிரிகளுக்கான மட்கச்செய்யும் குழிகளை அமைத்துவருகிறது RC பூனா நார்த், RID 3131. இதுவரை 10,000 மாணவர்கள் இந்தத் திட்டத்தால் பலன் பெற்றுள்ளார்கள். வளங்குன்றா நிலை, நலம் மற்றும் சமூகப் பொறுப்பு ஆகிய மதிப்பீடுகளை வலியுறுத்திக் குறைந்தது 25,000 பேருக்குப் பலன் பெற்றுத்தரத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தைப்பற்றி விளக்கிய சங்க உறுப்பினர் மோகன் பூஜாரி “இந்த முன்னெடுப்பில் மூன்றாண்டுப் பராமரிப்புத் திட்டமும் சேர்க்கப்பட்டுள்ளது. இதனால், மட்கச்செய்யும் குழிகள் எப்போதும் இயங்கும், நீடித்திருக்கும்” என்றார்.

மாணவர்களுக்குப் குப்பைகளை வகை பிரித்தல், மட்கச்செய்தல், வளங்குன்றா நிலையைப்பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன, அதன்மூலம் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் பண்பாடு வளர்க்கப்படுகிறது.



*RC பூனா நார்த் உறுப்பினர்கள் மாணவர்களுடன் ஒரு உரம் தயாரிக்கும் குழிக்கு அருகில்.*

# RI-யின் ஐந்தாண்டு நிதி கணிப்பு

V முத்துகுமரன்

கொச்சி இன்ஸ்டிடியூட்டில் ரோட்டரியின் ஐந்தாண்டு நிதி முன்னோட்டத்தை வழங்குகையில், RI பொருளாளரும் இயக்குநருமான ரோண்டா பெத் ஸ்டப்ஸ், 2026 (2025–26) நிதியாண்டு வரையிலான செலவுகளை விட வருவாய் அதிகம் என்றும், 2027 நிதியாண்டில் இருந்து "நம் செலவுகள் நம் வருவாயை விட அதிகமாகும்" என்றும் தெரிவித்தார். அது 4 மில்லியன் பற்றாக்குறை பட்ஜெட்டில் தொடங்கும். "நாங்கள் 2025, 2026 நிதியாண்டுகளில் சமநிலையான பட்ஜெட்டையும், 2027 நிதியாண்டு முதல் 2029 நிதியாண்டு வரையிலான பற்றாக்குறையையும் எதிர்நோக்குகிறோம்."

தற்போது ஒரு ரோட்டேரியருக்கு $78.5-ஆக இருக்கும் உறுப்பினர் நிலுவைத் தொகையை நிதியாண்டு 27-ல் இருந்து அதிகரிப்பதற்கான முடிவு CoLல் 2025-ல் தீர்மானிக்கப் படும் என்று ரோண்டா கூறுகிறார்.

FY 25-ல் திட்டமிடப்பட்ட $135 மில்லியன் வருவாயில், உறுப்பினர் நிலுவைத் தொகை $92 மில்லியன் (68 சதவீதம்), சேவைகள் மற்றும் பிற, RI மாநாட்டை நடத்துவதற்கான தொடர்புடைய செலவுகள் மற்றும் COL போன்றவை $39 மில்லியன் (29 சதவீதம்), மற்றும் முதலீட்டு வருமானம் $4 மில்லியன் (3 சதவீதம்) ஈட்டியுள்ளது. கிட்டத் தட்ட 60 சதவீத RI நிலுவைத் தொகைகள் உறுப்பினர் ஆதரவு முயற்சிகள் மற்றும் திட்டங்களில் (59 சதவீதம்) முதலீடு செய்யப் படுகின்றன. அதைத் தொடர்ந்து நிர்வாகச் செலவு மற்றும் இணக்கக் கடமைகள் (22 சதவீதம்) அதாவது தொழில்நுட்ப தளங்களுக்கான செலவுகள், கணக்கியல் மற்றும் சட்ட ஆதரவுக்காக செலவிடப்படுகிறது. இறுதியாக, ரோட்டரி சங்கங்கள் தங்கள் சமூகங்களில் ரோட்டரி பற்றிய விழிப்புணர்வை அதிகரிக்க வளங்களை வழங்கும் பிராண்ட் சென்டரை மறுசீரமைப்பது போன்ற பொது உருவ மேம்பாட்டிற்கு 19 சதவீத நிலுவைத் தொகை செலவிடப்படுகிறது.

அடுத்த ஐந்தாண்டு காலத்தில் ரோட்டரியில் குறைவான உறுப் பினர்களே சேருவார்கள் என்று இந்த போக்கு சுட்டிக்காட்டினாலும், "புதிய உறுப்பினர்களை வரவேற்பது மற்றும் ஏற்கனவே உள்ள உறுப்பினர்களைத் தக்கவைத்துக் கொள்வது ஆகிய இரண்டிலும் உறுப்பினர்த்துவத்தை அதிகரிப்பதில் நாங்கள் கவனம் செலுத்துகிறோம்" என்கிறார் ரோண்டா. "ஒரு பொதுவான ஆண்டில், நம் சங்கத்தில் சுமார் 150,000 புதிய உறுப்பினர்களை வரவேற்கிறோம், அதே நேரத்தில் ஒவ்வொரு ஆண்டும் இதேபோன்ற எண்ணிக்கையை நாம் இழக்கிறோம்." அதிகமான உறுப்பினர்களுடன், RI சமூகத்தின் தேவைகளை மேலும் திறம்பட பூர்த்தி செய்யும் திறனை பெறுகிறது, அதே சமயம் நமது மதிப்புமிக்க உறுப்பினர்களின் வாழ்க் கையையும் மேலும் செழுமைப் படுத்துகிறது.

பணவீக்க விகிதங்கள் சமீப காலமாக குறைந்திருந்தாலும், கடந்த பல வருடங்களாக உயர்ந்த பணவீக்கம் செலவுகளை அதிகரிக்க வழிவகுத்துள்ளது. முன்னறிவிக்கப்பட்ட இருப்புக்கள் FY 24 முதல் FY 28 வரை RI வாரியத்தின் இலக்கை விட அதிகமாக இருக்கும், பின்னர் FY 29-ல் இருப்பு இலக்கை விடக் குறைவாக இருக்கும். நடப்பு ஆண்டில் (2024–25), இரண்டு பிராந்தியமயமாக்கல் பைலட்டுகளுக்கு நிதியளிக்கவும், போலியோ ஒழிப்பு முயற்சிகளுக்காகவும் வாரியம் இருப்புகளைப் பயன்படுத்தியது என்று RI பொருளாளர் கூறினார்.

"ரோட்டரியின் நிதி நிலை வலுவாகவும் நிலையாகவும் உள்ளது, மேலும் நிதி மேலாண்மை சிறப்பாக செய்யப்படுவதால் உங்கள் சங்கங் களுக்கும் சமூகங்களுக்கும் சேவை செய்ய தேவையான வளங்கள் மற்றும் கருவிகளை உறுப்பினர்களுக்கு வழங்க முடிகிறது" என்று ரோண்டா கூறுகிறார்.

மேலும் இன்ஸ்டிடியூட் கவரேஜ் அடுத்த இதழில்.

RID *அனிருதா ராய்சௌத்ரி மற்றும் கொச்சி மாநாட்டின் இணைத் தலைவர்* PDG *மாதவ் சந்திரன்* RI *பொருளாளர் ரோண்டா பெத் ஸ்டப்ஸை கௌரவிக்கிறார்கள்.*



V முத்துகுமரன்

# கால்கரியில் மறக்கமுடியாத மாலைகள்



உங்கள் கௌபாய்த் தொப்பியை எடுத்துக்கொள்ளுங்கள். கனடாவில் உள்ள உங்கள் ரோட்டரி நண்பர்கள் தனித்துவமான மாநாட்டு நிகழ்வுகளுக்கு உங்களை வரவேற்கிறார்கள்: அவர்கள் வீடுகளில் இரவு உணவு, கன்ட்ரி இசை ஜாம்பொரீ, இன்னும் பல சுவையான மேற்கத்தியப் பண்பாட்டுக் கொண்டாட்டங்கள்.

“நாங்கள் ஒரு பெரிய சிறு-நகரம். அதனால், எங்கள் விருந்தோம்பல், நுழைவுச் சீட்டு நிகழ்வுகள், அனுபவங்கள் அனைத்தும் சிறப்பாக இருக்கும்” என்கிறார் ஜூன் 21 முதல் 25 வரை நடைபெறும் ரோட்டரி இன்டர்நேஷனல் மாநாட்டின் உள்ளூர் ஏற்பாட்டுக் குழுவின் இணைத் தலைவர் மார்க் ஸ்டார்ரட். நுழைவுச் சீட்டுகளை வாங்க: *rotarycalgary2025.org*

கிராண்ட்ஸ்டாண்ட் ஸ்பெக்டாகுலர், 21 ஜூன்: உள்ளூர் வளைய நடனம், ஆடவைக்கும் இசை, குதிரைமீது தொடர் பந்தயங்கள் போன்றவை இடம்பெறும்.

ராக்கிங் தி பிக் டென்ட், 22 ஜூன்: கன்ட்ரி இசை ரசிகர்கள், கால்கரியின் மேற்கத்திய அழகைப் பார்க்க விரும்புவோருக்கும் பிடித்த, தாளமும் கிடார்களும் அசத்துகின்ற சிறந்த இசை நிகழ்ச்சி.

நியூ பிளட் கால்கரி சிவிக் சிம்ஃபனியுடன், 22 ஜூன்: இந்த நடன நிகழ்ச்சி பீட்டர் காப்ரியேலின் இசையைக் கொண்டுள்ளது, உள்ளூர்க் குழந்தைகளுக்கான அரசு உண்டுறை பள்ளியில் சிரமப்பட்டு வளர்ந்த ஒருவருடைய கதையின் வழியாக, பிளாக்ஃபுட் பண்பாடுகளை ஆராய்கிறது.

ஹோஸ்ட் ஹாஸ்பிடாலிட்டி ஈவினிங், 23 ஜூன்: மாநாட்டில் எல்லாருக்கும் பிடித்த இந்த நிகழ்ச்சியில், உறுப்பினர்கள் ரோட்டரி வருகையாளர்களைத் தங்கள் இரவு உணவு மேசைகளுக்கு, உணவகங்களுக்கு அல்லது பிற இடங்களுக்கு அழைத்து, “உணவின் வழியாகத் தோழமையைப் பகிர்ந்துகொள்வார்கள்” என்கிறார் ஸ்டார்ரட்.

வெஸ்டர்ன் ராஞ்ச் ஷோகேஸ், 24 ஜூன்: “கட்டுகளற்ற, தீவிரமான, மாறுபட்ட” குதிரையேற்றங்களைப் பார்த்து நீங்கள் பரவசத்துடன் திகைக்கப்போகும் நிகழ்ச்சி இது.

மேலும் தெரிந்துகொள்ளவும் பதிவு செய்யவும்: convention.rotary.org.

---

Rotary Institute KOCHI 2024

## அடுத்த ஜோன் மாநாடு... தில்லியில்




ரஷீதா பகத்

டெல்லி இன்ஸ்டிடியூட் கன்வீனர் RIDE K P நாகேஷ் மற்றும் அதன் செயலாளர் PDG மஞ்சு ஃபட்கே கொச்சி இன்ஸ்டிடியூட்டில் நிகழ்ச்சியை விளம்பரப்படுத்தினர்.

கொச்சி ரோட்டரி மாநாட்டில், அடுத்த சந்திப்பின் ஒருங்கிணைப்பாளரான RIDE K P நாகேஷ் பங்கேற்பாளர்களைத் தில்லிக்கு அழைத்தார். 2025 நவம்பர் 14 முதல் 16 வரை, தில்லி விமான நிலையத்திலிருந்து 10 கிலோமீட்டரில் தில்லி-குர்காவ்ன் எல்லையிலுள்ள துவாரகா-வில் இருக்கும் யஷோபூமி இந்தியா பன்னாட்டு மாநாட்டு மையத்தில் நடைபெறும் இந்தச் சந்திப்பின் தலைவர் RID 3012 PDG சரத் ஜெயின், செயலாளர் PDG மன்ஜூ ஃபாட்கே (RID 3131).

உள்வரும் மாவட்டத் தலைவர்களுக்கான துணைக் கருத்தரங்குகள் 2025 நவம்பர் 11 முதல் 13 வரை தில்லி கன்டோன்மென்ட்டில் மானெக்ஷா மையத்தில் நடைபெறும். இதற்கான அலுவல் விடுதிகள், தாஜ் பேலஸ் (சாணக்யபுரி), நோவோடெல், ஹாலிடே இன்ன் (ஏரோசிட்டி).

மேலும் தகவல்களுக்கு: *www.rotaryinstitute2025.com*

# மருத்துவப் பராமரிப்பு, எழுத்தறிவில் கவனம் செலுத்தும் RID 3261

மத்தியப் பிரதேசத்தின் ஜபல்பூரில் RID 3261 DG அகில் மிஷ்ரா பதவியேற்றபோது, மருத்துவப் பராமரிப்புத் திட்டங்களும் வயது வந்தோர் எழுத்தறிவு முன்னெடுப்பும் முதன்மையாகத் திகழ்ந்தன. இந்த நிகழ்ச்சியின்போது, மாநிலங்களவை MPயும் முன்னாள் DGயும் விவேக் தன்கா, சிறப்புக் குழந்தைகளுக்கான நீதியரசர் தன்கா நினைவு ரோட்டரி அமைப்பில் உள்ள மாற்றுத் திறனாளிக் குழந்தைகளுக் கென ஒரு நவீனப் பேருந்தையும், ஜபல்பூர், நைன்பூர், கதர்வாரா அரசு மருத்துவமனைகளுக்கு 4 டயாலிசிஸ் இயந்திரங்கள், 1 சோனோ கிராஃபிக் கருவி, இரத்த வங்கி உறைவிப்பானையும் வழங்கினார். இவற்றின் மொத்த மதிப்பு ரூ.75 முதல் 80 லட்சம்.

இந்த நிறுவல் நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினரான PRIP சேகர் மேத்தா கொட்வாலி அரசுப் பன்மருத்துவமனைக்கு 2 டயாலிசிஸ் இயந்திரங்களைக் கொடையளித்தார். ‘‘மருத்துவமனைகளில் முன் வைக்கப்பட்ட டயாலிசிஸ் பிரிவுகளுக்குத் தேவையான வசதிகளை அமைப்பதற்கென மாவட்ட ரோட்டரியன்கள் சுமார் ரூ.45 லட்சத்திலிருந்து 50 லட்சம் திரட்டினார்கள்’’ என்கிறார் DG மிஷ்ரா. இந்த மாவட்டம் குழந்தைகளுக்கு இலவச இதய அறுவைச் சிகிச்சைகளைச் செய்வதற்கென, மூத்த ரோட்டரியன் Dr ராஜேஷ் திரவானி நடத்தும் ஜபல்பூர் மருத்துவ மனையில் வசதியான மாடி ஒன்று ஒதுக்கப்பட்டது. திரவானி இங்குள்ள வசதிகளை நிறுவுவார். குழந்தைகள் மருத்துவ மையத்தின் தொடர் செலவுகளை ரோட்டரி சங்கங்கள் கவனித்துக் கொள்ளும்.

ஜபல்பூரிலிருந்து 34 கிலோமீட்டர் தொலைவிலுள்ள குன்டம் என்ற கிராமத்தில், ரோட்டரியன் அல்லாத சீமா சிங் என்பவருடன் இணைந்து ரோட்டரி ஆட்டிசம் மறுவாழ்வு மையம் ஒன்று அமைக்கப்படும். 6 முதல் 7 ஆண்டுகளில் செயல்படத் தொடங்கும் இந்த மையம் 16 ஏக்கர்களுக்குப் பரந்து விரிந்திருக்கும், நோயாளிகள், அவர்களைக் கவனித்துக் கொள்வோர் தங்குவதற் கெனச் சுமார் 200 வில்லாக்கள் இங்கு இருக்கும் என்று விளக்குகிறார் மிஷ்ரா.

நகராட்சிக் கழகத்துடன் இணைந்து நடத்தப்படும் வயது வந்தோர் எழுத்தறிவுத் திட்டத்தை PRIP மேத்தா, ஜபல்பூர் நகரத் தலைவர் ஜகத் பகதூர் அன்னு தொடங்கிவைத்தார்கள். ஒவ்வொரு குழந்தையும் வயது வந்த ஒருவருக்கு எழுத்தறிவூட்டுவார். மத்தியப் பிரதேச அரசின் உதவியுடன், 500க்கும் மேற்பட்ட பள்ளிகளுக்கான ஒரு புதிய வயது வந்தோர் எழுத்தறிவுத் திட்டம் தொடங்கப்பட்டது.

டிசம்பரில் ஜபல்பூரில் ரோட்டரி திறன் வளர்ச்சி மையம் ஒன்றை (GG: 125,000) DG மிஷ்ரா தொடங்கிவைத்தார்.■




*PDG விவேக் தன்கா, PRIP சேகர் மேத்தா, DG அகில் மிஸ்ரா, PDG மஞ்சித் சிங் அரோரா டயாலிசிஸ் இயந்திரங்கள் திட்டப்பணி தொடக்க விழாவில்.*

# டாமனில் ரோட்டரி தகவல் மையம்

ரோட்டரி செய்திக்குழு

RC டாமன், RID 3060-ன் முன்முயற்சியான ரோட்டரி தகவல் மையம், டாமனில் ஒரு பரபரப்பான சந்தைப் பகுதியில் அமைக்கப் பட்டுள்ளது. இலவச சட்ட ஆலோசனை, அரசு திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு கருத்தரங்குகள் மற்றும் சுகாதார முகாம்கள் போன்ற சங்கத்தின் பல்வேறு முயற்சி களுக்கான இடமாக இது செயல்படும் என்று சங்கத் தலைவர் விஸ்வஜீத் போராட்டே கூறினார். டாமன் நகராட்சி மன்றத்தின் தலைமை அதிகாரி சஜ்னம் சிங் மற்றும் அதன் தலைவர் அஸ்பி தமானியா ஆகியோர் முன்னிலையில் இந்த மையத்தை DG துஷார் ஷா திறந்து வைத்தார்.■




# பைக் டாக்ஸி பைலட்டுகளுக்கான நிறுத்துமிடங்கள்




இந்தியாவில் மோட்டார் சைக்கிள்களை போக்குவரத்து வாகனங்களாக சட்டப்பூர்வமாக்கிய முதல் மாநிலம் அநேகமாக கோவாவாகத்தான் இருக்கும்.

முன்பெல்லாம் கோவாவில் பைக் டாக்ஸி பைலட்டுகள் (ஓட்டுநர்கள்) பின்னால் அமர்ந்து செல்லும் பயணிகளுக்காக கடும் வெயிலிலோ அல்லது சில நேரங்களில் மழையில் நனைந்தபடி காத்திருப்பார்கள். ஆனால், இப்போது, ரிவேரா பனாஜி ரோட்டரி சங்கம் (RID 3170). கோவா மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள் சங்கத்தில் பதிவு செய்துள்ள பைலட்டுகளுக்காக, பனாஜியில் உள்ள KTCL வளாகத்தின் முன் மோட்டார் சைக்கிள் டாக்ஸிகளுக்காக ஒரு கூடாரத்தை (நிறுத்துமிடம்) அமைத்துக் கொடுத்துள்ளனர்.

இந்த மோட்டார் சைக்கிள் டாக்ஸி நிறுத்துமிடத்தை கடந்த ஆகஸ்ட் மாதம், மாநில போக்குவரத்து அமைச்சர் மாவின் கோடின்ஹோ, KTCL நிர்வாக இயக்குநர் டெரிக் நெட்டோ ஆகியோர் தொடங்கி வைத்தனர். DG சரத் பை மற்றும் சங்கத்தின் தலைவர் தன்வி ஆத்ரேயா சவந்த் தலைமையிலான ரோட்டேரியன்கள் உள்ளிட்டோர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.■

Rotary PEOPLE OF ACTION

# சங்கச் செய்திகள்



## RID 2982

**RC சேலம் ஃபினிக்ஸ்**
கலாசார திருவிழாவில் அரசுப் பள்ளிகளைச் சேர்ந்த சுமார் 120 மாணவர்கள் பேச்சுப்போட்டி, நடனம், பாடல் மற்றும் பிற நுண்கலைகளில் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தினர். அனைவருக்கும் நினைவுப் பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கப்பட்டது.





## RID 3011

**RC தில்லி டிவைன்**
ரோட்டேரியன்கள் மற்றும் குடியிருப்போர் நலச்சங்கத்தின் உறுப்பினர்கள், வசந்த்குஞ்ச் காலனியில் 50 மரக்கன்றுகளை நட்டனர்.

## RID 3020

**RC ராஜமகேந்திரவரம் ஜகான்ஸ்**
ஆரோக்கியமான வாழ்க்கை மற்றும் உடல் தகுதியை மேம்படுத்துவதற்காக ரோட்டரி சங்கத்தினர் ராபோ ஜிம் நிறுவனத்துடன் இணைந்து 3 கி.மீ. மராத்தான் போட்டியை நடத்தினர். இதில் 250 பேர் பங்கேற்றனர்.





RID 3080

**RC சோலன் ராயல்**

மகளிர் நலத் திட்டத்தின் கீழ் சோலனில் உள்ள பிராந்திய மருத்துவ மனையில் பிறந்த குழந்தைகளின் பராமரிப்புக்குத் தேவையான பொருள்களும், தாய்மார்களுக்கு ரூ.1,100 பணமும் வழங்கப்பட்டது.

RID 3000

**RC கறம்பகுடி சிட்டி**

நகரில் உள்ள அரசுப் பள்ளிக்கு விளையாட்டு உபகரணங்களை ரோட்டரி சங்கம் வழங்கியது. பள்ளி வளாகத்தில் ரோட்டரி சங்கத்தினர் மாணவர்களை மரக்கன்றுகளை நடும் பணியில் ஈடுபடுத்தி, அவற்றை வளர்க்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினர்.



RID 3100

**RC மீரட் பிரபாட்**

குழந்தைகள் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்ச்சியில், லால்குர்தி, ஸ்ரீராம் மந்திர் பொதுப்பள்ளிக்கு மின் விசிறிகள் நன்கொடையாக வழங்கப்பட்டன. மாணவர்கள் நடத்திய கண்காட்சியைப் ரோட்டேரியன்களும் பொதுமக்களும் பார்வையிட்டு பாராட்டுத் தெரிவித்தனர்.



RID 3110

**RC ஃபிரோஸாபாத்**

தயானந்த் ஆங்கிலவழிப் பள்ளியைச் சேர்ந்த 350 குழந்தைகளுக்கு கண்பரிசோதனை முகாம் நடத்தப்பட்டு பார்வைக் குறைபாடுடைய 70 பேருக்கு கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

# Membership Summary

Source: RI South Asia Office

As on December 1, 2024

| RI District | Rotary Clubs | No of Rotarians | Women Rotarians (%) | Rotaract Clubs | Rotaract Members | Interact Clubs | RCC |
|---|---|---|---|---|---|---|---|
| 2981 | 140 | 6,046 | 5.62 | 56 | 106 | 34 | 254 |
| 2982 | 94 | 4,118 | 5.93 | 30 | 422 | 96 | 188 |
| 3000 | 148 | 6,314 | 11.59 | 80 | 1,007 | 242 | 218 |
| 3011 | 138 | 5,401 | 30.83 | 71 | 1,600 | 227 | 41 |
| 3012 | 163 | 3,994 | 24.69 | 53 | 655 | 105 | 61 |
| 3020 | 84 | 4,771 | 8.15 | 33 | 467 | 115 | 351 |
| 3030 | 102 | 5,665 | 16.33 | 60 | 882 | 499 | 398 |
| 3040 | 100 | 2,396 | 14.61 | 35 | 727 | 62 | 216 |
| 3053 | 76 | 3,193 | 17.19 | 23 | 338 | 39 | 131 |
| 3055 | 85 | 3,442 | 12.26 | 47 | 680 | 58 | 391 |
| 3056 | 87 | 3,770 | 25.12 | 21 | 182 | 105 | 201 |
| 3060 | 100 | 5,096 | 15.97 | 52 | 1,882 | 78 | 152 |
| 3070 | 117 | 3,101 | 15.38 | 33 | 187 | 69 | 64 |
| 3080 | 111 | 4,452 | 13.54 | 59 | 1,384 | 200 | 127 |
| 3090 | 135 | 2,659 | 6.43 | 21 | 298 | 359 | 174 |
| 3100 | 117 | 2,253 | 10.79 | 15 | 81 | 40 | 151 |
| 3110 | 139 | 3,729 | 11.88 | 19 | 163 | 97 | 114 |
| 3120 | 90 | 3,831 | 15.82 | 41 | 545 | 43 | 58 |
| 3131 | 141 | 5,673 | 35.29 | 122 | 2,291 | 296 | 216 |
| 3132 | 97 | 3,810 | 14.49 | 29 | 353 | 143 | 226 |
| 3141 | 122 | 6,502 | 28.28 | 121 | 2,171 | 203 | 246 |
| 3142 | 115 | 4,098 | 23.13 | 56 | 1,622 | 130 | 99 |
| 3150 | 108 | 4,082 | 12.79 | 82 | 1,158 | 124 | 130 |
| 3160 | 79 | 2,526 | 9.62 | 24 | 62 | 95 | 82 |
| 3170 | 145 | 6,686 | 15.20 | 88 | 1,034 | 187 | 184 |
| 3181 | 88 | 3,763 | 10.82 | 39 | 408 | 108 | 122 |
| 3182 | 85 | 3,723 | 10.82 | 46 | 227 | 113 | 104 |
| 3191 | 96 | 3,457 | 19.29 | 70 | 1,613 | 155 | 36 |
| 3192 | 93 | 3,742 | 22.13 | 60 | 1,384 | 158 | 40 |
| 3201 | 173 | 6,726 | 10.04 | 107 | 1,823 | 107 | 97 |
| 3203 | 97 | 5,148 | 7.32 | 43 | 662 | 149 | 39 |
| 3204 | 81 | 2,658 | 8.13 | 22 | 185 | 17 | 17 |
| 3211 | 163 | 5,280 | 8.84 | 9 | 82 | 31 | 135 |
| 3212 | 123 | 4,729 | 10.49 | 84 | 528 | 209 | 153 |
| 3231 | 95 | 3,769 | 7.32 | 29 | 326 | 74 | 417 |
| 3233 | 87 | 3,168 | 18.31 | 51 | 1,270 | 0 | |
| 3234 | 79 | 3,178 | 24.29 | 59 | 1,316 | 54 | 63 |
| 3240 | 101 | 3,607 | 16.94 | 42 | 774 | 88 | 42 |
| 3250 | 113 | 4,445 | 23.13 | 33 | 463 | 68 | 247 |
| 3261 | 110 | 3,534 | 24.65 | 18 | 108 | 65 | 192 |
| 3262 | 117 | 3,911 | 16.08 | 82 | 764 | 36 | 46 |
| 3291 | 145 | 3,901 | 27.30 | 0 | 0 | 91 | 764 |
| **India Total** | **4,679** | **176,347** | | **2,065** | **32,230** | **5,169** | **6,987** |
| 3220 | 70 | 2,060 | 16.75 | 81 | 3,339 | 137 | 78 |
| 3271 | 114 | 3,901 | 20.62 | 104 | 447 | 651 | 289 |
| 0063 (3272) | 81 | 1,184 | 20.10 | 48 | 309 | 23 | 49 |
| 0064 (3281) | 284 | 5,890 | 18.00 | 192 | 1,014 | 120 | 211 |
| 0065 (3282) | 153 | 3,089 | 9.00 | 167 | 1,137 | 25 | 48 |
| 3292 | 162 | 5,643 | 19.26 | 174 | 5,390 | 123 | 140 |
| **S Asia Total** | **5,543** | **198,114** | **16.26** | **2,831** | **43,866** | **6,248** | **7,802** |

# திருச்சியில் புதிய இன்டராக்ட் சங்கம்

ரோட்டரி செய்திக்குழு



கைகழுவும் செயல்விளக்கத்தில் மாணவர்கள்.

பன்னாட்டுக் கை கழுவுதல் நாளன்று (அக்டோபர் 15), தமிழ் நாட்டிலுள்ள திருச்சி அருகில் ஸ்ரீரங்கத்தில் இருக்கும் ஸ்ரீ வாகீச வித்யாஷ்ரம் மேல்நிலைப்பள்ளியில் ஓர் இன்டராக்ட் சங்கத்தைப் பதிவு செய்துள்ளது RC ஜம்புகேஷ்வரம், RID 3000. இந்தப் புதிய சங்கத்தை முன்னாள் தலைவர், ரோட்டரி வாசிப்பு வட்டத்தின் மாவட்டச் செயலாளர் அப்பாஸ் மந்திரி தொடங்கிவைத்தார்.

RC BHEL சிட்டி திருச்சிராப் பள்ளியைச் சேர்ந்த மாவட்டப் பணித்தன்மைத் துணைக் குழுத் தலைவர் அஃப்ரோஜ் S H ரோட்டரி சான்றிதழ், மேற்கோள் ஆவணம் போன்றவற்றைப் பதிவுத் தலைவர் S S கவியனிடம் வழங்கினார். அஃப்ரோஜ் தன்னுடைய சொற் பொழிவில் இன்டராக்டர்கள் தங்கள் மேடைப் பேச்சுத் திறன், தலைமைப்பண்புகளை வளர்த்துக் கொள்வதற்காகத் தங்கள் பள்ளியில் செய்யக்கூடிய செயல்பாட்டு வகைகளைப்பற்றிப் பேசினார்.

RC BHEL சிட்டியின் இன்டராக்ட் கமிட்டி தலைவர் சுரேஷ் ராமரத்னத்தையும், இந்தப் பள்ளியைச் சேர்ந்த ஆசிரியரான ஒருங்கிணைப்பாளர் சித்ராவையும் இன்டராக்டர்களுக்கு இணைப்பு நிகழ்வுகளை நடத்தும்படி வலியுறுத்தினார் அவர். இந்த இன்டராக்ட் சங்கத்தை அமைப்பதில் உதவிய பள்ளி முதல்வர், தாளாளரைப் பாராட்டிய அவர், இன்டராக்டர்கள் “பலவிதமான செயல்பாடுகளைச் செய்து உங்கள் சமூகத்தின் வருங்காலத் தலைவர்களாக வளரவேண்டும்” என்றார். “இந்தப் பள்ளியின் இன்டராக்டர்கள் நடத்தும் திட்டங்களுக்கு மாவட்ட ரோட்டரியன்கள் எல்லா உதவி களையும் செய்வார்கள்.”

இந்தச் சங்கத்தின் நிறுவலைத் தொடர்ந்து, கிராமப்புறப்பகுதி களுக்குத் தூய்மை வசதிகள், தூய நீரை வழங்குவதற்காகப் பணியாற்றி வரும் கிராமாலயா என்ற NGOன் நிறுவனர்-CEO Rtn S தாமோதரன் கை கழுவுதல்பற்றிய செய்முறை விளக்கத்தை வழங்கினார். சாப்பிடுதல், கழிப்பறைக்குச் செல்லுதல் போன்றவற்றுக்கு முன்பும் பின்பும் கை கழுவுவது எவ்வளவு முதன்மையானது என்று அவர் சுட்டிக் காட்டினார். முதல்வர், ஆசிரியர்கள் முன்னிலையில் நடைபெற்ற இந்தச் செய்முறை விளக்கத்தால், சுமார் 2,500 மாணவர்களுக்கு முறையான கை கழுவுதலின் தேவை புரியவந்தது.■

## சில முக்கியமான ரோட்டரி தகவல்கள்:

- போலியோவை ஒழிக்கவும் தடுப்பூசி கவரேஜை அதிகரிக்கவும் செய்யும் பணிக்காக, செப்டம்பரில் ரோட்டரிக்கு பிரேசில் ஒஸ்வால்டோ குரூஸ் பதக்கத்தை வழங்கியது.
- தொடர்ந்து 16ஆவது ஆண்டாக, ரோட்டரி அறக் கட்டளை அமெரிக்காவில் பதிவு செய்யப்பட்ட தொண்டு நிறுவனங்களை மதிப்பீடு செய்யும் சாரிட்டி நாவிகேடர் மூலம் உயர் தரச் சான்றிதழ் (நான்கு நட்சத்திரங்கள்) பெற்றுள்ளது.
- ரோட்டரி மாநாட்டை மினியாபோலிஸ் நகரம் 2028-ல் நடத்தும், இது திட்டமிடப்பட்டதை விட ஒரு வருடம் முன்பே நடைபெற உள்ளது. 2029க்கான மாற்று நகரம் இன்னும் தேர்வு செய்யப்படவில்லை. 2026 RI மாநாடு தைவானின் தைபேயில் ஜூன் 13–17 தேதிகளில் நடைபெறும்.
- ஒரு புதிய இன்ஸ்டாகிராம் சேனல் RI இளைஞர் நிகழ்ச்சிகளை (ரோட்டரி யூத் எக்ஸ்சேஞ்ச், ரோட்டரி யூத் லீடர்ஷிப் விருதுகள் மற்றும் இன்டராக்ட்) சிறப்பித்துக் காட்டுகிறது. @rotaryyoungleaders-ஐப் பின்தொடரவும்.
- சிறப்புமிக்க சேவை விருதுக்கான (Distinguished Service Award) பரிந்துரைகளை அறக்கட்டளை இந்த மாதம் ஏற்கும். rotary.org/awards-ல் மேலும் அறிக.

# எல்லோரா குகைகளில் ஒரு RYLA

V முத்துகுமரன்

ஒரு நாள், RID 3132 மற்றும் 3060 மாவட்டங்களைச் சேர்ந்த இரண்டு ரோட்டரி சங்கத் தலைவர்களின் உரையாடலின் போது, யுனெஸ்கோவின் உலக பாரம்பரிய தளமான எல்லோரா குகைகளில் பள்ளி மாணவர்களுக்காக கலாச் சாரம், கலை மற்றும் சினிமா என்ற கருப்பொருளுடன் மாவட்டங்களுக்கு இடையேயான RYLA-வை நடத்து வதற்கான யோசனை தோன்றியது. RC துலியா கடந்த 15 ஆண்டுகளாக பல்வேறு இடங்களில் RYLAகளை நடத்தி வருவதால், “RC அவுரங்காபாத் தலைவர் ஸ்ரீபாத் குல்கர்னி, துலியா சங்கத்தை வழிநடத்தும் அவரது சகோதரர் மகேஷ் குல்கர்னியிடம் இணைந்து RYLA நடத்துவதற்கான யோசனையை தெரிவித்தார். மேலும், குகைகளுடன் கூடிய இயற்கை எழில் சூழ்ந்த எல்லோராவை, மூன்று நாள் முகாமுக்குத் தேர்ந்தெடுத்தனர், அங்கு மாணவர்கள் ரசிக்கவும், நம் நாட்டின் பாரம்பரியத்தைப் பற்றி அறிந்து கொள்ளவும் முடியும்” என்கிறார் திட்ட ஆலோசகர் சரிதா லோனிகர்.

அவுரங்காபாத், துலியா, சூரத் மற்றும் லத்தூர் பகுதிகளில் இருந்து வந்த 80 உயர்நிலை பள்ளி மாணவர்களுக்கு, அந்த பாரம்பரிய இடத்திற்கு அருகிலுள்ள ஒரு ரிசார்ட்டில் மூன்று நாட்கள் தங்கியிருந்தது வாழ்க்கையை மாற்றும் அனுபவமாக அமைந்தது. முதல் நாளில், ஜல்கானைச் சேர்ந்த மென்திறன் பயிற்சியாளர் தேவதத்தா கோகலே, “கோட்டையும் தலைமையும்” என்ற தலைப்பில் நடந்த அமர்வில், இந்தியாவின் வலிமைமிக்க கோட்டைகளுக்கும் நமது கடந்தகால தலைவர்களுக்கும் இடையே உள்ள ஒற்றுமையை ஒப்பிட்டுக் காட்டினார்.

அடுத்த நாள், அடர்ந்த செடிகளுக்கு நடுவே குகையில் நடந்தது மாணவர்களுக்கு சிறந்த அனுபவமாக இருந்தது. அவுரங்காபாத்தில் உள்ள MGM கல்லூரியைச் சேர்ந்த பேராசிரியர் யோகிதா மகாஜன் திரைப்படத் தயாரிப்பு மற்றும் “பெரிய திரைக்குப் பின்னால் உள்ள படைப்பாற்றல்” குறித்து பேசினார். இதனைத் தொடர்ந்து, மொபைல் போன் அடிமைத்தனத்தைப் பற்றிய ஒரு கதையாடல் நடத்தப்பட்டது, இது தொழில்நுட்பத்தை சமநிலையுடன் பயன்படுத்த அறிவுறுத்தியது.

இறுதி நாளில், “நாங்கள் ஜோகேஸ்வரி கோவிலுக்கு நடைபயணம் செய்தோம், அங்கு அழகிய இயற்கை காட்சியில் மனதை பறிகொடுத்தோம். மேலும், சினிமா கலை பற்றிய ஒரு பட்டறை அந்த உலகத்தை பற்றிய ஒரு கண்ணோட்டத்தைக் கொடுத்தது” என்கிறார் சரிதா. Rtn சுரேஷ்



*பங்கேற்பாளர்களால் கட்டப்பட்ட ராய்காட் கோட்டையின் பிரதி.*



*திரைப்படம் எடுக்கும் கலையில் ஒரு கண்ணோட்டம்.*

சோனோன் பங்கேற்பாளர்களுக்கு ராய்காட் கோட்டையின் பிரதியை உருவாக்க வழிகாட்டினார், இது வரலாற்று கோட்டைகள் மற்றும் குழுப்பணியின் முக்கியத்துவத்தை உணர உதவியது.

தொடக்க அமர்வில் DG சுரேஷ் சாபூ, PDG ருக்மேஷ் ஜகோதியா, DGE சுதிர் லத்தூர் மற்றும் மாவட்ட இளைஞர் சேவை இயக்குனர் நிதின் கூடலே ஆகியோர் கலந்து கொண்டனர்.



**கடைசி மூன்றாவது வரிசையிலிருந்து:** DGE *சுதிர் லத்தூர், திட்ட ஆலோசகர் சரிதா லோனிகர், நிர்மலா சாபூ,* DG *சுரேஷ் சாபூ மற்றும் மாவட்ட இளைஞர் இயக்குனர் நிதின் கூடலே, பங்கேற்பாளர்களுடன்.*

அனைத்து மாணவர்களுக்கும் RYLA T-சர்ட், சான்றிதழ்கள் மற்றும் எழுதுபொருட்கள் வழங்கப்பட்டன. எல்லோராவில் நடந்த சில உற்சாகமான தருணங்களை நினைவு கூர்ந்த சித்தி டாக்கே (9ம் வகுப்பு) தன்னால் இப்போது “RYLAக்குப் பிறகு திறம்பட தொடர்பு கொள்ள முடிகிறது. என் நடத்தை நன்றாக மாறிவிட்டது” என்கிறார். திரைப்பட ஆர்வலரான சதாராவைச் சேர்ந்த யசோதீப் பவார் (10-ம் வகுப்பு) என்ற மற்றொரு மாணவர், “திரைக்கதை எழுதுவதில் எனது திறமை மேம் பட்டுள்ளது மற்றும் எனது நடிப்பு நுட்பங்களையும் மேம்படுத்த சில நல்ல குறிப்புகள் கிடைத்துள்ளது” என்று மகிழ்ச்சியடைகிறார்.

“பகிரப்பட்ட நோக்கத்துடன் ஒன்றிணைந்த இளம் மனங்களில் ஏற்படும் மாற்றத்தைக் காண்பது உண்மையிலேயே ஊக்கமளிக்கிறது. அவர்கள் அனைவரும் தங்கள் தனித்துவ மான ஆற்றலைக் கொண்டு வந்தனர், இது RYLA-ல் எங்கள் அனைவரையும் வளப்படுத்தியது” என நிகழ்வின் சுருக்கமாக, சரிதா லோனிகர் கூறுகிறார். இந்த நிகழ்ச்சியை RC-க்கள் அவுரங்காபாத் ஈஸ்ட் மற்றும் லத்தூர் மிட் டவுன் இணைந்து நடத்தியது. ■

# மனதை ஈர்க்கும் பசுமை கதைகள்

ப்ரீதி மேஹ்ரா

ஜனவரி முதல் தேதி உண்மையில், மற்றொரு நாளாக இருக்க வேண்டும். ஆனால், அதற்கு ஒரு சிறப்பு முக்கியத்துவம் இருப்பதால் அது மகிழ்ச்சியான நாள். சிலர் கூறுவதுபோல், நாம் புதிதாக ஒரு விஷயத்தை தொடங்கும்போது, புதிய கனவு காணும்போது, புதிய இலக்குகளை அமைக்கும்போது அதை மீட்டமைக்கும் நேரமாகப் பார்க்கிறோம். நாம் புதிதாக சிந்திக்கவும்,, நாம் தொடாத விஷயங்களில் வெற்றிகரமாக ஒரு காரியத்தை செய்து முடித்த, மாற்றத்தை ஏற்படுபத்திய நபர்களால் ஈர்க்கப்பட்டு ஒரு உத்வேகத்தை பெற வாய்ப்பு கிடைத்த நாளாகவும் அது இருக்கிறது.

புத்தாண்டு தினத்தில் ஒரு புதிய தீர்மானம் போடுவது வழக்கமானது என்பது நாம் அனைவரும் அறிந்த ஒன்றாகும். நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை தீர்மானிக்க பலரும் உங்களுக்கு ஆலோசனை கூறினாலும், இது தனிப்பட்ட விருப்பத்துக்குரிய ஒரு விஷயமாகும். ஆனால், அதைச் செய்வதிலிருந்து நான் விலகிக்கொள்கிறேன். உங்களை ஒரு கட்டாயத்துக்கு உட்படுத்து வதற்கு பதிலாக, பூமியை பசுமையாக மாற்றும், வாழ்வதற்கு உகந்த இடமாக மாற்றுவதற்கு உங்களின் ஓய்வுநேரத்தை எப்படிச் செலவழிக்கலாம் என்று சிந்திக்க உதவும் வகையில் மனதை ஈர்க்கும் கதைகளை உங்களுக்கு நான் சொல்ல விரும்புகிறேன்.

ஹைதராபாதைச் சேர்ந்த 17 வயது தியா லோகாவின் குறிப்பிடத்தக்க சாதனையைவிட சிறந்த உதாரணத்தை என்னால் நினைத்துப் பார்க்க முடியவில்லை. கடந்த டிசம்பர் 6-ம் தேதி அவருக்கு மதிப்புமிக்க 2024-ம் ஆண்டுக்கான ‘‘டயானா விருது’’ வழங்கப்பட்டது. சமூகச் செயல்பாடு மற்றும் மனிதாபிமான செயல்பாடுகளை வெளிப்படுத்தும் இளைஞர்களை அங்கீகரிக்கும் வகையில் இந்த விருது வழங்கப்படுகிறது. இளவரசி டயானாவின் நினைவாக நிறுவப்பட்ட இந்த விருதை அவரது மகன்கள் இளவரசர் ஹென்றி மற்றும் இளவரசர் வில்லியம் ஆகியோரிடமிருந்து தியா பெற்றுக்கொண்டார்.

தியா, தீவிர சுற்றுச்சூழல் ஆர்வலர். அவர், தனது குழந்தைப் பருவ தோழியான சாஹிதி ராதாவுடன் இணைந்து E-Cycl என்னும் அமைப்பை உருவாக்கினார். மின்னணுக் கழிவுகள் பிரச்னைக்கு தீர்வுகாண்பதில் தன்னை அர்ப்பணித்துக் கொண்ட ஓர் அமைப்பு இது. வளர் இளம் பருவத்தில் இருக்கும் இரு பள்ளி மாணவிகள் பல திட்டங்கள் மற்றும் லட்சியங்களை மனதில் கொண்டு இதை உருவாக்கினார்கள். பின்னர் Recykal மற்றும் Crabpin ஆகிய இரு கழிவு மேலாண்மை நிறுவனங்களைத் தொடங்கினர். இந்த நிறுவனங்கள் சீராக வளர்ந்து இப்போது ஹைதராபாதைத் தாண்டி தனது எல்லையை விரிவுபடுத்தியுள்ளது.

தியாவும் சாஹிதியும், தங்களது நகரத்தில் பாதரசம் மற்றும் நச்சு கலந்த வேதியியல் தனிமப் பொருள்கள் கழிவுகளாக அதிக அளவு கையாளப்படுவதை கவனித்தபோது E-Cycl நிறுவனத்தை தொடங்கினர். இத்தகைய கழிவுகள் நமது சுற்றுச்சூழலை தீங்கு விளைவிப்பதுடன் சுகாதார ஊழியர்கள் மற்றும் தங்கள் வாழ் வாதாரத்துக்காக கழிவுகளைச் சேகரிக்கும் குழந்தைகள் உடல் நலத்தை பாதிக்கக்கூடியவை.

தியாவும் சாஹிதியும் ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் பிரச்னையைத் தீர்க்க வேண்டும் என்று உணர்ந்தனர். இதையடுத்து பூஜ்யம் முதலீட்டில் உற்சாகத்துடனும் ஆர்வத்துடனும் ஒரு அமைப்பைத் தொடங்கினார்கள். அவர்கள் பள்ளிகள், வளாகங்கள் மற்றும் அலுவலகங்களில் மாணவர்கள் தலைமை மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்தியதை அடுத்து அவர்களுடைய அமைப்புக்கு ஆதரவு கிடைத்தது. மேலும் அவர்கள் கல்வி நிறுவனங்களில் நேரடி கருத்தரங்குகளை நடத்தினர். இந்த பிரசாரம் 6 முதல் 12 ஆம் வகுப்பு மாணவர்களைச் சென்றடைந்தது. சிலர் தன்னார்வலராக கையெழுத் திட்டு இயக்கத்தில் சேர்ந்தனர். இவர்களின் ஈடுபாடு விரைவில் சமூக இயக்கமாக வளர்ந்தது. இதன் மூலம் சேகரிப்பு இயக்கம் உருவானது. மேலும் மக்கள் இந்த அமைப்புக்கு உதவிக்கரம் நீட்ட முன்வந்தனர்.

இன்று, E-Cycl அனைவரையும் ஈர்க்கும் வகையில் சாதனை புரிந்துள்ளது. 10,000 கிலோ மின்னணுக் கழிவுகளை சேகரித்து, 5,000-த்துக்கும் மேலான மக்கள் மற்றும் மாற்றத்தை விரும்பும் நூற்றுக்கணக்கான இளைஞர்களுக்கு வழிகாட்டியுள்ளது. Meta, WSJ மற்றும் SOIF Future-ண் போன்ற நிறுவனங்கள் இவர்களின் முயற்சியை பாராட்டி நிதியுதவி



செய்வதன் மூலம் தியாவின் பணிகள் தேசிய அளவில் அங்கீகாரம் பெற்றுள்ளது. நிலைத்தன்மைக்கான அவரது ஆர்வம், சுற்றுச்சூழல் பாதுகாப்பு காரணங்களுக்காக டிஜிட்டல் மார்க்கெட்டிங்கில் பணியாற்ற வழிவகுத்தது. சமூகத்தில் சுற்றுச்சூழலை பாதுகாக்க, தியா தனது சகாக்களை தொடர்ந்து ஊக்குவித்து வருகிறார்.

தியாவுக்கு இருக்கும் அர்ப் பணிப்பை எல்லோரும் காட்டுவார்கள் என்று சொல்ல முடியாது. மேலும் நாம் பள்ளிக்குத் திரும்பி அவரைப் போல மற்றவர்களை ஈர்க்க முடியாது. எனினும் ஓய்வு நேரத்தில் மின்னணு கழிவு சேகரிப்பு மற்றும் மேலாண்மை பற்றிய விழிப்புணர்வை பரப்புவதன் மூலம் அவருக்கு நாம் உதவலாம். ஒருவேளை அவரது செயல்திட்டம் என்ன என்பதை கேட்டுப் பெற்று பள்ளிகள் மற்றும் குடியிருப்போர் நலச் சங்கங்களுக்கு அனுப்பிவைக்கலாம். அவரது அமைப்பின் செயல்பாடுகள் பற்றி மேலும் தெரிந்துகொள்ள *ecycl.org* என்னும் மின்னஞ்சலை தொடர்புகொள்ளலாம்.

ஹைதராபாதிலிருந்து 1,500 கி.மீ. தொலைவில் உள்ள தில்லி, போக்குவரத்து நெரிசல் மற்றும் காற்று மாசுபடுதலுக்கு பெயர்போனது. கடந்த நவம்பரில், தேசியத் தலைநகர் தில்லியில் காற்று மாசு அதிக அளவில் படர்ந்து உலகில் மிகவும் மாசுபட்ட நகரங்களில் ஒன்று என்ற இடத்தை பெற்றுள்ளது. ஆனால், சைனிக் ஃபார்ம்ஸில் உள்ள பீட்டர் சிங் மற்றும் நீனோ கவுர் வீட்டுக்குச் சென்றால் நீங்கள் எளிதாக சுவாசிக்க முடியும். ஆனால், தெற்கு தில்லி காலனியில் வசிக்கும் அவர்களின் அண்டை வீட்டார் மாசுபடுதலால் வெகுவாக பாதிக்கப்படுகின்றனர். ஆனால், மேற்குறிப்பிட்ட தம்பதிகளின் வீட்டில் காற்று சுத்திகரிப்பான்கள் நிறுவப்பட்டுள்ளதால் அவர்கள் பெரும் பாதிப்பிலிருந்து காக்கப்படுகின்றனர்.



பீட்டரும் நீனோவும் தங்கள் வீட்டின் முன்பக்க கதவு அருகில் ஒரு காற்று சுத்திகரிப்பான் கருவியை வைத்துள்ளனர். இதில் உள்ள விசிறி வெளிக்காற்றை உள்ளிழுத்து, அதை குளிர்வித்து, சுத்தமான காற்றை பிரதான வீட்டின் முன்பக்க முற்றத்தில் உள்ள பசுமைப் பாதை வழியாக உள்ளே அனுப்புகிறது. அதே நேரத்தில் வளரும் தாவரங்களும் காற்றை ஆக்ஸிஜனேற்றம் செய்கின்றன. மீன்வளர்ப்பு மற்றும் நீரியல் தாவர வளர்ப்பு முறையில் தாவரங்களை வளர்க்கும் ஒரு தனித்துவமான முறை செயல்படுத்தப்படுகிறது. அதாவது மண் வளம் குறைந்த சூழலில் ஹைடிரோபோனிக்ஸ் முறையில் அவை வளர்க்கப்படுகின்றன. மழைநீர் தொட்டியில் சேமிக்கப்பட்டு, பாக்டீரியாக்கள் மீன் உற்பத்தி செய்யும் கழிவுகளை தாவரங்கள் உறிஞ்சக்கூடிய ஊட்டச்சத்துக்களாக மாற்றுகின்றன. இதையடுத்து தாவரங்கள் தண்ணீரை வடிகட்டி சுத்திகரிக்கின்றன. இதனால் மீன்கள் செழித்து வளர்கின்றன.

வீட்டின் விதானம்-மேற்கூரை உள்ளிட்ட சுற்றுப்பகுதிகள் பசுமை சூழ்ந்திருக்கும். இது பீட்டரையும் நீனோவையும் ஆரோக்கியமாகவும் வசதியாகவும் வைத்திருக்கும். பாரம்பரிய கட்டக்கலையும் வீட்டின் சுற்றுச்சூழலுக்கு பாதுகாப்பை சேர்க்கிறது. பீட்டர் சொல்கிறபடி, பெரிய வீடுகள் மட்டுமல்ல, பிளாட்டுகளில்கூட 500 செடிகள் கொண்ட பால்கனியில் வீட்டிற்குள் நுழையும் காற்றை வடிகட்ட முடியும். அதற்காக வாழ்த்துக்கள்!

எங்களது கடைசி துறைமுகம் மகாராஷ்டிரத்தின் மேற்கு கடற்கரை பகுதியில் உள்ளது. இங்குதான் பால்கரில் உள்ள பெர்த் கிராமத்தில் எனது நண்பர்களான ரவி ஐயர் மற்றும் மீனா மேனன் இருவரும் நிலம் வாங்கி சிறிய அளவில் இயற்கை விவசாயப் பண்ணையை நிறுவியுள்ளனர். ஐபிஎம் நிறுவனத்தின் திட்ட மேலாளரான ரவி மற்றும் பத்திரிகையாளரும் எழுத்தாளருமான மீனா இருவரும் தங்கள் பதவியிலிருந்து விலகி இயற்கை விவசாயிகளாக மாற முடிவு செய்தது கதையின் ஒரு பகுதி மட்டுமே. அவர்கள் ஊரக மக்கள் சமூகத்துடன் ஒருங்கிணைந்து எப்படி மாற்றத்தை கொண்டுவந்தார்கள் என்பதுதான் உண்மைக் கதை.

ரவி இதுவரை அருகில் உள்ள விக்ரம்காட் மாவட்டத்தில் 70 ஆதிவாசி விவசாயிகளுக்கு இயற்கை விவசாய முறைகளை கற்றுக்கொடுத்துள்ளார். அதிக நிதி முதலீடு இல்லாமல் அவர்கள் இப்போது அதிகம் சம்பாதித்து வருகின்றனர். அதுமட்டுமல்ல, ரவி, அந்த விவசாயிகள் தங்கள் விளைப்பொருள்களை விற்பனை செய்வதற்கு “ஹரி பாரி டோக்ரி” என்னும் விற்பனைச் சந்தையையும் ஏற்படுத்தி கொடுத்துள்ளார். மேலும் இயற்கை விவசாயத்தின் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட காய்கறிகள், பழங்கள் மற்றும் தானியங்களை விற்பனை செய்ய விவசாயிகள் சங்கத்தை ஏற்படுத்துவதிலும் விவசாயப் பள்ளியை கட்டமைப்பதிலும் ஈடுபட்டு வருகிறார். விவசாயத்துறைக்கு ஆதரவாக குரல் கொடுக்க மும்பை இயற்கை விவசாயிகள் மற்றும் நுகர்வோர் சங்கத்தையும் (MOFCA) நிறுவியுள்ளார்.

இந்த கதைகள் அனைத்தும், துணைக் கதைகளுடன் பசுமைக்கு மாறுவதற்கு நீங்கள் உங்களை தயார்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதற்குத்தான். புத்தாண்டு வாழ்த்துகள்.

எழுத்தாளர் மூத்த இதழாளர் சுற்றுச்சூழல் பிரச்சனைகளைப்பற்றி எழுதிவருகிறார்.

# பெங்களூரில் ஒரு பசுமை சுகாதார மையம்

ரோட்டரி செய்திக்குழு

பெங்களூரின் புறநகரில் உள்ள கும்பல்கோடுவில் உள்ள ஒரு கிராமப்புற பொது சுகாதார மையம், இப்போது RC பெங்களூர் லேக்சைடு, RID 3191 மற்றும் அதன் CSR பங்குதாரர் பாய் & பாய் கெமிக்கல்ஸ் ஆகியவற்றின் ஆதரவுடன் நிலையான சூரிய சக்தியிலிருந்து பயனடைகிறது. ஆரம்ப சுகாதார நிலையம் 10க்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு சேவை செய்கிறது மற்றும் ஆண்டுதோறும் 40,000 பார்வையாளர்கள் வருகை தருகிறார்கள்.



*சதீஷ் மாதவன், பாய் & பாய் கெமிக்கல்ஸ் நிறுவனர் கிருத்திகா பாய், மாவட்ட இயக்குநர் காசிநாத் பிரபு, பெங்களூர் லேக்சைட் தலைவர் அபிலாஷா பண்டிட் கும்பல்கோடு ஆரம்ப சுகாதார நிலையத்தில்.*

புதிதாக நிறுவப்பட்ட சோலார் பேனல்கள் ஒழுங்கற்ற மின்சார விநியோக சிக்கலை நிவர்த்தி செய் கின்றன, மையத்தில் தடுப்பூசி உறைவிப்பான் உள்ளிட்ட மருத்துவ உபகரணங்களுக்கு சீரான மின்சாரத்தை உறுதி செய்கின்றன. சூரிய சக்தியால் இயங்கும் தெரு விளக்குகள் வளாகத்தில் நிறுவப் பட்டுள்ளன, மேலும் எந்தவொரு உபரி ஆற்றலும் பிரதான கட்டத்திற்கு மீண்டும் வழங்கப்படுகிறது.

'பசுமை ஆரம்ப சுகாதார மையம் முயற்சி சூரிய சக்தியையும் தாண்டி விரிவடைகிறது. இரண்டு ஏக்கர் நிலத்தில் அமைந்துள்ள மையத்தைச் சுற்றி ஒரு பசுமையான தோட்டத் தையும் உருவாக்கியுள்ளது; இந்த திட்டம் ரூ.12 லட்சம் செலவில் முடிக்கப்பட்டது.■

# RI தெற்காசியா அலுவலகத்திலிருந்து செய்தி

**பால் ஹாரிஸ் சொசைட்டி பற்றி மேலும் தெரிந்துகொள்ளுங்கள்**

பால் ஹாரிஸ் சொசைட்டி (PHS) வருடாந்திர நிதி, போலியோ பிளஸ் நிதி அல்லது ஒப்புதல் அளிக்கப்பட்ட சர்வதேச மானியத்துக்கு ஒவ்வொரு ரோட்டரி ஆண்டும் 1,000 டாலர் அல்லது அதற்குமேல் பங்களிப்புச் செய்ய விரும்பும் நபர்களை அங்கீகரிக்கிறது. PHS பங்களிப்புகள் நீண்டகால உறுப்பினர் (வருடாந்திர நிதி பங்களிப்பு மட்டும்), பால் ஹாரிஸ்-பெஃல்லோ, பல்முனை PHF மற்றும் பெரு நன்கொடையாளர் மற்றும் சங்கத்தின் அங்கீகாரம் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது. PHS பற்றி மேலும் அறிந்துகொள்ள பால் ஹாரிஸ் சொசைட்டி கையேட்டை பார்க்கவும்.

**எண்டௌவ்மென்ட் நிதிக்கு அறங்காவலர் பரத் பாண்ட்யாவின் வேண்டுகோள்**

2025 ரோட்டரி ஆண்டுக்குள் 2.025 பில்லியன் டாலர் என்ற எண்டௌவ்மென்ட் நிதி இலக்கை ஆதரிக்கும் வகையில் TRF அறங்காவலர் பரத் பாண்ட்யா, கடந்த 2024 ஜூலை மாதம் 30 ஆம் தேதி நடைபெற்ற TRF பெருநன்கொடையாளர் மற்றும் CSR நிதி தொடர்பான பயிலரங்கில் எண்டௌவ்மென்ட் மண்டலங்கள் 4,5,6 மற்றும் 7-க்கு சிறப்பு நிதியத்தை ஏற்படுத்துவதற்கான திட்டத்தை முன்மொழிந்தார். அதாவது இந்த நிதிக்கு குறைந்தபட்சம் 1,000 டாலர் வழங்கும் நன்கொடையாளர்கள் TRF பயனாளிகளாக அங்கீகரிக்கப்படுவார்கள்.

**பணம் செலுத்தும் வழிகள்:**

(1) நன்கொடையாளர் பெயர், ரோட்டரி அடையாள எண், பான் எண் மற்றும் நன்கொடைக்கான ID: (E21465) போன்ற தகவல்களுடன் "ரோட்டரி அறக்கட்டளை (இந்தியா)" என்ற பெயரில் தொகையை காசோலை யாக அனுப்பிவைக்கலாம்.

(2) டெபிட், கிரெடிட் கார்டுகள், நெட் பேங்கிங், இ-வாலெட்டுகள், UPI செயலிகள் மூலமும் தனிப்பட்ட நன்கொடையாளர்கள் பணத்தை அனுப்பிவைக்கலாம். அதற்கான டைனமிக் இணைப்பை பெற, நன்கொடையாளர்கள் ஆன்லைன் மூலம் படிவத்தை நிரப்பி அனுப்ப வேண்டும். (https://forms.office.com/r/8ardURDjnR). மேலும் எண்டௌவ்மென்ட நிதி நன்கொடைக்கான ID E21465-ஐ குறிப்பிடவும். டைனமிக் இணைப்பு தொடர்பாக ஏதேனும் கேள்விகள் இருந்தால் rabi.boaz@rotary.orgஎன்ற மின்னஞ்சலில் Rabi Boaz-ஐ தொடர்பு கொள்ளவும்.■

ரோட்டரியின் சேவைத்திட்டங்கள்

ரோட்டரி செய்திக்குழு

### சமூகத் தாக்கம்

60 போக்குவரத்துக் காவலர்களுக்கான மருத்துவ முகாமை நடத்தியது RC நிஜாமாபாத், RID 3150. பொறியியல் பயிலும் 5 மாணவிகளுக்கு ரூ.20,000 கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டன.



*மருத்துவ முகாமில் போக்குவரத்து கான்ஸ்டபிள்கள்.*

### காசநோய் எதிர்ப்பு

நடமாடும் TB பரிசோதனை வாகனத்தை RC கோயம்பத்தூர் நியூ டவுன், RID 3201, தொடங்கியது. 1,500 TB நோயாளி களுக்கு 6 மாதங்களுக்கு ஊட்டச் சத்தான உணவை அளிக்கும் மறுமலர்ச்சித் திட்டத்தை DG N சுந்தரவடிவேலு தொடங்கி வைத்தார்.



*சங்க உறுப்பினர்கள் காசநோய் கண்டறியும் வேன் தொடக்க விழாவில்.*

### பார்வையற்றோருக்கு நிதி நல்கை

மும்பை கன்டிவ்லி வெஸ்ட், 3141, வொர்லி-யில் உள்ள, பார்வையற் றோருக்கான தேசிய அமைப்பிற்கு ரூ.1.25 லட்சம் கொடையளித்தது. இந்தத் தொகை வெள்ளைத் தடிகள், படுக்கை விரிப்புகள் வாங்கவும், பார்வைக் குறைபாடுள்ளோருடைய கல்வியை ஆதரிக்கவும் பயன்படும்.




*பார்வையற்ற வர்களுடன் சங்க உறுப்பினர்கள்.*


### பெண்கள் மாநாடு

சேலம் பெரியார் பல்கலைக்கழகத்தில் RC சேலம் விங்க்ஸ், RID 2982, நடத்தும் நறுமுகை பெண்கள் கருத்தரங்கை DG V சிவகுமார் தொடங்கிவைத்தார், 750க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டார்கள், 50 பெண் ரோட்டரியன்கள், 10 பிறர் தொழில்முறை உன்னதத்துக்காகப் பெருமைப்படுத்தப்பட்டார்கள்.



*மாநாட்டில் சேலம் விங்க்ஸ் உறுப்பினர்கள்.*

# ஒரு நெகிழ்ச்சியான வாசிப்பு





*எலிஃப் ஷஃபாக்கின் புதிய நாவல் நெகிழ்ச்சி மற்றும் சஞ்சலம் கலந்த நினைவுகளையும் உணர்ச்சிகளையும் தூண்டுகிறது.*



**சந்தியா ராவ்**

நான் எலிஃப் ஷஃபாக் ரசிகர். 20க்கும் மேற்பட்ட நாவல்களைக் கொண்ட இந்த குறிப்பிடத்தக்க எழுத்தாளர் துருக்கிய மற்றும் ஆங்கில மொழிகளில் எழுதுபவர். அவரது கதைசொல்லல் கடினமான மற்றும் நாம் அறிந்திருக்க வாய்ப்பில்லாத உலகங்களை வாசகர்களாகிய நமக்கு கொண்டுவருகிறது, மேலும் சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் இனப்படுகொலை போன்ற விஷயங்களையும் கையாளுகிறது. தி பாஸ்டர்ட் ஆஃப் இஸ்தான்புல் என்ற நாவலில் ஆர்மேனிய இனஅழிப்பை (ஒர்ஹான் பமுக் போன்ற எழுத்தாளர்கள் அதை பற்றி கேள்வி எழுப்பியிருந்தாலும், அதிகாரபூர்வ துருக்கி தொடர்ந்து அதற்கு மறுப்புத் தெரிவித்தது) உறுதியாக ஆய்வு செய்ததற்காக துருக்கிய அரசாங்கத்தின் சட்ட நடவடிக்கையை சந்திக்க வேண்டிய சூழல் உருவானது. இதன் காரணமாக ஷபாக் இங்கிலாந்துக்கு குடிபெயர்ந்தார், அங்கு தான் அவர் இன்னும் வசிக்கிறார்.

அவரது சமீபத்திய புத்தகம், தேர் ஆர் ரிவர்ஸ் இன் தி ஸ்கை, ஈராக், சிரியா, துருக்கி மற்றும் ஈரானின் சில பகுதிகளை உள்ளடக்கிய முன்னொரு காலத்தில் மெசபடோமியா என்று அழைக்கப்பட்ட பிராந்தியத்தைச் சேர்ந்த மக்களின் சமூகமான யசீதிகளை பற்றி ஆய்வு செய்கிறது. வரலாற்று ரீதியாக துன்புறுத்தப்பட்டு, பல நூற்றாண்டுகளாக அவர்களில் ஆயிரக்கணக்கானோர் முறையாக அழிக்கபட்டுள்ளனர். குறிப்பாக ISIS போன்ற அமைப்புகளால், அவர்களது மத வழிபாட்டு பழக்கங்கள் காரணமாக இன்றும் அடக்குமுறைக்கும், வெறுப்புக்கும் ஆளாகின்றனர். தி எபிக் ஆஃப் கில்கமேஷ் என்ற காவியத்தின் பாடல்கள் செதுக்கப் பட்ட தொன்மையான தகடுகளை ஒரு ஆங்கிலேயர்(அவரின் கதை நாவலின் போக்கில் வெளிப் படுகிறது) கண்டுபிடிப்பதை கதையின் மையமாகக் கொண்டு ஷஃபாக் யசீதிகளின் வாழ்க்கையை நுட்பமாக விவரிக்கிறார். ஒரு சிறிய துளியிலிருந்து டைக்ரிஸ், யூப்ரடீஸ் மற்றும் தேம்ஸ் ஆகிய நதிகள் வரையிலான நீர் பற்றிய குறிப்புகளால் இவை அனைத்தும் ஒன்றாக இணைக்கப்பட்டுள்ளன. யசீதிகள் நீரை குறிப்பாக புனிதமாகக் கருதுபவர்கள். நாவல் ஒரு அரசரின் தலையில் நீரின் ஒரு துளி விழும் காட்சியுடன் துவங்குகிறது, மேலும் 400 பக்கங்களில் ஆர்தர், நரின், ஜலீக்கா ஆகிய மூன்று வெவ்வேறு கதாபாத் திரங்களைக் கொண்ட மூன்று தனித்தனி கதைக்களங்களை மூன்று வெவ் வேறு காலங்களிலும் இடங்களிலும் நடைபெறுகிறது.




டைக்ரிஸ் நதிக் கரையில் உள்ள ஒரு செல்வச்செழிப்பு கொண்ட நகரமான நினிவேயில் ராஜா காட்டப்படுகிறார், அங்கு அஷுர்பானிபால் தனது அற்புதமான நகரத்தை பெருமையுடன் பார்த்துக்கொண்டிருக்கிறார்: அவர் மிகவும் மகத்தான ஒரு பேரரசை ஆளுகிறார், மக்கள் அவரை "நான்கு திசைக்கும் பேரரசர்" என்று போற்றுகிறார்கள். ஒரு நாள் அவர் "நூலக அரசர்", "படித்த மன்னர்", "மெசபடோமியாவின் எருடிட் ஆட்சியாளர்" போன்ற பெயர்களில் நினைவுகூரப்படுவார் - இவை, அவர் மிகவும் கற்றலும் கலாசார மிக்கவருமானாலும், தனது முன்னோர்களை போலவே கொடூரமானவர் என்பதை மக்கள் மறந்து விட செய்யும் பட்டங்கள். அவரது மிகவும் மதிப்புமிக்க உடைமைகளில் கில்கமேஷ் என்ற ஒரு நாயகனைப் பற்றிய ஒரு கவிதைப் பகுதியும் ஒன்று.

இலக்கிய படைப்பில் எழுதப்பட்ட முதல் நாயகன் அவர் தான். கியூனிஃபார்மில் பதிவு செய்யப் பட்டது. கியூனிஃபார்ம் என்பது ஆரம்பகால வெண்கல யுகத்திற்கும் பொது சகாப்தத்தின் தொடக்கத் திற்கும் இடையில் இப்போதைய மேற்கு ஆசியா / மத்திய கிழக்கில் பயன்படுத்தப்பட்டது. இலியாட் மற்றும் ஒடிஸி போன்ற ஹீரோ-கவிதைகளின் பாரம் பரியத்தை இந்த காவியம் தூண்டியதாக நம்பப்படுகிறது.

"தெர் ஆர் ரிவர்ஸ்" நாவலை நான் பாதி படித் திருந்த நிலையில், கார்டியன் பத்திரிகையின் விமர்சனத்தை பார்த்தேன். நாவலின் பரந்து விரிந்த அமைப்பு மற்றும்

வாக்கியங்கள், உணர்ச்சிகள், தேவையற்ற மற்றும் எண்ணற்ற நீர் குறித்த ஒப்பீடுகளால் அது ''படிக்க கடினம்'' என குறிப் பிடப்பட்டிருந்தது, இருப்பினும் சில பகுதிகள் பற்றி பாராட்டுக்களும் இருந்தன. எனது சாதாரண, ஆர்வமுள்ள, வாசக மனதிற்கு கதை சொல்லல் ஈடுபாட்டு டன், தகவல் தருவதாகவும், சமகால யதார்த்தங்களுடன் இணைக்கப் பட்டதாகவும் இருந்தது. பல்வேறு கதைக்களங்கள் ஒன்றிணைவது யூகிக்கக்கூடியதாக இருந்தாலும், நாவல் வழங்கும் உலகக் கண்ணோட்டம், மனிதனின் நடத்தைப் பற்றிய வரலாற்றை வழங்கி சிந்திக்க என்னை தூண்டியது. கதாபாத் திரங்களின் அல்லது எழுத்தாளரின் குரலில் கூறப்பட்ட அவதானிப்புகளின் முழு அர்த்தத்தைப் புரிந்துகொள்ள நான் நின்று, ஆழமாக கவனித்தேன்.

உதாரணமாக, துரோகி என்று குற்றம் சாட்டிய அஷுர்பானிபாலின் வழிகாட்டியை படையினர் பிடித்து, அவரை சங்கிலியால் பிணைத்து, அரசர் முன் கொண்டு வருகிறார்கள். வளரும் போது அஷுர்பானிபால், வழிகாட்டியுடன் கிள்கமேஷ்ப் படிப்பதில் பல மணி நேரங்களைச் செலவிட்டார். அவர் தனது முன்னாள் மாணவர் முன் மண்டியிட்டு கூறுகிறார், கிள்கமேஷ்... தனது மரண த்தை வெல்ல விரும்பினான், அதனால் அவன் உலகின் முனைகளுக்கு பயணம் செய்தான் – ஆனால் கடைசியில் தோல்வி யடைந்தான். அவன் புரிந்து கொள்ளாதது, பரமஜீவிக்க ஒரே வழி என்பது ஒருவர் மறைந்த பின்னர் நினைவு கூரப்படுவதில் மட்டுமே உள்ளது என்பதை, மற்றும் நினைவு கூரப்படுவதற்கான ஒரே வழி ஒரு நல்ல கதையை விட்டு செல்வதிலும் இருக்கிறது. என் அரசே, ஏன் நீங்கள் உங்கள் கதையை இவ்வளவு இரக்கமற்ற ஒன்றாக மாற்றியுள்ளீர்கள்?''

ஷஃபாக், சில சமயங்களில் கணிக் கக்கூடிய வகையில் கதைக்களங்களை ஒன்றிணைத்து இறுதியில் பெரிய படத்தை முன்வைத்து கலைநயத்துடன் வழங்குகிறார். நாவலின் முக்கியமான கதாநாயகியான ஒன்பது வயது நரின், படிப்படியாக தனது செவித்திறனை இழந்து வருவதை நான் படித்தபோது, எனக்குள் உணர்வு ஒன்று தோன்றியது. எங்கள் புத்தகக் கழகத்தில் சாரா நோவிக் எழுதிய ட்ரு பிஸ் என்ற புத்தக த்தை நாங்கள் படித்தோம் அந்த புத்தகம் காது கேளாதோர் பள்ளியில் அமைக்கப் பட்டிருந்தது. மருத்துவர்கள், நரின் எட்டு மாதங்களில் தனது கேட்கும் திறனை முழுமையாக இழக்கப்போவதாகச் கூறுகிறார்கள். ஆகவே, குழந்தைகளின் கூச்சலும் ஆட்டுக்குட்டிகளின் சத்தமும் நரினுக்கு வெறும் நினைவுகளாக மாறும் முன், பாட்டி பெஸ்மா, யசீதி சமுதாயத்திற்கு புனிதமான லாலிஷ் என்ற இடத்தில் அவளை ஞானஸ்நானம் செய்ய விரும்புகிறார். புனிதமான லாலிஷ் பள்ளத்தாக்கின் பறவைகள், சுரண்டல்கள் மற்றும் பிரார்த்தனைகளை முதல் மற்றும் கடைசி முறையாக அவள் கேட்க வேண்டும் என்று பாட்டி பெஸ்மா விரும்புகிறார். விரக்தி நம்பிக்கையாக மாறும் மற்றும் தனிமையில் இருக்கும் ஆன்மாக்கள் கூட ஆறுதல் அடையும் இடத்தை நரின் பார்க்க வேண்டும். ஆனால் அவர்கள் அங்கு செல்வதற்கு முன், சின்ஜார் மலைகளில் மறைந்திருந்த ஆயிரக்கணக்கான யசீதிகள் கொல்லப்பட்டனர் மற்றும் ஆயிரக்கணக்கான பெண்கள் மற்றும் குழந்தைகள் ஆகஸ்ட் 2014 ISIS இனப்படுகொலையின் போது கடத்தப்பட்டனர். இந்த வரலாற்று நிகழ்வு பல உண்மை நிகழ்வுகளைப் போலவே நாவலில் அற்புதமாகவும் நகரும் வகையிலும் விவரிக்கப் பட்டுள்ளது. சில கதாபாத்திரங்களும் உண்மையான மனிதர்களை அடிப்படையாகக் கொண்டவை.


எழுத்தாளர்
எலிஃப் ஷஃபாக்

கிள்கமேஷின் காணாமல் போன பகுதியைத் தேடுவதற்காக மெச பட்டோமியாவுக்குச் செல்லும் ஆர்தர், ஒரு காலத்திற்கு சக்தி வாய்ந்ததாக இருப்பதால், பேரரசுகள் தாங்கள் என்றென்றும் நிலைத்திருப்போம் என்று நம்பி தங்களை எப்படி ஏமாற்றுகின்றன என்பதை உணர்கிறார். அவரது தொல்பொருள் கண்டுபிடிப்புகள் அதற்கு போதுமான ஆதாரங்களை வழங்குகின்றன, மேலும் வலிமைமிக்க ஆட்சியாளர்கள் கூட மரணத்திற்கு அஞ்சி னார்கள் என்பதை அது காட்டுகிறது. உண்மையில், யாரும் நினைவில் கொள்ள விரும்பாத இழப்பிலிருந்து நாம் கொஞ்சம் கொஞ்சமாக மீட்டெடுத்ததற்கு நாம் கொடுக்கும் பெயர் நாகரிகம் என்று ஆர்தர் சந்தேகிக்கத் தொடங்கினார். சொல்லப்படாத மிருகத்தனங்களால் கட்டப்பட்ட சாரக்கட்டு மீது வெற்றிகள் அமைக்கப்பட்டன, வீர புனைவுகள் ஆக்கிரமிப்புகள் மற்றும் அட்டூழியங்களின் இழையிலிருந்து பின்னப்படுகின்றன. நீர்ப்பாசன அமைப்பு நினிவேயின் ஒளிரும் சாதனை – ஆனால் அதன் கட்டு மானத்தில் எத்தனை உயிர்கள் வீணடிக் கப்பட்டன. எப்போதும் வரலாற்றுக்கு மறந்து போன பக்கம் ஒன்று இருக்கிறது.

நவீன வாழ்க்கையின் அவசரத்தில், நம்மில் பெரும்பாலோர் பணம், அதிகாரம் மற்றும் பிற பொருள்களுக்காக மனிதநேயத்தை விட்டுவிடுகிறோம். நாவல் முடிவடை யும் போது ஷஃபாக் இது குறித்து ஒரு எச்சரிக்கையை வழங்குகிறார்: பண்டைய மெசபடோமியர்கள் எழுத்து, கணிதம், வானியல், நீர்ப் பாசனம் மற்றும் சக்கரத்தை கண்டு பிடித்ததற்காக புகழ் பெற்றவர்கள், ஆனால் அவர்களின் மிகப்பெரிய கண்டுபிடிப்பு அங்கீகரிக்கப்படாமல் போய்விட்டது. தாய்நாட்டை இழப்பதன் வலியை முதலில் அனுபவிப்பது அவர்கள்தான்.' பல நூற்றாண்டுகள் கடந்து சென்றாலும், தாய்நாட்டை இழப்பதன் வலி எப்போதும் இருந்துகொண்டே இருக்கும்.

கட்டுரையாளர் குழந்தைகள் எழுத்தாளர் மற்றும் மூத்த பத்திரிகையாளர்.



## RID 3142

**RC ஹீரானந்தா ஜவான்**

மருத்துவ முகாமில் 630 பேருக்கு இசிஜி, இரத்தத்தில் சர்க்கரை அளவு உள்ளிட்ட பரிசோதனைகள் நடத்தப்பட்டு ரூ.3 லட்சம் மதிப்புள்ள மருந்து, மாத்திரைகள் மற்றும் 575 கண்ணாடிகள் விநியோகிக்கப்பட்டன. 25 பேர் கண்புரை நோய் அறுவைச் சிகிச்சைக்காக அடையாளம் காணப்பட்டனர்.

Rotary PEOPLE OF ACTION

# சங்கச் செய்திகள்





## RID 3182

**RC சிக்மகளூர் காஃபி லேண்ட்**

அரசு ஜூனியர் கல்லூரியில் ரோட்டரியின் திட்டங்கள் குறித்த ஒருநாள் நிகழ்ச்சியில் 1,700-க்கும் மேலான மாணவர்கள் கலந்து கொண்டனர்.

## RID 3203

**RC ஈரோடு திண்டல்**

ஈரோடு பேருந்துநிலையத்திலிருந்து வேளாளர் பொறியியல் கல்லூரி மாணவர்கள் 100 பேர், போக்குவரத்து விதிகள் குறித்த விழிப்புணர்வு பேரணி நடத்தினர். மாவட்ட ஆளுநர் சுரேஷ் பாபு, மாநில அமைச்சர் S முத்துசாமி, மாவட்ட மற்றும் காவல்துறை அதிகாரிகள் கலந்துகொண்டனர்.





## RID 3212

**RC சிவகாசி ஸ்பார்க்லர்**

குற்றாலத்தில் உள்ள K R டைகர் ரிசார்ட்டில் சிவகாசி டைமண்ட் மற்றும் செங்கோட்டை ரோட்டரி சங்கம் இணைந்து மூன்று நாள் RYLA நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தனர். DG மீரான்கான் சலீம், நிகழ்ச்சியைத் தொடங்கிவைத்தார்.

## RID 3181

**RC மங்களூர் சீசைட்**

மங்களூரில் அனைத்து வயதினருக்கான பல்வகையான போட்டிகள் சின்னரா சிலிபிலியில் நடைபெற்றது. இதில் 35 பள்ளிகளைச் சேர்ந்த 700 மாணவர்கள் பங்கேற்றனர். வெற்றிபெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.



## RID 3231

**RC குடியாத்தம்**

KVS இதயநோய் சிகிச்சை மையத்தின் ஆதரவுடன் நடைபெற்ற பரிசோதனை முகாமில் 135 பேருக்கு இதயப் பரிசோதனை நடத்தப்பட்டது. இதில் குடியாத்தம் MLA அமுலு விஜயன், PDG JKN பழனி, நகராட்சிதலைவர் S சௌந்திரராஜன் மற்றும் சங்கத்தின் தலைவர் C கண்ணன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.



## RID 3261

**RC வைன்கங்கா பாலகாட்**

ராஷ்ட்ரீய பால ஸ்வஸ்தாய கார்யகிரம் உடன் இணைந்து ரோட்டரி சங்கம் சார்பில் இதய நோய் பரிசோதனை முகாம் நடைபெற்றது. இதில் 190 குழந்தைகளுக்கு ECHO பரிசோதனை நடத்தப்பட்டது. ஜபல்பூர் மெட்ரோ மருத்துவமனை மற்றும் பெங்களூர் நாராயணா ஹிருதயாலயா மருத்துவ மனையைச் சேர்ந்த மருத்துவர்கள் நோயாளிகளைப் பரிசோதித்தனர்.

ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்

# District Wise TRF Contribution

Source: RI South Asia Office


Annual Fund (AF) includes SHARE, AoF and World Fund.
PolioPlus excludes Bill and Melinda Gates Foundation.

As on November, 2024

(in US Dollars)

| District Number | | Annual Fund | PolioPlus Fund | Endowment Fund | Other Funds | Total Contribution |
|---|---|---|---|---|---|---|
| 2981 | | 45,993 | 11,232 | 0 | 38 | 57,263 |
| 2982 | | 27,797 | 4,605 | 10,421 | 33,218 | 76,040 |
| 3000 | | 17,893 | 2,671 | 1,000 | 245,336 | 266,900 |
| 3011 | | 46,037 | 5,053 | 26,099 | 505,498 | 582,686 |
| 3012 | | 1,282 | 151 | 1,500 | 97,500 | 100,433 |
| 3020 | | 65,951 | 9,262 | 21,000 | 4,857 | 101,070 |
| 3030 | | 19,854 | 875 | 4,190 | 53,000 | 77,920 |
| 3040 | | 3,001 | 90 | 0 | 15,717 | 18,808 |
| 3053 | | 33,979 | 300 | 0 | 0 | 34,279 |
| 3055 | | 19,470 | 2,943 | 2,071 | 60,050 | 84,534 |
| 3056 | | 15,645 | 93 | 60 | 133 | 15,930 |
| 3060 | | 131,013 | 6,338 | 2,499 | 71,950 | 211,800 |
| 3070 | | 14,858 | 582 | 0 | 0 | 15,440 |
| 3080 | | 11,104 | 5,041 | 17,384 | 9,561 | 43,090 |
| 3090 | | 13,165 | 56 | 7,000 | 0 | 20,221 |
| 3100 | | 18,419 | 2,871 | 0 | 34,765 | 56,054 |
| 3110 | | 12,365 | 623 | 1,000 | 135,838 | 149,825 |
| 3120 | | 30,068 | 1,011 | 8,337 | 12,173 | 51,589 |
| 3131 | | 383,471 | 14,052 | 48,524 | 114,948 | 560,994 |
| 3132 | | 29,627 | 1,847 | 15,000 | 9,769 | 56,243 |
| 3141 | | 321,812 | 24,720 | 78,000 | 1,094,610 | 1,519,142 |
| 3142 | | 347,400 | 14,945 | 50,060 | 190,890 | 603,295 |
| 3150 | | 55,030 | 11,368 | 57,251 | 387,105 | 510,753 |
| 3160 | | 3,996 | 3,159 | 0 | 5,787 | 12,941 |
| 3170 | | 28,918 | 19,775 | 2,000 | 90,377 | 141,071 |
| 3181 | | 51,295 | 14,937 | 0 | 0 | 66,233 |
| 3182 | | 32,583 | 3,098 | 0 | 36 | 35,717 |
| 3191 | | 22,493 | 2,542 | 0 | 1,323 | 26,358 |
| 3192 | | 66,180 | 1,868 | 1,000 | 33,105 | 102,153 |
| 3201 | | 48,294 | 28,225 | 3,190 | 79,150 | 158,859 |
| 3203 | | 29,006 | 9,643 | 15,000 | 4,690 | 58,340 |
| 3204 | | 7,060 | 2,461 | 1,000 | 0 | 10,522 |
| 3211 | | 15,269 | 3,287 | 0 | 11,212 | 29,768 |
| 3212 | | 252,115 | 13,969 | 59,000 | 105,483 | 430,567 |
| 3231 | | 12,054 | 4,731 | 57,138 | 30,400 | 104,323 |
| 3233 | | 9,154 | 14,467 | 0 | 269,325 | 292,947 |
| 3234 | | 54,320 | 23,834 | 69,276 | 654,648 | 802,077 |
| 3240 | | 130,675 | 25,666 | 36,000 | 13,870 | 206,211 |
| 3250 | | 132,016 | 4,534 | 1,000 | 41,503 | 179,053 |
| 3261 | | 1,187 | 268 | 0 | 5,205 | 6,660 |
| 3262 | | 30,487 | 1,879 | 1,289 | 0 | 33,655 |
| 3291 | | 103,161 | 8,693 | 110,000 | 112,580 | 334,434 |
| 3220 | **Sri Lanka** | 42,584 | 2,754 | 4,052 | 4,075 | 53,465 |
| 3271 | **Pakistan** | 8,137 | 30,036 | 0 | 10,500 | 48,673 |
| 63 | **(former 3272)** | 929 | 881 | 0 | 0 | 1,810 |
| 64 | **(former 3281)** | 1,895 | 2,715 | 1,000 | 1,050 | 6,661 |
| 65 | **(former 3282)** | 458 | 1,046 | 0 | 0 | 1,504 |
| 3292 | | 50,724 | 19,625 | 30,001 | 86,242 | 186,593 |


*** Undistricted**


நீங்கள்
ஒரு மரத்தை
வளர்த்தால் ...
இயற்கை
உங்களை
வளர்க்கும் ...
Rotary
END POLIO NOW
THE MAGIC OF ROTARY
உங்கள் சேவையில்,
Rtn.AKS. Dr.K. ஸ்ரீநிவாசன்,
ரோட்டரி திருச்சிராப்பள்ளி,
RID 3000, மண்டலம் 5.
ADVT.



# உணவுகள் பல விதம்

LBW



**TCA ஸ்ரீனிவாச ராகவன்**

வட இந்தியா, அல்லது குறைந்த பட்சம் ஆக்ராவின் வடக்கே இருக்கும் பகுதி, பல உணவுகளை கண்டுபிடித்துள்ளது, குறிப்பாக 1947 பிரிவினைக்குப் பிறகு. பட்டர் சிக்கன், குல்சா அ லா ஆலூ, அதாவது ஸ்டஃப்டு குல்சாக்கள். 1962 போரில் நம்மை வீழ்த்திய சீனர்களுக்கு எதிராக பழிவாங்கும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்ட சோவ் மெய்ன் அவெக் தட்கா. (அவெக் என்றால் பிரெஞ்சு மொழியில் உடன் என்று பொருள்). தில்லியில் உள்ள காபி ஹவுஸின் ஸ்பெஷாலிட்டியான கீமாவுடன் ஸ்டஃப் செய்யப்பட்ட தோசைகள். அந்த உணவகத்தை நடத்திய கேரளவாசிகளுக்கு அவர்களின் கொத்து பரோட்டாக்களை அது நினைவூட்டியது என்று நினைக்கிறேன். 1980களில் இந்தியன் ஏர்லைன்ஸ் இட்லியில் கீமாவை ஸ்டஃப் செய்ய முயற்சித்ததாக ஒரு நண்பர் என்னிடம் கூறினார்.

இது ஒரு நீண்ட பட்டியல், இதில் நீங்களும் சில பொருட்களை சேர்க்கலாம் என்று நான் நம்புகிறேன். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் (பட்டர் சிக்கன் போன்றவை) இது கோர்மே உணவு பரிசோதனையாக இருக்காது. தேவைதான் கண்டு பிடிப்பின் தாய் என்ற பழைய பழமொழிக்கு இது மிகவும் எளிமையான சான்றாகும். எனக்கு மிகவும் பிடித்தது பன் ஆம்லெட். இது ஒரு சூப்பர் பாஸ்ட் ஃபுட், தெரு வண்டியில் சுமார் இரண்டு நிமிடங்களில் தயாரிக்கப்படும். நாங்கள் டெல்லி பல்கலைக்கழகத்தில் மாணவர்களாக இருந்தபோது எங்கள் ஆபத்பாந்தவனாக இருந்தது. அது இரண்டு முட்டைகளை அடித்து, துருப்பிடித்த டப்பாவில் இருந்து எடுக்கப்பட்ட டால்டாவின் ஒரு சிறிய ஏரியில் வறுத்தெடுக்கப்பட்டது. வெங்காயம் கூடுதல் ரூபாய்க்கு கொடுக்கப்பட்டாலும், ஒரு பெரிய கரண்டி போல்சன் வெண்ணெய் இலவசம். ஒரு ரூபாய்க்கும் குறைவான விலையில் ஒரு முழுமையான உணவு. கார்போஹைட்ரேட், கொழுப்பு மற்றும் புரதம் அனைத்தும் சுமார் 50 பைசாவுக்கு. அது பூமியில் ஒரு சொர்க்கம்.


இந்த சொர்க்கத்தைப் பெறக்கூடிய மற்றொரு இடம் ஜான்சிக்கும் போபாலுக்கும் இடையே உள்ள பினா ரயில்வே நிலையம். காலை 7 முதல் 10 மணிக்குள் செல்லும் ரயில்கள் சுமார் 30 நிமிடங்கள் காலை உணவுக்காக அங்கே நிறுத்தப்பட்டது. பிளாட்பாரத்தில் ஒரு நடுத்தர அளவிலான உணவறை இருந்தது, ரயில் காத்திருக்க, அங்கு நீங்கள் சென்று ஒரு முறையான காலை உணவை உட்கொள்ள முடியும். அந்த உணவகம் உங்கள் விருப்பப்படி முட்டைகள் கொண்ட தரமான காலை உணவுகளை தயாரித்தது இலவச டோஸ்டுடன் வழங்கியது. விலை ஒரு ரூபாய். ஆனால் அங்கே பன்கள் கொடுக்கப்படவில்லை. ரயில்வேயின் கற்பனை அவ்வளவு தூரம் நீடிக்கவில்லை. டெல்லியில் உள்ள நிஜாமுதீன் ஸ்டேஷன் உணவகத்தில் காலை உணவான பூரி-ஆலு, நானும் என் சகோதரனும் எங்களுக்குள் வைத்திருந்த ரகசியம்.

ஆனால் வட இந்திய ரயில் நிலையங்கள் இந்தியாவின் மற்ற இடங்களிலிருந்து நெருங்கிய போட்டியைக் கொண்டிருந்தன. கர்ஜத் மற்றும் கோத்ராவின் போண்டாக்கள், பரோடா ஸ்டேஷனுக்கு வெளியே உள்ள உசல் பாவ், விஜயவாடா ஸ்டேஷனின் சாப்பாட்டு அறையில் உள்ள பிரமாண்ட வடைகள், மதுரை ஸ்டேஷனில் உள்ள கிச்சடி என அனைத்தும் பயணிகளின் கவனத்தை ஈர்க்க போட்டியிட்டன. இந்த சிறப்பு அறிவைப் பெற, நீங்கள் அடிக்கடி ரயிலில் பயணிப்பவராக இருக்க வேண்டும். அடிக்கடி பறப்பவர்கள், ரயிலில் பயணிப்பவர்கள் போலல்லாமல், இந்திய உணவு வகைகளின் மனதைக் கவரும் பன்முகத்தன்மையை இழக்கிறார்கள். இந்த மகிழ்ச்சியைப் பற்றி நான் என் மனைவியிடம் கூறும்போது, அதன் சுகாதாரமின்மைதான் சுவையை கூட்டுகிறது என்றார். அவர் சொல்வது சரிதான் என்று நினைக்கிறேன். இன்று ரயில் நிலையங்கள் சலிப்பூட்டும் இடங்களாக மாறியுள்ளன, காரணம் பெரிய கூட்டமும் அங்கே உணவு எதுவும் கிடைக்காத நிலையும்தான்.

1975-ம் ஆண்டு வரை ரயில்களில் கூட உயர்தர உணவுகளை பெற்றோம். முன்பெல்லாம் ரயில்களில் சமையலறை பெட்டிகள் இருந்தன, அங்கே தயாரிக்கப்பட்ட உணவுகளை உங்கள் மேஜையில் கொண்டு வந்து பரிமாறுவார்கள். கூடுதலாக, பணியாளர்கள் சுத்தமான சீருடையில் இருந்தனர். முறையான பிங்கான் பாத்திரங்கள் மற்றும் ஸ்டீல் கட்லரிகளில் இருந்து ஐந்து கோர்ஸ் உணவை உண்பதை கற்பனை செய்து பாருங்கள், அதே நேரத்தில் இந்தியா அதன் முழு மகிமையுடன் ஜன்னலில் உங்களை கடந்து சென்றுக் கொண்டிருக்கும். ஆனால் இதற்கு ஒரு தந்திரம் இருந்தது. அது காலை உணவை சீக்கிரமாக சாப்பிடுவதை தவிர்ப்பதாகும், இல்லையெனில் தண்டவாளத்தின் அருகே காலை சடங்குகள் செய்யப்படுவதை நீங்கள் காணலாம். அன்றைய இந்தியா ரயில்களுக்கு உள்ளேயும், பாரதம் வெளியேயும் இருந்தது. இருவரும் ஒருவரையொருவர் சீண்டாமல் அமைதியாகச் சென்றனர்.■



**Rotary**
**District 3212**



THE MAGIC OF ROTARY

# Yadhumanaval

## 100 PROGRAMS

## EMPOWERING GIRLS

Rotary strongly encourages partnership with like-minded Institutions and Corporates which support Rotary's Programmes. Empowering girls has been a major focus of Rotary in the recent years.

Therefore the coming together of Rotary District 3212 and IDHAYAM, to empower young adults through a confidence building Programme specially designed by an illustrious life skills facilitator, Dr. Jayanthasri Balakrishnan, titled "Yadhumanaval", is a great blessing indeed.



*Jayanthasri Balakrishnan*

" SHE PAVES A PATH FOR GIRL CHILDREN TO BECOME STRONGER VERSIONS OF THEMSELVES THROUGH HER MESMERIZING TALK. "

No. of Occurrences
**100**

No. of Beneficiaries
**1,29,660**

### Get in Touch

Yadhumanaval
Project Chairman
Rtn D.Vijayakumari
+91 94887 66388

**IDHAYAM**
PROMISE OF HEALTH AND HAPPINESS

LEKHA ads/Jan 25/Rotary/BIW

ADVT.

Registered No. TN/CCN/677/2025-2027 | Total number of pages in this monthly issue, including cover, 84. Price: ₹40
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP/611/25-27
Regd with RNI TNTAM/2018/76372. Rotary News Tamil Published 1st week of every month. Posted at Egmore RMS Patrika Channel. Date of posting: 9–15 every month.



ADVT.